Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2278)

முரசு – 03 | திருவள்ளுவர் ஆண்டு 2044 | மாசி 01 | புதன்கிழமை (13.02.2013) | பக்கங்கள் 20 | ஓசை – 136



06



10



11



17



18

# உங்கள் பிள்ளைகள் நாளையே விடுதலை

## மாணவர்களின் பெற்றோரிடம் ஜனாதிபதி



**தடுத்துவைக்கப்பட்ட யாழ். பல்கலை மாணவர்களின் தாய்மார் கண்ணீர்மல்க ஜனாதிபதியிடம் விடுத்த கோரிக்கைக்கு எந்தவித தாமதமுமின்றி நாளையே அந்த இரு மாணவர்களுமு விடுவிக்கப் பட்டுவிடுவர் என்று பதிலளித்தார் ஜனாதிபதி.**

கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யாழ். பல்கலைக்கழகத்தின் இரு மாணவர்களையும் உடனடியாக விடுவிப்பதற்கு ஜனாதிப்தி உறுதியளித்துள்ளார். யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஜனாதிபதி தலைமையில் நேற்று யாழ். ரில்கோ ஹோட்டலில் இடம்பெற்றபோதே ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் இக்கூட்டத்திற்கு வருகைதந்த மேற்படி மாணவர்களின் பெற்றோர் தமது பிள்ளைகளை விடுவிக்குமாறு கண்ணீர் மல்க ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர். எவ்வளவு காலமாக இந்த மாணவர்கள் சிறையில் இருப்பதாக ஜனாதிபதி பெற்றோரிடம் வினாவினார். இரண்டரை மாதங்கள் என்று பெற்றோர் பதில் வழங்கினர். உடனடியாகவே வேறு எந்த கேள்வியும் கேட்காமல் உங்கள் பிள்ளைகள் நாளைக்கே உங்கள் வீட்டுக்கு வருவார்கள் என்று கூறியதும் மாநாட்டு மண்டபத்தில் இருந்த அனைவருமு கரகோஷம் செய்து ஜனாதிபதியின் அறிவிப்பை வரவேற்றனர். அந்த மாணவர்களின் பெற்றோர் ஆனந்தக்கண்ணீர் விட்டு மகிழ்ச்சியில் மிதந்தனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## பொதுநலவாய மாநாடு கொழும்பிலேயே நடக்கும்

### கமலேஸ்சர்மா உறுதி

(கொழும்பு)

திட்டமிட்டபடி பொதுநலவாய நாடுகளின் மாநாடு இலங்கையிலேயே நடாத்தப்படும் என்று பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஸ்சர்மா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த சில நாட்களாகத் தங்கியிருந்து நிலைமைகளை ஆராய்ந்த கமலேஸ் சர்மா நேற்று நாடாளுமன்றத்திற்கு விஜயம் செய்தார்.

சபாநாயகர் சமல்ராஜபக்ஷவை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் சந்தித்துப் பல்வேறு விவகாரங்கள் குறித்து


19 ஆம் பக்கம் பார்க்க

## முழங்காவில் பிரதேசத்துக்கு நேற்று முதல் தடையற்ற மின்சாரம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் முழங்காவில் பிரதேசத்திற்கு நேற்று முதல் மின்சார விநியோகம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கிறது. 560 இலட்சம் ரூபா செலவில் விடத்தல் தீவிலிருந்து முழங்காவில் பிரதேசத்திற்கு 29 கிலோ மீற்றர் உயரழுத்த மின்சாரம் கொண்டுவரப்பட்டு முழங்காவிலிருந்து ஒரு மின்மாற்றியுடன் 3.1 கிலோ மீற்றர் தாழமுத்த

19 ஆம் பக்கம் பார்க்க



## அதிநவீன மின்சார நிலையம் ஜனாதிபதியால் திறந்துவைப்பு



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று காலை 9.30 மணியளவில் சுன்னாகத்தில் அமைந்துள்ள புதிய மின்பிறப்பாக்கிகளை உத்தியோகபூர்வமாக இயக்கி குடாநாட்டுக்கான தடங்கலற்ற மின்சார விநியோகத்தை ஆரம்பித்து

19 ஆம் பக்கம் பார்க்க

## எந்த தடை வந்தாலும் அதையும் தாண்டி "யாழ்தேவி" காங்கேசன்துறைவரை வரும்

### ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பதிலளித்தார் ஜனாதிபதி

(யாழ்ப்பாணம்)

எந்தத் தடைகள் வந்தாலும் அவை அனைத்தையும் தாண்டி அந்தத் தடைகளையும் உடைத்துக்கொண்டு யாழ்தேவி புகையிரத சேவை காங்கேசன்துறை வரைக்கும் நடாத்தப்படும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று யாழில் நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் யாழ் தேவி புகையிரத சேவை தொடர்பாக வலி. வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சுகிர்தன் ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பினார். வலி. வடக்குப் பகுதிக்கூடாகச் செல்லும் புகையிரதப் பாதையில் பாதுகாப்பு வேலிகளும் அரண்களும் குறுக்கறுத்துக் காணப்படுகின்றன. இதனால புகைவண்டி காங்கேசன்துறைக்கு வருமா என்பதில் சந்தேகம் ஏற்பட்டிருப்பதாக சுகிர்தன்

19 ஆம் பக்கம் பார்க்க

## சரவணபவன் எம்.பி. மீது வழக்குத் தாக்கல் செய்ய முடிவு

### யாழ். கட்டளைத் தளபதி நடவடிக்கை

'உதயன்' பத்திரிகை நிறுவனத்தின் முகாமைத்துவப் பாணிப்பாளரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ஈ.சரவணபவனுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கொன்றைத் தாக்கல் செய்யவுள்ளதாக யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க நேற்று முன்தினம் தெரிவித்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

# வலிகாமம் கிழக்கு வீதிகளை புனரமைக்க உடன் நடவடிக்கை



வலி.கிழக்கு பிரதேசத்தில் மிகவும் சேதமடைந்த நிலையில் காணப் படும் ஆறுவீதிகள் நகர எழுச்சித் திட்டத்தின் கீழ் புனரமைக்க ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

உரும்பிராய் சனசமூக நிலைய வீதி (1.5கி.மீ), நீர்வேலி வீரப் புரம் போயிட்டி குறுக்கு வீதி (1.5கி.மீ) அச்சுவேலி பயிற்றோலை வீதி(1.5கி.மீ) கோப்பாய் இளங்கண்டிவீதி (2.5கி.மீ), சிறுப்பிட்டி கலையொளி வீதி (1.5கி.மீ), உரும்பிராய் வாகையடிவீதி (1.3கி.மீ) ஆகிய வீதிகளை நேரில் சென்று பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் இவ்வீதிகளை புனரமைக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் கோப்பாய் பிரதேச பயிற்றோலை வீதியை சென்று பார்வையிட்டு அவ்வீதி மக்களுடன் கலந்துரையாடினார். இதன்போது கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் இப்பிரதேச மக்கள் பயன்படுத்தும் இவ்வீதிகள் மிகமோசமான நிலையில் காணப்படுவதுடன் கடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மக்கள் தமது வாழ்வாதார முயற்சிகளில் ஈடுபடும் போது தாம் துன்பங்களை எதிர்கொள்வதாகவும் வாழைக் குலைகளுடன் செல்லும் போது குண்டும் குழியுமான வீதியில் விழுந்து சிரமத்தை எதிர்கொள்வதாகவும் தெரிவித்தனர். எனவே இவ் வீதிகள் மக்களின் நலன் கருதி புனரமைக்க நடவடிக்கை எடுத்துள்ளேன். மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதேசசபை தலைவர்கள் பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளைப் புனரமைக்க அரசினால் நிதி ஒதுக்கப்படும் சந்தர்ப்பங்களில் வீதி புனரமைப்பினை கருத்திற்கொள்ளாது அவற்றிற்கான முன்மொழிவுகளை அனுப்பிவைக்காத நிலையில் குறித்த நிதிதிரும்பிச்செல்லும் நிலைக்குள் தள்ளப்படுகிறது. இவ்வாறான செயற்பாடுகளையுடைய பிரதேசபைத் தலைவர்களை தெரிவு செய்த மக்களும் தலைகுனிய வேண்டிய நிலைக்குள் தள்ளப்படுகிறார்கள். எனவே அபிவிருத்திச் செயற்பாடுகளின் போது எமது மக்களுக்கு அத்தியாவசியமானவற்றிக்கு முன்னுரிமை வழங்கி செயற்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில், வலி.கிழக்கு பிரதேசசபை செயலாளர் திருமதி.ஜெயந்தா சோமராஜ், வலி.கிழக்கு பிரதேசசபை எதிர்க் கட்சித்தலைவரும், ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச அமைப்பாளருமான ஜங்கரன், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மறுசீரமைப்புப் பணியில் புதிய வலயக் கல்விப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குப் புதிய வலயக்கல்விப் பணிப்பாளராக கடந்த ஜனவரி மாதம் கடமையேற்றுக் கொண்ட செ.சந்திரராஜா வலயக்கல்விப் பணிமனையினை மறுசீரமைப்புச் செய்யும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறார்.

பணிப்பாளர் அலுவலகத்தைக் கவின் நிலைப்படுத்துவதிலும் தன்னைச் சந்திக்க வரும் அதிபர், ஆசிரியர்களை ஒழுங்கு முறையில் சந்தித்துக் கலந்துரையாடுவதிலும் கூடிய கவனம் செலுத்தி வருகிறார். இதற்காகத் தனது காரியாலயத்திலும் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் காரியாலயத்திலும் 5S முறைமையினை நடைமுறைப் படுத்தியுள்ளார்.

கல்விப் பணிமனையின் சகல ஆண், பெண் உத்தியோகத்தர்களும் சீருடை அணிய வேண்டும் என்ற நடைமுறையினை மேற்கொண்டுள்ளார். ஆண் உத்தியோகத்தர்கள் வெள்ளை நிற முழுக்கை சேட்டும், கறுப்பு நிற முழுக்காற்சட்டையும் அணிய வேண்டும் எனப் பணித்துள்ளார். பெண் உத்தியோகத்தர்கள் ஒரேவிதமான, ஒரே நிறத்தையுடைய சாறி அணிய வேண்டும் எனவும் பணித்துள் ளார். உத்தியோகத்தர்கள் உரிய நேரத்திற்கு கடமைக்கு வருதல், உரிய நேரத்திற்கு கடமை முடித்தல், சேவை பெறுநர்களை அன்போடும், மதிப்போடும் நடத்துதல் தொடர்பிலும் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். ஆசிரிய ஆலோசகர்கள், பாட உதவிக்கல்விப் பணிப்பாளர்களுக்கு தனித்தனியிடங்கள் ஒதுக்குவதற்கும், பழைய மேசைகள், கதிரைகளை அப் புறப்படுத்தி காரியாலய மேசை, கதிரைகளை பயன்படுத்துவதற்கான நிதி ஏற்பாடுகளையும் செய்துள்ளார்.

முக்கியமாக வலய, கோட்ட ரீதியிலான பாடசாலை வெளிவாரி மதிப்பீட்டுத் திட்டங்களை வகுத்து வினைத்திறன் மிக்க மேற்பார்வைத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்தியுள்ளார்.

இந்த மேற்பார்வைத் திட்டத்தின் மூலம் முன்னோடியான ஆரம்பப் பாடசாலைகளையும், இடைநிலைப் பாடசாலைகளையும் (IAB) உருவாக்கத் திட்டமிட்டுள்ளார்.

இந்த வேலைத்திட்டம் இந்த மாதம் முதலாம் திகதி முதல் இந்த வலயத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. இத்தகைய மறுசீரமைப்புப் பணிகள் ஊடாக வலிகாமம் கல்விவலயத்திலிருந்து நகர்ப்புறப்பாடசாலை நோக்கிப் படையெடுக்கும் மாணவர்களைக் கட்டுப்படுத்த முடியும் எனப் புதிய வலயக் கல்விப்பணிப்பாளர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (06)

# வீதி அகலிப்பு தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கந்தப்பசேகரம் வீதி, அகலிப்பு தொடர்பாக நாளை பிற்பகல் 3.30 மணிக்கு 165, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள வர்த்தக சங்க தலைமைக் காரியாலயத்தில் தலைவர் இ.ஜெயசேகரன் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

கந்தப்பசேகரம் வீதி, ஆஸ்பத்திரி வீதி (கந்தப்பசேகரம் வீதிக்கு சமாந்தரமாகவுள்ள) கடை உரிமையாளர்கள், காணி உரிமையாளர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

இக்கலந்துரையாடலுக்கு மாநகரசபை உத்தியோகத்தர்களும், வர்த்தக சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொள்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மெய்வல்லுநர் போட்டி

(ஆவரங்கால்)

ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (03,08)



நவாலி வீதி, முதலாம் ஒழுங்கை ஆனைக்கோட்டையைச் சேர்ந்த மகளிர் குழுக்களுக்கான சுயதொழில் கடன் வழங்கும் வைபவம் சுன்னாகம் பிரதேச அபிவிருத்தி வங்கி முகாமையாளர் எஸ். லட்சுமணசர்மா தலைமையில் இடம்பெற்றது. இதன்போது மகளிர் ஒருவருக்கு சுயதொழில் கடன் வழங்கப்படுவதைக் காணலாம். (08)

# தமிழ்த்தினப் போட்டிகளை வடமராட்சியில் நடத்த ஏற்பாடு

(வடமராட்சி)

பாடசாலைகளுக்கு இடையே வருடாவருடம், நடைபெற்று வரும் தமிழ் மொழித்தினப் போட்டிகளை மாவட்ட மட்டத்தில் நடத்தும் பொறுப்பினை இம்முறை வடமராட்சி கல்வி வலயம் பெற்றுள்ளது.

வடமாகாணக் கல்வியமைச்சில் நடைபெற்றிருந்த வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கான கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட மட்டப் போட்டிக்கு முன்னோடியாக பாடசாலை மட்டப் போட்டிகளை 28.02.2013 ஆம் திகதிக்கு முன்னரும், கோட்டமட்டப் போட்டிகளை 17.03.2013 ஆம் திகதிக்கு முன்பும், வலயமட்டப் போட்டி களை மார்ச் 23, 24 ஆம் திகதிகளுக்கு முன்பும் நடத்தி முடிக்கும்படி வலயக் கல்விப் பணிப்பாளர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மாவட்ட மட்டப் போட்டிகளது இடம், திகதி என்பன பின்னர் அறிவிக்கப்படவுள்ளன. (06)



சுவாமி விவேகானந்தாவின் 150 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு அகில இலங்கை இந்துஸ்வயம் சேவா கங்கத்தினால் கொழும்பு நாரஹன்பிட்டி சாலியா மைதானத்தில் 10.02.2013 அன்று நடத்தப்பட்ட அகில இலங்கை இந்து சமுதாய மாநாட்டிற்கு உடுவில் பிரதேசத்திலிருந்து சென்றிருந்த மேற்படி சங்கத்தின் உடுவில் பிரதேச இணைப்பாளர் என்.பி. ஸ்ரீந்திரன், தலைவி க.சிவயோகராணி ஆகியோரையும் அங்கு சென்றிருந்த இப்பிரதேசத்தின் இந்துக்களையும் காணலாம். (06)

# சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி தமிழ்ச் சங்கம் நிகழ்த்தும் 'முத்தமிழ் விழா 2013' நிகழ்வு எதிர்வரும் 16 ஆம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே மேற்படி நிகழ்வை முன்னிட்டு ஊடகவியலாளர் சந்திப்பொன்று இன்று மாலை 5.00 மணிக்கு கல்லூரி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.


## சிறு விளம்பரம்

### வீடு விற்பனை

சுதுமலை தெற்கில் நல்ல சூழலில் உள்ள வீட்டுடன் காணியும் விற்பனைக்கு உண்டு. வாங்குவோர்வசதிக்கேற்ப காணியில் சிறுபகுதியும் கொடுக்கமுடியும்.

தொடர்பு - க.சீவறட்ணம்
(சிவராசா)
றியிஸ்ரார் சம்பந்தர்
ஒழுங்கை சுதுமலை தெற்கு. (R/164)

# தமிழ்ச் சங்கத்தின் முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியில் தமிழ்ச் சங்கம் நடத்தும் முத்தமிழ் விழா எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு, யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன், மாகாணக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், இலங்கை தமிழ் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன், யாழ்.சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ் உரிமையாளர் க.அருள்நேசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் 'மகிழம்' நூல் வெளியீட்டுவிழாவும் இடம்பெறஉள்ளதுடன், நூலின் முதற்பிரதியை தொழில் அதிபர் இ.ச.பே.நாகரத்தினம் பெற்றுக்கொள்வார்.

இந்நிக்ழ்வில் லி.அனுருத்திரனின் நெறியாள்கையில் கல்லூரி மாணவர்களின் கிராமிய நடனம், யாழ்.தமிழ்ச் சங்க பொதுச் செயலாளர் இரா.செல்வவடிவேலின் சிறப்புரை, யாழ்.மத்திய கல்லூரி கலை மாணவர் மன்றத்தின் 'இருளை நீக்கி' நாடகம், 'காலச்சுழற்சி காவுகொண்ட கலாசாரம்' என்னும் விடயம்பற்றி கவியரங்கம் கவிஞர் ம.பா.மகாலிங்கசிவம் தலைமையில் நடைபெறவுள்ளதுடன் விவாதமும் நடைபெறவுள்ளது.

# பாடசாலை தவிர்ந்த நிகழ்வுகளில் மாணவரை ஈடுபடுத்த அனுமதி தேவை

## – வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்து

பாடசாலை கல்விசார் செயற்பாடுகள் தவிர்ந்து ஏனைய பிறநிகழ்வுச் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்த வேண்டுமெனில் வலயத்தில் அனுமதி பெறவேண்டும் என வடமாராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட மருதங்கேணி, கரவெட்டி, பருத்தித்துறை போன்ற கோட்டமட்ட பாடாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களை கிராம மட்டங்களில் நடைபெறும் நிகழ்வுகளில் பாடசாலை ரீதியாக கலந்து கொள்வதோ மற்றும் ஈடுபடுத்துவதோ மாணவர்களிடமிருந்து பணம் வசூலித்தல் போன்றதான செயற்பாடுகளுக்கு கோட்டக்கல்விப் பணிப்பாளர்களோ, அதிபர், ஆசிரியர்களோ அனுமதி வழங்கக்கூடாது.

அப்படியும் அனுமதி வழங்குவதாக இருந்தால் வலயக் கல்விப்பணிப்பாளரின் ஆலோசனை பெற்றதன் பின்னர்தான் அனுமதி வழங்கவேண்டும்

இது தொடர்பாக ஏற்கனவே பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது. ஆனாலும் வல்வெட்டித்துறைப் பகுதியில் இயங்கும் பாடசாலை ஒன்றினால் கிராமமட்ட கலை நிகழ்வுக்கு மாணவர்களை அழைத்து ஈடுபடுத்தியதாக குறித்த மாணவர்களின் பெற்றோர்கள் விசனமடைந்து முறையிட்டுள்ளனர். இதனையடுத்து குறித்த பாடசாலை அதிபரை விசாரித்து எச்சரித்து விடப்பட்டுள்ளது.

எனவே பாடசாலை ரீதியாக மாணவ, மாணவிகளை கிராம மட்டத்தில் நடைபெற்றுவரும் கலை கலாசார நிகழ்வுகக்கும் பாடசாலை நற்பெயரை பயன்படுத்தியோ அல்லது அரச சார்பற்ற நிறுவனத்தினால் ஏதேனும் காரணத்தை முன்வைத்தோ பணம வசூலித்தல் போன்ற செயற்பாடுகளுக்கு மாணவ, மாணவிகளை ஈடுபடுத்துவதன் மூலம் கல்வி நிலை பாதிப்படைந்து வருவதுடன், மன உளைச்சல்களுக்கு ஆட்பட்டுவருவதாக மாணவர்களின் பெற்றோர்களால தெரிவிக்கப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (116)



டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் - பொம்மைவெளி புதிய சோனக தெருவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஜே.87 கிராம சிவில் பாதுகாப்பு குழு அங்கத்தவர்களுடன் பொறுப்பான பொலிஸ் அதிகாரி மற்றும் மக்கள் ஈடுபடுவதனைக் காணலாம். (105)

# முஸ்லிம் மக்கள் மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து மீள் குடியேறியுள்ள முஸ்லிம் மக்கள் யாழ்.மாநகரசபை உறுப்பினர்களிடம் மகஜர் கையளித்துள்ளார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை பகல் ஜும்மா தொழுகையின் பின்னர் யாழ்.பெரிய பள்ளிவாசலில் மாநகரசபை உறுப்பினர்களான பி.எஸ்.சரபுல் அனாம், எம்.எம்.முஸ்தபா ஆகியவர்களிடம் கையளித்துள்ளனர்.

மக்கள் பணிமனையில் வைத்து உறுப்பினர் பி.எஸ். சுபியானிடமும் கையளித்த அதேசமயம், பிரதி மேயர் எம்.எம்.ரமீஸ் அஸ்கர் ருமி ஆகியவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

எட்டு அம்ச கோரிக்கையை முன்வைத்து, மக்கள் கொடுத்த மகஜரை தீர்க்காவிட்டால் பதவியை விலகுமாறு மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களைக் கேட்டுள்ளார்கள். (105)

# கிளிநொச்சியில் மீண்டும் மழை; அறுவடையை கைவிடும் நிலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினம் முதல் மீண்டும் மழை பெய்துவருவதனை அடுத்து நெல் அறுவடைக்குட்படுத்தப்படாத பகுதியின் நெல் அறுவடை மேலும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இவ்வாறு நெல் அறுவடையின் போது மழை பெய்ததன் காரணமாக அந்தப் பகுதிகளில் நெல் அறுவடை பாதிக்கப்பட்டிருந்தது. இருந்தும் விவசாயிகள் நெல் அறுவடையில் ஈடுபட்டிருந்தனர்.


நெற்பயிர்கள் வெள்ள நீரில் சாய்ந்துள்ளதுடன் இயந்திரம் மூலமாக நெல்லை அறுவடை செய்ய முடியாத நிலை தோன்றியிருந்தது.

மனித வலுவைப் பயன்படுத்தியே அறுவடை நடைபெற்று வந்தது. சிலபகுதிகளில் இயந்திரங்கள் மூலம் அறுவடை மேற்கொள்ளப்பட்டபோதும், அதிலும் விவசாயிகள் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரியவருகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் முதல் அந்தப் பகுதிகளில் மழைபெய்து வருகின்றமை மேலும் எஞ்சிய நெல் அறுவடையைப் பாதித்துள்ளது. சில விவசாயிகள் நெல் அறுவடையைக்கைவிடும் நிலையை அடைந்திருப்புதாகவும் தெரியவருகிறது.

வங்கிகளில் நகைகளை அடைவுவைத்தும், கடன்களைப் பெற்றும் நிதியைச் செலவழித்து மேற்கொள்ளப்பட்டிருக்கும் நெல் உற்பத்தியின் மூலம் நெல் அறுவடை எதிர்பார்த்த அளவு கைகூடாததன் காரணமாக அப்பகுதி விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். (பா)

# சாதனை மாணவிகளின் அனுபவப் பகிர்வு



## மரிய எட்மன் றாஜ்குமார் இனிதா

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை
வர்த்தகப்பிரிவு
வர்த்தகம் A
கணக்கியல் A
பொருளியல் A
மாவட்டநிலை - 70

எனது குடும்பம் சாதாரண நிலையில் இருந்தாலும் என்னைக் கற்பிக்க வேண்டும் என்ற ஆசையுடன் உயர்தரம் வரை சிறந்த பெறுபேற்றை பெற உறுதுணையாக இருந்த எனது பெற்றோருக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் நான் சிறந்த பெறுபேற்றை பெறுவதற்கு என்னுடன் அயராது உழைத்த அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பாடசாலையில் கல்விச் செயற்பாடுகள் மட்டுமின்றி இணைப்பாடவிதான செயற்பாடுகளும் அவசியமாகின்றன.

அந்த வகையில் நான் விளையாட்டுத்துறையில் ஈடுபட்ட வேளையிலும் கல்வித்துறையை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு 'எமது அதிபர், ஆசிரியர்கள் உறுதுணையாக இருந்துள்ளனர். நான் எதிர்காலத்தில் சமூகத்திற்கு சேவையாற்ற விரும்புகிறேன்.



## தர்மராஜா பிரியதர்சினி

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை
உயிரியல் பிரிவு (ஆங்கிலமொழி)
உயிரியல் A
இரசாயனவியல் A
பௌதீகவியல் A
மாவட்டநிலை - 12

என் ஆரம்பக்கல்வி முதல் உயர்தரம் வரையிலான கல்வியில் எனக்கு உறுதுணையாக இருந்த எனது பெற்றோர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் அனைவருக்கும் நான் எப்பொழுதும் நன்றியுடையவளாக இருப்பேன்.

பல்வேறு கஷ்டங்களின் மத்தியிலும், உறுதுணையாக இருந்து இந்நிலையை அடையக் காரணமாக அமைந்த என் பெற்றோரின் ஆசையை நிறைவேற்றியதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

மேலும் என்னாலான சேவைகளை எனது ஊருக்கு வழங்க ஒரு சிறந்த வைத்தியராக வேண்டும் என்ற முனைப்போடு என் பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர விரும்புகிறேன்.



## பாலகிருஷ்ணன் அனுஷியா

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
கலைப்பிரிவு
அளவையியலும் விஞ்ஞானமுறையும் A
தமிழ் B
புவியியல் B
மாவட்டநிலை - 16

நான் திறமையாகப் படித்து சித்தி பெற்றமைக்கு உறுதுணையாக இருந்த எனது பெற்றோர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனது பெற்றோர்கள் எனக்கு கொடுத்த ஊக்கத்தினாலும், பாட ஆசிரியர்கள் என்னில் கவனம் செலுத்தி படிப்பித்தமையும் எனது விடா முயற்சியினாலும் தன்னம்பிக்கையினாலும் இவ்வெற்றியை என்னால் அடைய முடிந்தது.

நான் தினமும் படித்த பாடங்களை தினசரி மீளப் படித்துக் கொள்வேன். எனது பாடத்திற்கு தேவையான புத்தகங்களை பாடசாலை நூலகத்திலிருந்து பெற்றுக் கொண்டேன்.

என்னில் அக்கறை செலுத்தி என் படிப்பிற்கு உதவி செய்த அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நான் எதிர்காலத்தில் சிறந்த ஆசிரியையாக வர விரும்புகின்றேன்.

நேர்காணல்: கே.கே.விசிந்தன்

இப்பொழுதே மகிழ்ச்சியாய் இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள். இன்னும் துன்பங்கள் வரக் காத்திருக்கின்றன. .- பிரேண்டர்ஜான்சன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## மக்கள் நலன்களில் அலட்சிய மனப்பாங்கு!

நேற்று நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பலவகைகளில் முக்கியத்துவம் பெற்றதாயிருந்தது. யாழ். அரசாங்க அதிபர் அங்கு பேசும்போது, "வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்வின் பின் எமது மாவட்டம் மேலும் பல முன்னேற்றங்களைக் காணும் என்ற நம்பிக்கை கூடியிருக்கிறது" என்று குறிப்பிட்டதைப் போலவே பலருக்கும் ஏற்படும் விதமாக கூட்டம் நிகழ்ந்தேறியது.

கூட்டத்திற்குத் தலைமை தாங்க நாட்டின் ஜனாதிபதி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பை ஏற்று வந்திருந்தார். யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தி தொடர்பான இந்தக் கூட்டத்தை மிக அக்கறையாகக் கருதி முக்கிய அமைச்சர்கள் பலரையும் அழைத்து வந்திருந்தார். அமைச்சர்கள் பஸில் ராஜபக்ச, ராஜித சேனாரத்ன, எஸ்.பி.திசாநாயக்க, திஸ்ஸ கரலியத்த ஆகியோரும், ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க, பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ச, இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய, பொலிஸ் மாஅதிபர் இலங்ககோன் மற்றும் பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சு செயலாளர்களும் வருகை தந்திருந்தனர்.

நாட்டின் அதிகாரமிக்க பகுதி முழுவதையும் ஜனாதிபதி யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவந்திருந்ததன் நோக்கம், இங்கு பல அபிவிருத்தி மாற்றங்களை உடனுக்குடன் முடிவெடுத்துச் செயற்படுத்துவதே. யாழ் மாவட்டத்தில் ஏற்கனவே திட்டமிடப்பட்ட பல அபிவிருத்தி வேலைகளின் தொடர்ச்சி எந்நிலையில் இருக்கிறது என்பது பற்றி, படங்களுடனும் நுணுக்க விபரங்களுடனும் கேள்விகள் எழுப்பி விசாரித்தறிந்து கொண்டார். அவை முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டியதையும், தெற்கிலுள்ள எல்லா வசதிவாய்ப்புகளுக்கும் சமமாக வடக்கின் தேவைகளும் நிறைவேற்றப்படும் என்பதையும் உறுதிப்படுத்தினார்.

நேற்றுவரை வீடுவிக்கப்படாதிருந்த யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் இருவரினதும் தாய்மார்கள், ஜனாதிபதியிடம் நேரிடையான வேண்டுகோள் ஒன்றை விடுப்பதற்காக கூட்டத்தில் அவர்களை அனுமதித்திருந்தார் அமைச்சர் டக்ளஸ். அந்தத் தாய்மார் எழுந்து தங்கள் புதல்வர்களை விடுதலை செய்யச் சொல்லுமாறு ஜனாதிபதியிடம் கண்ணீர் மல்க கேட்டனர். நாளையே உங்கள் பிள்ளைகள் விடுவிக்கப்பட்டு உங்களிடம் வந்துவிடுவார்கள் என்று சபையின் கரகோசத்திற்கிடையே உறுதியளித்தார் மகிந்த.

அந்தத் தாய்மார் மகிழ்ச்சியில் திக்குமுக்காடி, இனி அவர்கள் அரசுக்கெதிராக நடந்து கொள்ளாதவாறு நாங்கள் பார்த்துக் கொள்வோம் என்று தழுதழுத்துச் சொல்லினர். ஜனாதிபதி உடனேயே சொன்ன பதில், "நீங்கள் அரசுக்கு ஒன்றும் செய்ய வேண்டாம்; அவர்களை நன்றாகப் படிக்கச் சொல்லிச் சொல்லுங்கள்" என்றார். மீண்டும் சபையின் கரகோசம்.

அதுபோலவே, வலி. வடக்கின் தவிசாளர், ரயில் காங்கேசன்துறை வரை செல்லும் என்று சொல்கிறீர்கள். ஆனால் இடையில் பாதுகாப்புத் தரப்பின் வேலி போடப்படுகிறது, ரயில் காங்கேசன்துறைக்குச் செல்லாது என்று கூறப்படுகிறதே என்று கேள்வி எழுப்பினார். அதற்கும் உடனடியாகவே ஜனாதிபதி சொன்னார், தடைகளையும் உடைத்துக்கொண்டு ரயில் காங்கேசன்துறை வரை செல்லும் கவலைப்படாதீர்கள் என்று.

யாழ்ப்பாணத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளை முக்கியமாகக் கருதி, நாட்டின் தலைமை அத்தனை பேருடனும் வந்திருக்கும்போது, யாழ்.மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்பிக்கள் எங்கே என்ற கேள்விதான் பலரிடமும். அழைப்புக் கிடைத்து வினாயகமூர்த்தி எம்பி அங்கு சமூகமளித்திருக்கையில், மற்றவர்கள் அழைப்புக் கிடைக்கவில்லை என்று பொய்ச்சாக்கு சொல்லி விட்டு சொந்த அலுவல்களை மட்டும் ஜனாதிபதியிடம் தனியே சென்று சாதித்துக் கொள்வது, மக்கள் மீதும் அவர்களுக்கான அபிவிருத்திகள் மீதும் அக்கறை இல்லாத காரணம்தான் என்பது யாருக்கும் புரியாமலில்லை. - ஆசிரியர்

# தேசிய நெல்சந்தைப்படுத்தல் சபை வடக்கில் நெல் கொள்வனவு

(கொழும்பு)

வடமாகாணத்தில் அறுவடை செய்யப்படுகின்ற நெல்லை கொள்வனவு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய நெல் சந்தைப்படுத்தல் சபை அறிவித்துள்ளது.

தற்போது கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்யப்படுவதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் மு.ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் 14 வீத ஈரலிப்புடைய நெல்லை மாத்திரமே நிர்ணய விலையில் கொள்வனவு செய்கின்றது. இதன் காரணமாக நெல்லை உலர்த்தி களஞ்சிய சாலைகளுக்கு எடுத்து வருமாறு விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக களஞ்சியசாலைகளை திறந்துவைத்துள்ளது.

வடமாகாணத்தில் இம்முறை வழமையை விட அதிகளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக சந்தைப்படுத்தல் சபைக்கு கொண்டுவரப்படும் நெல்லின் அளவு குறைவடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# லலித், குகன் வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணத்தில் கடந்த 2011ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9ஆம் திகதி காணமற்போனதாகத் தெரிவிக்கப்படும் மக்கள் போராட்ட இயக்க உறுப்பினர்கள் லலித், குகன் ஆகிய இருவர் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று யாழ். நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மீண்டும் ஏப்ரல் மாதத்திற்கு வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்ற இந்த வழக்கு விசாரணையில் முன்னணி சோசலிச கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் ஆட்டிக்கல தனது வாக்குமூலத்தை வழங்கினார். இவரது வாக்கு மூலத்தை அடுத்து வழக்கு விசாரணை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதிக்கு யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவானால் ஒத்திவைக்கப்பட்டது. மனுதாரர் சார்பில் சட்டத்தரணி நுவான் கோபகே ஆஜராகியிருந்தார்.

லலித், குகன் ஆகிய இருவரும் கடந்த 2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 09ஆம் திகதி மனித உரிமை தினத்தில் யாழ். நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு ஆவரங்கால் பகுதியில் உள்ள குகனின் வீட்டில் இருந்து யாழ்.நகர் நோக்கிப்புறப்பட்ட போதே காணாமல் போயிருந்ததாக இந்த வழக்கு குறித்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு பொதுபலசேன பொறுப்பு அல்ல

(கொழும்பு)

நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற இனவாத செயற்பாடுகளுக்கு தாம் பொறுப்பல்ல என்று பொதுபலசேன அமைப்பு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் பொதுபலசேன பிரதிநிதிகளுக்கும், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே பொதுபலசேன அமைப்பின் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக முஸ்லிம்களுக்கு எதிராக பொதுபலசேன அமைப்பினர் மேற்கொண்டுவரும் பிரசாரங்கள் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்பிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, முஸ்லிம்கள் தொடர்பில் பொதுபலசேன அமைப்பு முன்வைத்துவரும் பல குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கப்பட்டது. எனினும் அவர்களின் நிலைப்பாட்டில் உறுதியாகவே உள்ளனர் என 'முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்கா'வின் தலைவர் என்.எம்.அமீன் தெரிவித்தார்.

அத்துடன் பாரம்பரிய முஸ்லிம்களுக்கு எதிராக நாங்கள் ஒருபோதும் செயற்படவில்லை. அத்துடன் முஸ்லிம்களுக்கு எதிராக இனவாத செயற்பாடுகளை ஒருபோதும் நாங்கள் மேற்கொள்ளவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர் என மாகாண சபை உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

இவ்வாறான கலந்துரையாடலை தொடர்சியாக மேற்கொள்ளவும் இதன் ஊடாக பல பிரச்சினைகளுக்கு சுமுகமாக தீர்வுகாண முடியும் என்றும் இந்தச் சந்திப்பின் போது இணக்கப்பாடு ஒன்று எட்டப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கலந்துரையாடலில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கபீர் ஹாஷிம், ஹலீம், மாகாணசபை உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான், பைரூஸ் ஹாஜி, கொழும்பு மேயர் முஸம்மில், பொதுபலசேன அமைப்பின் தலைவர் கிரம விமல ஜோதி தேரர், செயலாளர் அத்தே ஞானசார தேரர், அமைப்பாளர் டாக்டர் விதானகே, முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங் காவின் தலைவர் என்.எம்.அமீன், செயலாளர் அஸ்கர் கான், மௌலவி ஏ.எல்.எம்.இப்ராஹிம் மற்றும் மௌலவி மாஹிர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கைதடிப் பிள்ளையார் வீதியில் மஞ்சள் கடவைக்கோடு இல்லை

## பக்தர்கள் பெரும் அவலம்

(கல்வயல்)

ஏ-9 பிரதான வீதியிலுள்ள மிகவும் பிரபல்யம் வாய்ந்த கைதடிப் பிள்ளையார் ஆலய வீதிப்பகுதியில் மஞ்சள் கடவைக்கோடு இன்மையால் பக்தர்கள் பெரும் அவலங்களை எதிர்கொள்கின்றனர்.

யாழ்.கைதடிப் பகுதியில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்திற்கு யாழிலிருந்து செல்வோரும், ஏனைய இடங்களிலிருந்து யாழ்.வருவோரும் சென்று வழிபடுவது குறிப்பிடத்தக்கது. வாகனங்களில் வருவோர் தமது வாகனங்களை தரித்து வழமையாகப் பிள்ளையாரை வணங்கிச் செல்கின்றனா.

ஒவ்வொரு வாகன சாரதிகளும் ஏனைய பிரயாணிகளும் இக் கோயிலை வணங்கிய பின்னரே தமது மிகுதிப் பயணத்தை தொடர்கின்றனர்.

எனவே இப்பகுதியில் வீதிகளைக் கடப்பதற்கான பாதை சாரிகள் கடவை (Yellow lines) அமைக்கப்பட வேண்டும். இப்பகுதியில் வீதி ஓர வெள்ளைக் கோடு மற்றும் வீதிக் கடவை மஞ்சள் கோடு காணப்படாமையினால் பக்தர்கள் இவ் ஆலயத்தை சிறப்புற தரிசிக்க முடியாதுள்ளது.

அதாவது வாகனங்கள் அதிகமாக நிறுத்தப்பட்டிருப்பதனாலும், வீதியைக் கடப்பதற்கு மஞ்சள்கோடு இல்லாமையினாலும் வீதியைக் கடக்க முடியாது சிலர் சிரமப்படுகின்றனர்.

எனவே இவ் வீதிக்கான மஞ்சள் மற்றும் வெள்ளைக் கோடுகளை இட்டுத்தருமாறு மக்களும் சாரதிகளும் கோரிக்கை விடுக்கின்றனர். (43)


**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் நடவடிக்கைகள் அனைத்தும் இலங்கையில் மே மாதம் 2009ஆம் ஆண்டு முடிவிற்கு கொண்டுவரப்பட்ட பின்னர் புலம் பெயர் நாடுகளில் எஞ்சியிருக்கும் அதன் கட்டமைப்பின் இன்றைய சமகாலப்பார்வை.**



**முதலாவது கோரிக்கைக்கான பதில், நாடுகடந்த அரசை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் காரணம் அவர்கள் கே.பி யால் தொடக்கப்பட்டவர்கள். இலங்கையரசுடன் வேலை செய்கிறார்கள் துரோகிகள், துரோகிகளுடன் இணையமாட்டோம். இரண்டாவது கோரிக்கைக்கான பதில், தமிழ் தேசிய கூட்டமைப்பை நம்ப முடியாது, அவர்களும் துரோகிகள். அதனால் நாங்கள் செல்வராசா கஜேந்திரன் தலைமையில் புதிதாக ஒரு அரசியல் கட்சியை உருவாக்குவதோடு, வெறுமனே அரசியலோடு மட்டும் நிற்காமல் அடுத்த கட்ட ஆயுதப்போரை தொடங்குவதற்கான ஆயத்த வேலைகளிலும் இருக்கிறோம், விரைவில் ஆயுதப்போர் தொடங்கும். மூன்றாவதான, மாவீரர் குடும்பங்கள் மக்களின் வாழ்வாதாரங்கள் பற்றிய கோரிக்கைக்கு பரிதியின் பதில், அதைப்பற்றி எங்களிற்கு தெரியும், முதலில் மக்களின் விடுதலை பிறகு மற்றவற்றை பார்க்கலாம் என்றதுதான்.**

# பங்கு பிரிப்புக்களும் படுகொலையும் 07

சாத்திரி



**தலைமைச்** செயலகம், நாடு கடந்த அரசு, அனைத்துலகச் செயலகம் ஆகியன ஒன்றிணைந்து புலம் பெயர் தேசங்களில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை நகர்த்த வேண்டும் என கடந்த வருடம் தொடராக பிரான்சில் நடந்த பேச்சு வார்த்தைகளில் சிலதில் நானும் கலந்து கொண்டு அது அனைத்துலக செயலகத்தின் அடம்பிடிப்பால் தோல்வியில் முடிந்துபோக நானும் பின்னர் அது பற்றிய அக்கறை கொள்ளவில்லை. ஆனால் இந்த வருடமும் தொடர்ந்தமுயற்சியில் பேச்சு வார்த்தை நடாத்திய இரண்டு தரப்பும் பேசியவை அது பற்றிய விபரங்களை பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட இரு தரப்பினரோடும் இரு தரப்பிற்கும் மத்தியஸ்தம் வகித்தவரிடமும் அறிந்து கொண்டேயிருந்தேன். பரிதி சுடப்படுவதற்கு மூன்று வாரங்களிற்கு முன்னர் முதலாவது பேச்சு வார்த்தை பாரிஸ் 18 Marcadet Poissonnier என்னுமிடத்தில் குமார் என்பவரது உணவகத்திலேயே நடந்தது. குமார் என்பவர் மாவீரர் குடும்பத்தை சேர்ந்த வர் என்பது மட்டுமல்ல கடந்த காலங்களில் பிரான்சில் மாவீரர் குடும்பங்களின் விபரங்களை திரட்டி அவர்களை கௌரவிக்கும் பொறுப்பிலும் இருப்பவர். அனைத்து தரப்பும் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என பாடுபடுவதோடு அதற்கான பேச்சு வார்த்தை முன்னெடுப்புக்களை தொடர்ந்தும் முன்னெடுக்கும் ஒருவர், இவரது கடையிலேயே அனைத்துலகம் சார்பில் பரிதியும் தலைமை செயலகம் சார்பில் தமிழரசனும் பேசத் தொடங்கினார்கள்.



இங்கு பேச்சுவார்த்தை தொடக்கத்தில் தமிழரசன் மூன்று கோரிக்கைகளை அடிப்படை கோரிக்கைகளாக முன்வைக்கிறார் அவை,

1. புலம்பெயர் தேசங்களில் இயங்குகின்ற ஏனைய அமைப்புக்கள் உதாரணத்திற்கு நாடு கடந்த தமிழீழ அரசு, உகத்தமிழர் பேரவை போன்றனவற்றின் செயற்பாடுகளை குழப்பாமல் அவர்களிற்கும் ஆதரவு அளித்து அவர்களோடு பயணித்தல், அல்லது ஆதரவு அளிக்காவிட்டாலும் குறைந்த பட்சம் குழப்பாமல் விடுதல். அதே நேரம் வெறுமனே மாவீரர் தினத்தையும் விளையாட்டுப் போட்டிகளையும் மட்டும் நடத்திக்கொண்டிராமல் இலங்கையரசின் போர்க்குற்றம் மீதான விசாரணைகள் மற்றும் தாயக மக்களின் சுதந்திர வாழ்விற்காகவும் தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுத்தல்.

2. தற்போது உள்ள சூழலில் தாயகத்தோடு தொடர்பு இல்லாமல் வெளி நாடுகளில் மட்டுமே பரப்புரைகளை மேற்கொள்வது எமது போராட்டங்களிற்கு பலம் சேர்க்காது. எனவே தாயகத்தில் பல குழப்பங்களோடு இயங்கிக் கொண்டு இருக்கின்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்து அவர்களையும் சீரமைப்பதற்கான அழுத்தங்களை கொடுத்து அவர்களோடு தொடர்புகளை பேணியபடி அரசியல் ரீதியாக புலம்பெயர் மக்களையும் இணைத்து சரியான பாதையில் பயணிப்பது.

3. போரால் பாதிக்கப்பட்ட போராளிகள் மற்றும் மாவீரர் குடும்பங்களிற்கு முன்னுரிமை கொடுத்துப் பராமரிப்பதோடு பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரங்களை உயர்த்துவதற்கான திட்டமிடல்களை மேற்கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்துதல்

இந்த மூன்று கோரிக்கைக்கும் அனைத்துலகச் செயலகம் இணங்கும் பட்சத்தில் தலைமைச் செயலகத்துடன் இணைந்து ஒரு கூட்டறிக்கை தயாரித்து ஊடகங்களிற்கு அறிவித்துவிட்டு சேர்ந்து இயங்கலாம் என்று கோரிக்கை வைக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கைகளிற்கு பரிதி அளித்த பதில்கள் என்னவெனப் பார்ப்போம். முதலாவது கோரிக்கைக்கான பதில் நாடுகடந்த அரசை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம் காரணம் அவர்கள் கே.பி யால் தொடக்கப்பட்டவர்கள். இலங்கையரசுடன் வேலை செய்கிறார்கள் துரோகிகள், துரோகிகளுடன் இணையமாட்டோம். உலகத் தமிழர் பேரவையானது செயற்பாட்டில் இல்லை அவர்கள் செயற்படும்போது யோசிக்கலாம் என்பது இரண்டாவது கோரிக்கைக்கான பதில். தமிழ் தேசிய கூட்டமைப்பை நம்ப முடியாது, அவர்களும் துரோகிகள். அதனால் நாங்கள் செல்வராசா கஜேந்திரன் தலைமையில் புதிதாக ஒரு அரசியல் கட்சியை உருவாக்குவதோடு, வெறுமனே அரசிலோடு மட்டும் நிற்காமல் அடுத்த கட்ட ஆயுதப்போரை தொடங்குவதற்கான ஆயத்த வேலைகளிலும் இருக்கிறோம், விரைவில் ஆயுதப்போர் தொடங்கும்.

மூன்றாவதான, மாவீரர் குடும்பங்கள் மக்களின் வாழ்வாதாரங்கள் பற்றிய கோரிக்கைக்கு பரிதியின் பதில் அதைப் பற்றி எங்களிற்கு தெரியும், முதலில் மக்களின் விடுதலை பிறகு மற்றவற்றை பார்க்கலாம் என்றதுதான்.

நடைமுறைக்கு சாத்தியமற்ற வில்லங்கமான பரிதியின் பதில்களால் மத்தியஸ்தம் வகித்தவர்கள் ஆத்திரமடைந்து வில்லங்கமான பதில்தராமல் தற்காலத்திற்கேற்றவாறு யோசித்து பதில் தருமாறு கூறிவிடுகிறார்கள். பரிதி கோபமாக அங்கிருந்து வெளியேறிவிடுகிறார். ஆனாலும் பேச்சுவார்த்தை முயற்சியில் ஈடுபட்டவர்கள் விடுவதாயில்லை. இந்த வருடம் எப்படியாவது அனைவரையும் இணைத்து மாவீரர் தினத்தை கொண்டாடுவதோடு ஒற்றுமைப்படுத்தி விடவேண்டும் என்பதில் உறுதியாய் இருந்தவர்கள் பரிதியோடு தொடர்ந்து பேசினார்கள். கடந்த முறையைப்போல எவ்வித நிபந்தனைகளும் விதிக்காவிட்டால் ஒற்றுமையைப் பற்றி பேசலாம் என்று விட்டார், பரிதி. அதற்கு மத்தியஸ்தம் வகித்தவர்களும் தலைமைச் செயலகத்தைச் சேர்ந்தவர்களும் சம்மதித்தனர்.


சரியாக ஒரு வாரம் கழித்து மீண்டும் அதே கடையில் பலர் முன்னிலையில் இருதரப்பும் பேசியது. நிபந்தனைகள் இன்றி இரு தரப்பும் ஒற்றுமையாக செயல்படவும் ஒன்றாக மாவீரர் தினத்தை கொண்டாடுவது எனவும் தொடர்ந்தும் அடுத்த நடவடிக்கைகள் போராட்டங்களை இணைந்தே முன்னெடுப்பது என்பதற்கு பரிதி சம்மதம் தெரிவித்தார். பேச்சு வார்த்தையை ஏற்பாடு செய்தவர்களிற்கும் மகிழ்ச்சி. பேச்சுவார்த்தை வெற்றி என்கிற செய்தி தொலைபேசி மூலமாக அனைவரிற்கும் பரிமாறப்படுகின்றது. எனது கைத்தொலைபேசியும் உதறியது. இரு தரப்பும் தனித்தனியாக அறிக்கை தயாரிப்பது என்றும் அதனை பேச்சுவர்ர்த்தைகளை ஏற்பாடு செய்தவர்களோடும் இணைந்து சரிபார்த்து விட்டு கூட்டறிக்கையாக்கி ஊடகங்களிற்கு அனுப்புவது என்றும் முடிவுசெய்யப்பட்டது.

திகதியும் குறித்துவிட்டு கைகுலுக்கி மகிழ்ச்சியோடு விடை பெற்றார்கள்.

ஆனாலும் பேச்சுவார்த்தையை ஒழுங்கு செய்தவர்களிற்கு எல்லாமே திட்டமிட்டபடி நடக்குமா என்கிற சந்தேகம் இருக்கத்தான் செய்தது. காரணம் 2009ஆம் ஆண்டு புலிகள் அமைப்பின் ஆயுதப்போர் முடிவிற்கு வந்த பின்னர் நாடு கடந்த அரசு தொடங்கப் பட்டதிலிருந்து வட்டுக் கோட்டை தீர்மானத்தின் மீதான மீள் வாக்கெடுப்பு என்று தொடங்கி 2010ஆம்ஆண்டு மாவீரர் தினத்தன்று தலைவர் பிரபாகரனின் மரணத்தை அறிவித்து அவரிற்குரிய மரியாதையை செலுத்தவேண்டும் என மேற்கொண்ட முயற்சிகள் வரை அனைத்திலுமே அனைத்துலகச் செயலகம் ஆரம்பத்தில் ஒத்துவருவது போல போக்கு காட்டிவிட்டு கடைசி நேரத்தில் காலை வாரிவிடுவது அவர்களது வழக்கமாக இருந்தது. அதைப்போலவே இந்தத் தடவையும் கடைசிநேரத்தில் காலை வாரிவிடுவார்களா என்கிற சந்தேகத்தில் இரு தரப்பையும் தொடர்பு கொண்டு அறிக்கையின் முன்னேற்றம் பற்றி அறிந்து கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் பயந்தது போல் நடந்தே விட்டிருந்தது. இரண்டு நாள் கழித்து தமிழரசனோடு தொலைபேசியில் தொடர்பு கொண்ட பரிதி, ஊடக அறிக்கை ஒண்டும் வேண்டாம், மற்றைய நாட்டு பொறுப்பாளர்களும் இரும்பொறையும் அதற்கு ஒத்து வருகிறார்கள் இல்லை, நாங்கள் நம்பிக்கையின் அடிப்படையில் இணைந்து செயற்படுவோம் என்கிறார். மீண்டும் தேவாங்கு தென்னை ஏறப்போவதை (எத்தனை நாளைக் குத்தான் வேதாளம் மட்டும் முருங்கையில் ஏறுவது) பேச்சு வார்த்தை ஏற்பாட்டாளர்களிற்கு அறிவிக்கிறார்.

(தொடரும்)

# இலங்கையுடன் மேற்குலக நாடுகள் நல்லுறவைப் பேணவேண்டும்



மேற்குலக நாடுகள் இலங்கையுடன் ஆக்கபூர்வமான உறவுகளைப் பேண வேண்டுமென பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புலி ஆதரவாளர்களின் பிழையான வழிகாட்டல்களினால் மேற்குலக நாடுகள் இலங்கை மீது அழுத்தங்களை பிரயோகித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சொந்த நாட்டுக்கு எதிராக சூழ்ச்சி செய்யும் தரப்பினரின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காது, மேற்குலக நாடுகள் இலங்கையுடன் நல்லுறவைப் பேண வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகளை நேரடியாக பார்வையிட்டு விளங்கிக் கொள்ள வேண்டுமென கொழும்பில் நடைபெற்ற விசேட செயலமர்வில் கலந்துகொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளகப் பிரச்சினைகளுக்கு சர்வதேச ரீதியில் தீர்வு காண முனைப்பு காட்டுவதனை ஏற்றுக கொள்ள முடியாது.

ஜனநாயக நாடுகளில் பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்ட தன் பின்னரும், ஜனநாயக அரசியல் கட்சிகளின் பின்னணியில் இருந்து கொண்டு பயங்கரவாதிகள் தங்களது கொள்கைகளை பிரசாரம் செய்யக் கூடிய அபாயம் காணப்படுவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

மீண்டும் வன்முறைகளை கட்டவிழ்த்துவிடும் முயற்சிகளில் ஈடுபடக்கூடிய அபாயம் காணப்படுவதாகவும் இது தொடர்பில் கண்காணிக்கப்படும் எனம் கோதபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# அச்சலாவின் கை அகற்றப்பட்டமை குறித்த விசாரணை அறிக்கை கையளிப்பு



கொழும்பு சட்டபீட மாணவி அச்சலா பிரியதர்ஷினியின் கை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டமை தொடர்பான விசாரணை அறிக்கை சுகாதார அமைச்சின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

விசாரணை நடாத்தவென அமைக்கப்பட்ட மூனறு பேர் அடங்கி குழு, சுகாதார அமைச்சின் செயலாளர் நிஹால் ஜயத்திலகவிடம் அறிக்கையை கையளித்துள்ளது.

வீட்டில் தவறி விழுந்து கை முறிவு ஏற்பட்ட நிலையில் மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட கொழும்பு சட்ட பீட மாணவி அச்சலா பிரியதர்ஷினி கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அவரது கை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டது. இந்த விடயம் குறித்து விசாரணை நடாத்தவென சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனையில் அமைச்சின் செயலாளர் குழுவொன்றை அமைத்தார்.

மூன்று நாட்களுக்குள் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் விசாரணையில் மேலதிக காலம் தேவைப்பட்டால் இரண்டு வாரங்கள் எடுத்துக்கொள்ளுமாறும் சுகாதார அமைச்சின் செயலாளர் விசாரணைக் குழுவிற்கு அறிவித்திருந்தார்.

இது குறித்து விசாரணை நடாத்திய குழு 22 பேரிடம் விசாரணை நடாத்தியுள்ளது. விசாரணைக் குழுவின் அறிக்கை சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில் அறிக்கையை ஆராய்ந்து தகவல் வெளிடப்படும் என சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு அருகில் உள்ள கப்புல் பாதைகள் மாசு

(கொழும்பு)

இலங்கைக்கு அருகாமையில் உள்ள கப்பல் பாதைகள் மாசடைந்துள்ளதாக நாசா விண வெளி ஆய்வு நிறுவனம் சுட்டிக் காட்டியுள்ளது. இலங்கையை அண்டிய பகுதிகளின் கப்பல் பாதைகளே மிகவும் அதிகளவில் மாசமடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

ஒரு தசாப்த காலமாக குறித்த கப்பல் பாதைகள் தொடர்பில் அவதானிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

கப்பல்களிலிருந்து வெளியேற்றப்படும் வாயுக்கள் மற்றும் ஏனைய பொருட்களினால் இவ்வாறு கடல் மாசடைந்துள்ளது. கடலில் கலந்துள்ள சில வகை நச்சுப் பொருட்கள் மனித உடலுக்கு தீங்கை ஏற்படுத்தக் கூடிய வகையில் அமைந்துள்ளது என ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக இருதயம் மற்றும் சுவாசப்பை ஆகியவற்றுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனத் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான கப்பல் பாதையே இவ்வாறு மாசடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

# ஸ்கானிங் குழந்தையின் மரண விசாரணை; வைத்திய அதிகாரிகள் நீதிமன்றம் அழைப்பு



நவலோகா வைத்தியசாலையில் கேள்விக்குரிய விதமாக உயிரிழந்த ஐந்தரை வயது சிறுமியின் மரணம் தொடர்பான விசாரணைகள், பணத்தின் வலுவால் மூடி மறைக்க அனுமதிக்க வேண்டாம் என அச்சிறுமியின் தாய், நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

வலியால் வருந்துவது போல சில அறிகுறிகள் காணப்பட்டதால் ஜனவரி 31 இல், தனது மகளை கொழும்பு, நவலோகா வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றதாக அவர் நீதிமன்றத்தில் குறிப்பிட்டார்.

தனது மகளை பார்வையிட்ட வைத்தியர், இரத்த பரிசோதனைகளையும், எம்.ஆர்.ஐ ஸ்கேன் அறிக்கையையும் பெறுமாறு கூறினார். தனது மகள் புத்தினி கௌசல்யாவுக்கு மயக்க மருந்தைக் கொடுத்து எம்.ஆர்.ஐ ஸ்கானிங் இயந்திரத்துக்குள் கிடத்தினர். 30 நிமிடங்களின் பின் ஒரு சத்தம் கேட்டது.

இதைத் தொடர்ந்து ஏற்பட்ட குழப்பத்தின் பின் எனது மகளை வெளியே எடுத்தனர். அவள், நீல நிறமாகிவிட்டதையும் வயிறு வீங்கிவிட்டதையும் நான் கண்டேன். இது நடந்து 10 நிமிடங்களின் பின்னரே வேறு வைத்தியர்கள் அங்கு வந்தனர். பின்னர், எனது மகளை தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு கொண்டு சென்றனர். அவள் உடல் குளிர்ந்துவிட்டது என நான் கூறிய பின், அவளை வெப்பம் வழங்கும் இயந்திரத்தினுள் வைத்தனர். அவர்கள் எங்களை நான்கு நாட்களாக ஏமாற்றினர்.

நான்காம் நாள் அவளது மூக்கினுள் எறும்புகள் வரிசையாக செல்வதை கண்டேன். தனது மகள் ஸ்கான் இயந்திரத்தினுள் இறந்துவிட்ட போதிலும் நிர்வாகம் அதை மறைத்து மகள் நான்கு நாட்களின் பின் இறந்ததாக அறிவித்தனர் என்று அச்சிறுமியின் தாய் கூறினார்.

அடுத்த விசாரணை தினத்தில் வைத்தியசாலை அதிகாரிகளை சட்சியமளிக்க அழைப்பாணை விடுப்பதாக கூறிய நீதவான், இந்த வழக்கின் விசாரணையை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# மாணவர்களிடம் பணம் அறவிடல் ; முதலமைச்சர்கள் - ஜனாதிபதி சந்திப்பு

மாணவர்களிடமிருந்து பணம் அறவிடுவது தொடர்பாக மாகாண முதலமைச்சர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்திக்கவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

எட்டாம் வகுப்பு மாணவியொருவர் வகுப்பறை தளபாடங்களுக்கு வர்ணம் பூசுவதற்காக 800 ரூபாவை செலுத்த சில தேங்காய்களை திருடியதாக கூறப்படும் செய்திப் பணம் அறவிடுவது தொடர்பாக சில நடவடிக்கைகளை எடுக்க அதிகாரிகளை தூண்டியுள்ளது என மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஊடகங்களுக்கு பேசும்போது குறிப்பிட்டார்.

பாடசாலைத் தேவைக்கு மாணவரிடம் அறவிடப்படும் பணத்தை கட்டுப்படுத்துவதற்காக சுற்றறிக்கைகள் திருத்தப்படவுள்ளன என முதலமைச்சர் தெரிவித்தார். பணம் கொடுக்க வசதியில்லாத பிள்ளைகளிடமிருந்து பணம் பெற அனுமதிக்கப்பட்டமாட்டாது என அவர் கூறினார்.

இவரது வறுமையை உணர்நது பண அறவீடுகளிலிருந்து இவருக்கு பூரண விலக்களிக்கப்பட்டிருந்தது என அவர் குறிப்பிட்டார். நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்பட்ட மாணவி யின் வீட் டுக்கு சென்ற வகுப்பாசி ரியர் மாண வியை பாட சாலைக்கு வரும்படியும் யாரும் அவரை கிண்டல் செய்யமாட்டார்கள் எனவும் மாணவியிடம் கூறினர்.



800 ரூபா கொண்டு வரும்படி பாடசாலை நிர்வாகம் கூறியதாக இந்தப் பிள்ளை கூறியது உண்மையல்ல என இந்த பிரச்சினையை விசாரிக்க நியமிக்கப்பட்ட குழு தெரிவித்துள்ளது.

# சூழ்ச்சித்திட்டங்களுக்கு அடிபணியாது நாட்டிற்காக ஒன்றிணைவது அவசியம்

(கொழும்பு)



நாட்டில் மதவாதத்தை தூண்டி அதன் மூலம் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சி எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஈரான், ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளில் மத அடிப்படைவாதத்தை பயன்படுத்தி வன்முறைகள் இடம்பெற்று வருகின்றது.

இதேபோன்று இலங்கையில் மத அடிப்படைவாதத்தின் ஊடாக, மோதல்களை வெடிக்கச் செய்ய முயற்சிக்கப்பட்டு வருகின்றது.

அண்மையில் பதுளை பிரதேசத்தில் முஸ்லிம் மக்களுடன் இடம்பெற்ற முரண்பாடுகளானது, மறைமுக நோக்கங்களைக் கொண்டவர்களின் முயற்சியாகும்.

சூழ்ச்சித் திட்டங்களுக்கு அடிபணிந்து விடாது, அனைத்து இன மக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

# வாழ்வாதாரத்திற்கு உதவும் கல்விமுறை அவசியமாகும்

(கொழும்பு)



கல்வி முறைமையில் மாற்றம் ஏற்பட வேண்டும் வாழ்வாதார தொழில்களை மேற்கொள்வதற்கு பொருந்தக்கூடிய கல்வி முறைமை ஒன்றை இலங்கைக்கு அறிமுகப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக பிரதமர் ஜயரத்ன வலியுறுத்தியுள்ளார்.

கம்பளை வலயக் கல்விப் பணிமனைக்கான மூன்றுமாடி கட்டட திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர் தற்போதைய கல்வி முறைமை தொடர்பில் கருத்து வெளியிட்டார்.

தற்போதைய கல்வி முறையில் குறைபாடுகள் காணப்படுவதாக தெரிவித்த பிரதமர் சமூக முறையிலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும்.

அநேகமான பிள்ளைகள் இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு சென்று கல்வி பயில்வதில் ஆர்வம் காட்டுவதாகவும் பிரதமர் ஜயரத்ன கூறியுள்ளார்.

# விபசார விடுதி முற்றுகை

(கொழும்பு)

கொள்ளுபிட்டி பொலிஸ் பிரிவில் காலி வீதி கடற்கரைப் பகுதியில் உள்ள இரவு களியாட்ட விடுதி ஒன்றில் இயங்கி வந்த விபசார விடுதி ஒன்று முற்றுகையிடப்பட்டுள்ளது.

திட்டமிட்ட குற்றம் மற்றும் துஷ்பிரயோக ஒழிப்பு பிரிவு நேற்றுமுன்தினம் இரவு மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் இந்த விபசார விடுதி முற்றுகையிடப்பட்டுள்ளது. இந்த விடுதியில் இருந்து இரண்டு தாய்லாந்து பெண்கள், ஒரு சீன பெண்ணும், சீதுவ, வாதுவ, வாரியபொல, மொராந்துடுவ பிரதேசங்களைச் சேர்ந்த 24 தொடக்கம் 36 வயதுடைய ஐந்து இலங்கை பெண்களும் ஹட்டன் - நோர்வூட் பகுதியைச் சேர்ந்த ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# வரியிறுப்பாளர்களுடன் மன்னார் அரச அதிபர் சந்திப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்ட வரியிறுப்பாளர் சங்கத்திற்கும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சரத் ரவீந்திரவுக்கும் இடையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை சந்திப்பொன்று நடைபெற்றது.

இச்சந்திப்பிற்காக அழைக்கப்பட்ட திணைக்களங்களின் தலைவர்கள் பலர் சமுகமளிக்காததன் காரணத்தினால் தீர்மானங்கள் எவையும் எட்டப்படாத நிலையில் இச்சந்திப்பு முடிவடைந்ததாக மன்னார் மாவட்ட வரியிறுப்பாளர் சங்கத்தின் பொருளாளர் ஐ.சார்ல்ஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்ட மக்களின் நலன் கருதி கடந்த வருடம் மன்னாரில் மன்னார் மாவட்ட வரியிறுப்பாளர் சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இச்சங்கம் மன்னார் நகரசபையுடன் இணைந்து பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் முகமாக தீர்மானங்களை ஏற்கெனவே மேற்கொண்டிருந்தோம்.

இந்நிலையில் வரியிறுப்பாளர் சங்கத்திற்கும் திணைக்களங்களின் தலைவர்களுக்குமிடையில் விசேட சந்திப்பொன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இச்சந்திப்பில் வரியிறுப்பாளர சங்கத்தின் நிர்வாகிகளும் அரசாங்க அதிபரும் மன்னார் நகர சபையின் தலைவர், உபதலைவர், உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இருப்பினும் ஏனைய திணைக்களங்களின் தலைவர்கள் கலந்து கொள்ளவில்லை.

மன்னார் .நகரசபையுடன் இணைந்து மன்னார் மாவட்ட வரியிறுப்பாளர் சங்கம் மேற்கொள்ளவிருந்த பலதரப்பட்ட விடயங்கள் தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் சரத் ரவீந்திர மற்றும் நகரசபை உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார்.

எனினும் அழைக்கப்பட்ட திணைக்களங்களின் தலைவர்கள் பலர் கலந்துகொள்ளாததால் இச்சந்திப்பின்போது தீர்மானங்கள் எவையும் எட்டப்படாது இச்சந்திப்பு நிறைவடைந்துள்ளதாகக் கூறினார்.

# இடமாற்றத்தை ஆட்சேபித்து ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்களில் பலர் வெளி மாவட்டங்களில் கடமையாற்றி 2013 ஆம் ஆண்டுக்கான இடமாற்றம் தொடர்பில் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

வன்னி மாவட்டத்தில் இருந்து யாழ்.கல்வி வலயத்திற்கு மாற்றம் பெற்ற 33 ஆசிரியர்களும் வலிகாமம் கல்வி வலயத்தில் கடமையாற்றுமாறு யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தமது உரிமையை மீறும் நடவடிக்கை என்றும் கஷ்டப் பிரதேசங்களிலிருந்து கடமையாற்றிய நாம் விருப்பமான பாடசாலைக்கு மாற்றம் பெறலாம்.

ஆனால் அவ்வாறு செய்யாது தம்மை வலிகாமம் கல்வி வலயத்திற்கு கடமையாற்றச்செய்வது தமது உரிமைகளை மீறுவதாக மாகாண கல்விப்பணிப்பாளருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து, இது விடயமாக யாழ்.மனித உரிமை ஆணைக் குழுவில் முறையிடப்பட்டுள்ளது. (இ)

# டெங்கு பெருகும் வாழைத் தோட்டம்; 22 பேர்மீது வழக்குத்தாக்கல்

(திருநெல்வேலி)

டெங்கு நுளம்பு பெருகும் வகையில் வீட்டுக் காணிகள் மற்றும் வாழைத் தோட்டங்களை வைத்திருந்த 22 பெருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட உள்ளது.

கோப்பாய் மற்றும் அச்சுவேலி பொலிஸார், கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுடன் இணைந்து கோப்பாய் பிரதேசத்திற்குட்பட்ட பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட போது இவர்கள் அகப்பட்டுக்கொண்டனர்.

கடந்த 7 ஆம் திகதி கோப்பாய், இருபாலையில் மூன்று பேரும் 9 ஆம் திகதி சிறுப்பிட்டியில் 11 பேரும், 10 ஆம் திகதி புத்தூரில் 8 பேரும் நுளம்பு பெருகும் வகையில் கழிவுப் பொருட்களை வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

பொது மக்களின் நன்மை கருதியும், டெங்கு நுளம்பு பெருகாத முறையிலும் வீட்டுக் காணிகள், வளவுகளை சுத்தமாக வைத்திருக்குமாறும், தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் கோப்பாய் மற்றும் அச்சுவேலிப் பொலிஸாரும், கோப்பாய் சுகாதாரப் பிரிவினரும் தெரிவித்துள்ளனர். (137)

# வருடாந்த பொதுக்கூட்டம்

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகத்தில் நடைபெறவுள்ளது.

இப்பொதுக்கூட்டத்தில் தலைவர் உரை, சென்றகூட்ட அறிக்கை, ஆண்டறிக்கை, கணக்கறிக்கை, புதிய நிர்வாகிகள் தெரிவு போன்ற விடயங்கள் இடம்பெறவுள்ளன.


ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர் தினமுரசு

நாளைய தினமுரசு வாரமலரில்... 14. 02. 2013




- மறுக்கப்பட்ட நீதி! உயிர்ப்பிச்சை கேட்கிறார் பேரறிவாளன்
- மலையக சனத்தொகை வீழ்ச்சி ஏன்?
- புலிகளின் வீழ்ச்சி திரைமறைவில் அரங்கேறிய இரகசியத் திட்டம்!
- சரியான கொள்கையிலும் அணுகுமுறையிலுமே இனப்பிரச்சினையின் தீர்வு தங்கியுள்ளது!



வரிசையாக வரும் புகழ்!

உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

# மக்கலம் அதிரடித் துடுப்பாட்டம் அசத்தியது நியூசிலாந்து



(ஹமில்டன்)

மக்கலத்தின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் இங்கிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது ருவென்ரி-20 போட்டியில் நியூசிலாந்து அணி 55 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது. இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான் மூன்று போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று நியூசிலாந்தின் ஹமில்டனில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய நியூசிலாந்து அணி, ஆரம்பம் முதலே அதிரடியான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி வந்தது. இதில் தலைமைப் பொறுப்பேற்ற பின்னர் தொடர்ந்து சொதப்பி வந்த கப்டன் மக்கலம் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்து இங்கிலாந்துப் பந்து வீச்சாளர்களை புரட்டியெடுத்தார். இறுதியில் நியூசிலாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 192 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கப்டன் மக்கலம் 38 பந்துகளை எதிர்கொண்டு ஐந்து சிக்ஸர்கள்,. ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 74 ஓட்டங்களைப்பெற்றார். மற்றும் குப்ரில் 31 பந்துகளை எதிர்கொண்டு இரு சிக்ஸர்கள், நான்கு பவுண்டரிகள் அடங்கலாக குப்ரில் 47, ருதேவ்ட் 40 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரைட் இரண்டு, ரீன்பஜ் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 193 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இங்கிலாந்து அணி, ப்ராங்கிளின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாது திணறியதுடன் விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் ஒரு முனையில் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய பட்லர், இங்கிலாந்து அணி கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற வழிவகுத்தார். இறுதியில் இங்கிலாந்து அணி, 19.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 137 ஓட்டங்களைப் பெற்று, 55 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் பட்லர் 30 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 54 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் லம்ப் 17, ட்ரைவெல் 22, மோர்கன் 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ப்ராங்கிளின் 15 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். போட்டியின் ஆட்டநாயகனாக மக்கலம் தெரிவானார். இதன் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றிகளைப் பதிவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது ருவென்ரி-20 போட்டி வெலிஹ்டனில் எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மெய்வல்லுநர் போட்டி


(யாழ்ப்பாணம்)

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் எஸ்.ஏ. எம். முபாரக் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே. வரதராஜமூர்த்தி, சிறப்பு விருந்தினராக தேசியக் கல்வியிற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.ஆர். சத்தியேந்திரப்பிள்ளை ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (05)

*

மருதங்கேணி இ. த. க. வித்தியாலயத்தில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. வித்தியாலய அதிபர் செ. ஸ்ரீராமச் சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) அ. நீகரன், சிறப்பு விருந்தினராக ஈ.பி. டி.பி. யின் வடமராட்சி அமைப்பாளர் ஐ. ஸ்ரீரங்கேஸ் வரன், மருதங்கேணி கோட்டக்கல்விப்பணிப்பாளர் சி. பொன்னையா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (109)

## பார்சிலோனா பெரு வெற்றி



(பார்சிலோனா)

கெடாபே அணிக்கு எதிரான லா லிகா கால்பந்து போட்டியில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது. ஸ்பெயினில் லா லிகா கால்பந்து தொடர் நடக்கிறது. இதன் லீக் போட்டியில் பார்சிலோனா, கெடாபே அணிகள் மோதின. போட்டியின் தொடக்கம் முதல் ஆதிக்கம் செலுத்திய பார்சிலோனா அணிக்கு முதல் பாதியில் அலெக்சிஸ் (6ஆவது நிமிடம்), மெஸ்சி (13ஆவது நிமிடம்) ஆகியோர் கோல் அடித்தனர். கெடாபே அணி வீரர்களின் கோல் முயற்சி பலிக்கவில்லை.

பின் இரண்டாவது பாதியிலும் ஆதிக்கம் செலுத்திய பார்சிலோனா அணிக்கு டேவிட் வில்லா (58ஆவது நிமிடம்), கிறிஸ்டியன் டெல்லோ (79 நிமிடம்), இனியாஸ்டா (90 நிமிடம்), ஜெரார்ட் (90.2 நிமிடம்) ஆகியோர் கோல்கள் அடிக்க, வெற்றி உறுதியானது. கெடாபே அணியின் ஆல்வாரோ (83 நிமிடம்) ஒரு கோல் அடித்து ஆறுதல் அளித்தார். முடிவில், பார்சிலோனா அணி, 6-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. பிற போட்டிகளில் ரியல் சோசிடெட், ரியல் சரகோசா அணியை 2-1 என வென்றது. ரேயோ வலேகெனோ அணி, அத்லெடிக் மாட்ரிட் அணியை 2-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

## ஹர்பஜன் தேர்வு சரியான முடிவு

(கொல்கத்தா)

இந்திய அணியில் ஹர்பஜன்சிங்கை மீண்டும் சேர்த்தது சரியான முடிவாகும். அவர் மீது நான் எப்போதுமே நம்பிக்கை வைத்து இருப்பேன். கப்டன் டோனி ஹர்பஜன்சிங்குக்கு 11 பேர் கொண்ட அணியில் விளையாட வாய்ப்பு வழங்க வேண்டும் என இந்திய அணியின் முன்னாள் கப்டன் கங்குலி தெரிவித்துள்ளார்.

ருவென்ரி-20 போட்டி மற்றும் ஒருநாள் ஆட்டத்தில் விளையாடிய அசோக் திண்டா டெஸ்ட் அணியில் இடம்பெற்றதை வரவேற்கிறேன்.

அவருக்கு 11 பேர் கொண்ட அணியில் ஆட வாய்ப்பு வழங்க வேண்டும். கம்பீர் நீக்கப்பட்டது இயல்பான ஒன்றுதான். சிறப்பாக ஆடாத பட்சத்தில் நீக்காமல் இருக்க முடியுமா? ஆனால் அவர் நல்ல நிலைக்கு திரும்பி மீண்டும் அணியில் இடம்பெறுவார் என்ற நம்பிக்கை உள்ளது.

உள்ளூரில் விளையாடுவதால் இந்திய அணி அவுஸ்ரேலியாவைவிட தொடரை கைப்பற்ற சாதகமானநிலையில் இருக்கிறது. ஆனால் எல்லாமே ஆடுகளத்தின் தன்மையை பயன்படுத்திக் கொள்வதை பொறுத்தே இருக்கும். டெண்டுல்கர் இந்த டெஸ்ட் தொடரில் சிறப்பாக ஆடுவார் என்ற நம்பிக்கை உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நாளை இரண்டாவது டெஸ்ட்

(டர்பன்)

தென்னாபிரிக்க, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நாளை டர்பனில் ஆரம்பமாகவுள்ளது. தென்னாபிரிக்க, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியில் தென்னாபிரிக்க அணி அபார வெற்றிபெற்று தொடரில் முன்னிலை வகிக்கின்றது.


இந்நிலையில், நாளை ஆரம்பமாகவுள்ள டெஸ்ட் போட்டியில் மிகுந்த எதிர்பார்ப்புடன் களமிறங்கவுள்ளோம். முதல் டெஸ்ட் போட்டியில் துடுப்பாட்டத்தில் ஏற்பட்ட சரிவைச் சரி செய்யும் வகையில் எமது வியூகம் அமைந்துள்ளது. எனவே, இரண்டாவது டெஸ்ட் சவால் நிறைந்ததொன்றாக நிச்சயம் இருக்கும் என பாகிஸ்தான் அணிக் கப்டன் மிஸ்பா உல் ஹக் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.


## தோல்வி நல்ல தொடக்கம்

(சிலி)

சிலி ரென்னிஸ் போட்டியின் தோல்வி எதிர்வரும் தொடர்களுக்கு நல்ல தொடக்கமாக அமையும் என நம்புகின்றேன் என நடால் தெரிவித்தார். சிலி ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் தோல்வியடைந்தமை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே நடால் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எல்லாம் நல்லபடியாக அமைந்தது. இறுதிப்போட்டியில் வெற்றி பெற வேண்டும் என்று விரும்பினேன். நான் எனது சிறப்பான ஆட்டத்தை சரியாக வெளிப்படுத்தவில்லை. நிறையப் போட்டிகளுக்கு இது தொடக்கமாகும். நிறைய வெற்றிகளை இன்னும் குவிக்க முடியும் என்று நம்புகிறேன். இதிலிருந்து நல்ல பாடங்களைக் கற்றுக்கொண்டேன். வெற்றி, தோல்விகளுக்கு அப்பால் எனது ஆட்டம் ஏழு மாதங்களுக்குப் பின்னர் சிறப்பாக அமைந்ததே மகிழ்ச்சி. தொடர்ந்து வரும் தொடர்களுக்கு இந்தப் பாடம் பெரும் துணை புரியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.





## நம்ப முடியாத வாய்ப்பு

(மும்பை)

டெஸ்ட் அணியில் இடம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தேன். இருப்பினும் மிக விரைவாக அந்த இடம் கிடைக்கும் என நான் நம்பவில்லை என இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் புவனேஸ்வர் குமார் தெரிவித்தார்.

ஒருநாள் போட்டிகள் போல் டெஸ்ட் போட்டிகள் இருக்காது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இதை ஒரு சவாலாக எடுத்து கொண்டு சிறப்பாகச் செயற்படுவேன். டெஸ்ட் போட்டிக்கு தேர்வு செய்யப்படுவேன் என எதிர்பார்த்தேன். ஆனால், இது இவ்வளவு விரைவில் நடக்கும் என்பதை எதிர்பார்க்கவில்லை. ஒருநாள் போட்டிகளைப் போல் டெஸ்ட் போட்டிகளிலும் சிறப்பாக செயற்பட்டு திறமையை நிரூபிப்பேன். டெஸ்ட் போட்டிகளில் அதிக நேரம் பந்துவீச வேண்டும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

இந்திய ஆடுகளங்கள் வேகத்திற்கு அதிகம் ஒத்துழைக்காது என்றாலும், இங்கு எப்படி விக்கெட் கைப்பற்ற வேண்டும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

எந்த அணியையும் எளிதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அவுஸ்ரேலிய அணியாக இருந்தாலும், பாகிஸ்தான் அணியாக இருந்தாலும் சமபலமாகக் கருதுவேன். வெற்றிக்கு கடுமையாகப் போராடுவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.




ஆபிரிக்க நாடுகளுக்கிடையில் நடைபெற்ற கால்பந்துப் போட்டியில் கிண்ணம் வென்று அசத்திய நைஜீரிய அணிக்கு தாயகத்தில் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது. நேற்று நைஜீரிய விமான நிலையத்தில் சென்றடைந்த கால்பந்து வீரர்களுக்கு, இரு மருங்கிலும் மக்கள் வரிசையில் நின்று மலர் தூபி சிறப்பான வரவேற்பளித்தனர்.

# லோகதீஸ்வர் சிறப்புப் பந்துவீச்சு வென்றது சென். ஜோன்ஸ் கல்லூரி



(யாழ்ப்பாணம்)


லோகதீஸ்வரின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் சென். . பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கெதிரான இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி இனிங்ஸ் வெற்றிபெற்றது.

சென். ஜோன்ஸ் மற்றும் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிகளுக்கிடையில் சிநேகபூர்மாக இடம்பெற்ற இப்போட்டி கடந்த 8,9ஆம் திகதிகளில் நடைபெற்றது. சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் இரு கல்லூரிகளின் 19 வயதுப் பிரிவு அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி, கானமிர்தன், லோகதீஸ்வர், அனோஜன் ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாது தடுமாறியது. இருப்பினும்,லிவிங்ரன் பொறுப்பாக ஆடினார். இறுதியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லிவிங்ரன் 22, ரியூடர் 15, கனிஸ்ரஸ் 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கானமிர்தன் மூன்று, லோகதீஸ்வர், அனோஜன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி பிருந்தாபன், துவாரகசீலன், அமிதயன் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிருந்தாபன் ஆட்டமிழக்காது 43, துவாரகசீலன் 42, அமிதயன் 33 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிறப்பான முறையில் செயற்பட்ட தனுஜன் 24 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களையும், ஜக்ஷன் 5 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

91 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி, லோகதீஸ்வரின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 52 ஓட்டங்களைப் பெற்று இனிங்ஸ் மற்றும் 39 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் ஜன்சன் ஆறு கனிஸ்ரஸ் ஒன்பது ஓட்டங்களைப்பெற்றனர். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர்.பந்து வீச்சில் சிறப்பான முறையில் செயற்பட்ட லோகதீஸ்வர் 16.2 ஓவர்கள் பந்து வீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து ஏழு விக்கெட்டுக்களைச் சாய்த்தார். மற்றும் கானமிர்தன் 27 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார். (எஸ்.பி.)



லோகதீஸ்வர்



பிருந்தாபன்

# மாவட்ட மட்ட வீதியோட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தினால் நடத்தப்படும் மாவட்ட மட்ட மரதன் ஓட்டப்போட்டி எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

19 வயதுக்கு உட்டபட்டவர்கள், 19 வயதுக்கு மேற்பட்டவாகள் என இரண்டு பிரிவாக இந்தப் போட்டி இடம்பெறவுள்ளதாக யாழ்.மாவட்ட மெய்வனமைச் சங்கத்தின் தலைவர் ஆர்.ரமணன் அறிவித்துள்ளார்.

குறிப்பிட்ட போட்டியில் கலந்து கொள்பவர்களுக்கான விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள றிக்கோ விடுதியில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் ஆண்கள் என இருபாலாருக்குமான போட்டியாக இப்போட்டி நடைபெறவுள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்கள் தேவைப்படும் இடத்து, மெய்வல்லுநர் சங்கத் தலைவர் ரமணனிடம் தொடர்பு கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (93)

# பெண்களுக்கான கால்பந்து உழவர் ஒன்றியம் சம்பியன்

(கிளிநொச்சி)

கரைச்சிப் பிரதேச பெண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டியில் உருத்திரபுரம் உழவர் ஒன்றியம் அணி சம்பியனானது. கரைச்சிப் பிரதேச வருடாந்த விளையாட்டுப் போட்டியின் பெருவிளையாட்டுக்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் பெண்களுக்கான கால்பந்துப் போட்டி உருத்திரபுரம் உழவர் ஒன்றியம் விளையாட்டுக்கழக மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதன் இறுதிப் போட்டியில் உருத்திரபுரம் உழவர் ஒன்றியம் அணியும் ஜெயந்திநகர் மகாதேவி அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே உருத்திரபுரம் உழவர் ஒன்றியம் அணி ஆதிக்கம் செலுத்தியது. இறுதியில் 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று பிரதேச மட்ட சம்பியனாகியது. இப்போட்டி நிகழ்வில் கரைச்சிப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் எஸ். குமார், கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுச் செயலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள், விளையாட்டுக்கழகங்களைச் சேர்ந்த தலைவர்கள், வீராங்கனைகள், ஆதரவாளர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்துகொண்டு போட்டியைக் கண்டு களித்தனர். (93)

# தேசிய மட்ட மேசைப்பந்து யூனியன் கல்லூரி வீராங்கனை சாதனை

(கல்கிசை)

இலங்கை மேசைப்பந்தாட்ட சம்மேளனம் நடத்திய தேசிய மட்ட மேசைப்பந்தாட்டத் தொடரின் சிறந்த வீராங்கனைக்கான விருதை தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் எஸ். சிந்துஜா பெற்றுக்கொண்டார்.

இலங்கையின் 65ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கை மேசைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் பாடசாலை வீர, வீராங்கனைகளுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டி நடத்தப்பட்டது. இப்போட்டி கல்கிசை சென். தோமஸ் கல்லூரியின் உள்ளக விளையாட்டு அரங்கில் அண்மையில் நடைபெற்றது.

இதில் யாழ். மாவட்டம் சார்பாக 65 வீர,வீராங்கனைகள் பங்குகொண்டனர். இதில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி வீராங்கனை எஸ். சிந்துஜா 18 வயது கீழ் பிரிவு மற்றும் 21 வயது கீழ் பிரிவு, திறந்த போட்டி ஆகிய மூன்று போட்டிகளிலும் வெற்றிபெற்று, சிந்த வீராங்கனைக்கான விருதை வென்றார்.

இதேவேளை, ஆண்களுக்கான 15 வயதுப் பிரிவுப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி வீரர் ஜே. ஸ்டெலோன் வெற்றிபெற்றார். அத்துடன் 21 வயதுப் பிரிவுக்கான போட்டியில் யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த சஞ்ஜீவன் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்டார். (93)

# சண்டிலிப்பாய் பிரதேச மட்ட கரப்பந்து இறுதியில் ஆனைக்கோட்டை பிரதீப், ஒக்போட்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச மட்ட கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு ஒக்போட் மற்றும் ஆனைக்கோட்டை பிரதீப் அணிகள் தகுதிபெற்றுள்ளன.

சண்டிலிப்பாய் பிரதேச விளையாட்டு விழாவை முன்னிட்டு தற்போது பெருவிளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் ஆண், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஆண்களுக்கான முதலாவது அரையிறுதிப் பேரட்டியில், கலைஒளி அணியும், ஒக்போட் அணியும் மோதிக் கொண்டன. இதில் 25:9, 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஒக்போட் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற, மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் ஆனைக்கோட்டை பிரதீப் அணியும், சண்டிலிப்பாய் நவசக்தி அணியும் மோதிக் கொண்டன. இதில் 25:20, 25:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஆனைக்கோட்டை பிரதீப் அணி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இதேவேளை, பெண்களுக்கான இறுதிப் போட்டியில் பண்டத்தரிப்பு ஐக்கியம் அணியும், இளவாலை ஹென்றிஸ் அணியும் மோதவுள்ளன.

இறுதிப் போட்டிகள் விரைவில் நடைபெறும் எனவும், போட்டிகளில் பங்குகொள்ளவுள்ள அணிகள் தயார்படுத்திக் கொள்ளுமாறும் போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். (93)





# அப்சல் குரு தூக்கு:

## அருந்ததி ராய் எழுப்பிய 13 கேள்விகள்!

டிசம்பர் 13, 2001இல் இந்திய நாடாளுமன்ற வளாகம் பயங்கரவாதத் தாக்குதலுக்கு இரையான விவகாரத்தில் 5 பேர் சம்பவ இடத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டனர். அப்சல் குரு இவையனைத்தையும் திட்டமிட்டதாக தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.



அப்சல் குருவுக்கு தூக்குத் தண்டனை விதித்தபோது சமூக ஆர்வலரும் எழுத்தாளரும் புத்திஜீவியுமான அருந்ததி ராய் ஒரு கட்டுரை எழுதினார். அதில் அவர் 13 கேள்விகளை எழுப்பினார். அதன் தமிழ் வடிவம் இதோ:

**கேள்வி 1:** நாடாளுமன்றம் தாக்கப்படுவதற்கு சில மாதங்கள் முன்பே அரசும் பொலிஸும் நாடாளுமன்றம் தாக்கப்படலாம் என்று கூறிவந்துள்ளது. டிசம்பர் 12,2001இல் பிரதமர் வாஜ்பாய் கூட்டம் ஒன்றில் நாடாளுமன்றத்தின் மீது தாக்குதல் உள்ளதாக எச்சரிக்கை விடுத்தார். மறுநாளே தாக்குதல் நடந்தது. "மேம்பட்ட பாதுகாப்பு பயிற்சி" என்று கூறினார்களே அப்படியிருக்கும்போது வெடிபொருட்கள் நிரம்பிய கார்குண்டு எப்படி நாடாளுமன்ற வளாகத்திற்குள் நுழைந்தது?

**கேள்வி 2:** தாக்குதல் நடந்து முடிந்து சிலநாட்களிலேயே இந்த தாக்குதலை ஜைஷே மொகமட் மற்றும் லஸ்கர் இ தொய்பா திட்டமிட்டு நடத்தியுள்ளது என்று டில்லி பொலிஸின் சிறப்பு செல் கூறியது. இந்தத் தாக்குதலை தலைமை ஏற்று நடத்தியவர் மொகமட் என்பவர் என்றும் கூறியது. இவர் ஐ.சி.814 - விமானத்தை 1999ஆம் ஆண்டு கடத்தியவர் என்று கூறப்பட்டது. பிறகு இது சி.பி.ஐ-யால் மறுக்கப்பட்டது. இவையெல்லாம் கோர்ட்டில் சாட்சி பூர்வமாக நிரூபிக்கப்படவில்லை. டில்லி ஸ்பெஷல் செல்லிற்கு என்ன ஆதாரம் இருந்தது?

**கேள்வி 3:** இந்த அனைத்து தாக்குதலும் சிசிடிவி-யில் பதிவாகியுள்ளது. நாடாளுமன்றத்தில் இந்தப் படங்களைக் காட்டவேண்டும் என்று கபில் சிபல் கோரிக்கை வைத்தார். இவரது கோரிக்கையை ராஜ்யசபா துணை சபாநாயகர் நஜ்மா ஹெப்துல்லா ஆதரித்தார். மேலும் இந்தச் சம்பவம் குறித்து பல குழப்பங்கள் இருப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார். காங்கிரஸ் கட்சியின் தலைமை கொறடா கூறும் போது, "நான் பார்த்தபோது காரிலிருந்து 6 பேர் இறங்கினர். 5 பேர்தான் கொல்லப்பட்டனர். சிசிடிவி 6 பேர் இருந்ததைக் காட்டியது" என்றார். அது சரி என்றால் பொலிஸ் ஏன் 5 பேர்தான் காரில் இருந்ததாக கூற வேண்டும்? யார் அந்த 6ஆவது நபர்? அவர் எங்கே இப்போது? சி.சி.டி.வி. படங்களை அரசு தரப்பு சாட்சியமாக ஏன் கோர்ட்டில் போட்டுக் காட்டவில்லை? ஏன் அது பொதுமக்கள் பார்வைக்கு விடப்படவில்லை?

**கேள்வி 4:** இந்தக் கேள்விகள் எழுப்பப்பட்டபோது நாடாளுமன்றம் ஏன் ஒத்தி வைக்கப்பட்டது?

**கேள்வி 5** : டிசம்பர் 13இற்கு பிறகு சில நாட்கள் கழித்து பாகிஸ்தானின் தொடர்பிருப்பதாக சுமார் 5 இலட்சம் இராணுவ வீரர்களை எல்லைக்கு அனுப்பினர். துணைக்கண்டம் அணு ஆயுதப் போருக்கு தயாரானது போல்தான் இருந்தது. அப்சல் குருவை சித்திரவதை செய்து வாங்கப்பட்ட வாக்குமூலம் தவிர முரண்பட முடியாத சாட்சியம் என்ன இருந்தது?

**கேள்வி 6:** டிசம்பர் 13, நாடாளுமன்ற தாக்குதலுக்கு நீண்ட நாட்களுக்கு முன்பாகவே எல்லையில் இராணுவத்தினரைக் குவிக்கும் திட்டம் நடந்தேறியது என்பது உண்மைதானா?

**கேள்வி 7 :** சுமார் 1 ஆண்டு எல்லையில் இந்த இராணுவத்தினரின் இருப்புக்கு செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு? சரியாக கையாளத்தெரியாது வெடித்த கண்ணி வெடிகளினால் எவ்வளவு இராணுவத்தினர், பொது சனங்கள் உயிரிழந்தனர்? கிராமங்கள் வழியாக லொறிகளும், இராணுவத்தினரும் ரோந்தில் ஈடுபட்டதால் எவ்வளவு விவசாயிகள் தங்களது வீடுகளையும் விளை நிலங்களையும் இழந்தனர்? அவர்களது நிலங்களில் கண்ணி வெடிகள் வைக்கப்பட்டதா இல்லையா?

**கேள்வி 8:** எந்த ஒரு கிரிமினல் குற்ற விசாரணையிலும் ஒருவர் எப்படி குற்றவாளி என்று கண்டுபிடித்தோம் என்பதை பொலிஸ் கோர்ட்டிற்கு விளக்குவது அவசியம். எப்படி மொகமது அப்சல் குருவை பொலிஸ் பிடித்தது? ஸ்பெஷல் செல் கூறியது கிலானி மூலம் அப்சலைப் பிடித்தோம் என்று. ஆனால் அப்சல் குருவை பிடிக்குமாறு ஜம்மு - காஷ்மீர் பொலிஸுக்கு செய்தி அனுப்பப்பட்டது கிலானியை கைது செய்வதற்கு முன்பே! எப்படி ஸ்பெல் செல் அப்சல் குருவை இதில் குற்றவாளியாக சேர்த்தது?

**கேள்வி 9:** அப்சல் குரு சரணடைந்த தீவிரவாதி. இவர் தொடர்ச்சியாக பாதுகாப்பு படையினருடன் தொடர்பில் இருந்துள்ளார், குறிப்பாக சிறப்பு அதிரடிப்படையினருடன் இவர் அடிக்கடி தொடர்பில் இருந்துள்ளார் என்பதை நீதிமன்றங்களே ஒப்புக் கொண்டுள்ளன. இவ்வாறு அவர்களது கண்காணிப்பின் கீழ் இருந்த அப்சல் குரு எப்படி இவ்வளவு பெரிய சதித் திட்டத்தை, தீட்டினார்?

**கேள்வி 10:** சிறப்பு அதிரடி படையின் சித்திரவதைக்கூடத்தில் சிக்கிய, அவர்களுடன் அடிக்கடி தொடர்புடைய, அவர்களது கண்காணிப்பின் கீழ் உள்ள அப்சல் குருவை வைத்து லஷ்கர் இ தொய்பா, ஜைஷீ அமைப்புகள் தாக்குதலை திட்டமிட்டிருக்க முடியுமா?

**கேள்வி 11:** அப்சல் குரு கோர்ட்டில் கூறும்போது, அப்சல் குருவை மொகமட் என்பவருக்கு அறிமுகம் செய்தவர் தாரிக் அவர்தான் மொகமட்டை டில்லிக்கு அழைத்து செல்லக் கூறினார் என்றார். தாரிக் அதிரடிப்படையில் வேலை செய்பவர். பொலிஸ் குற்றப்பத்திரிக்கையில் தாரிக் இருக்கிறார். ஆனால் அவர் எங்கே?

**கேள்வி 12:** டிசம்பர் 19, 2001இல் தானே பொலிஸ் கமிஷனர் எஸ்.எம். ஷங்கரி, நாடாளுமன்ற தாக்குதலில் சுட்டுக் கொல்லப்பட்டவர்களில் ஒருவர் மொகமது யாசின் படே மொகமட் என்றும், இவர் லஸ்கரைச் சேர்ந்தவர் என்றும், அவர் 2000 ஆம் ஆண்டே மும்பையில் கைது செய்யப்பட்டார் என்றும் இவரை உடனடியாக ஜம்மு பொலிஸூடம் ஒப்படைத்ததாகவும் கூறினார். இவர் கூறுவது உண்மையெனில் ஜம்மு - காஷ்மீர் பொலிஸ் காவலில் இருந்த ஒருவர் நாடாளுமன்ற தாக்குதலில் ஈடுபட்டுள்ளாரா? இது தவறு மொகமது யாசின் எங்கே?

**கேள்வி 13:** கொல்லப்பட்ட 5 பயங் கரவாதிகள் யார் யார்? ஏன் இன்று வரை நமக்கு அது பற்றி கூறப்படவில்லை?



## நான்கு வயதில் 62 கிலோ!

சீனாவைச் சேர்ந்த இந்த நான்கு வயதுச் சிறுவனின் பெயர் சியு கோ. இவன் பிறக்கும்போது மற்ற குழந்தைகளைப் போல் 2.6 கிலோ எடையுடன் தான் பிறந்துள்ளான். ஆனால், இப்போது இவனது எடை 62 கிலோ. அதாவது, நான்கு வயதில் மற்ற குழந்தைகள் எவ்வளவு எடை இருக்குமோ அதை விட, ஐந்து மடங்கு அதிக எடையுடன் வலம் வருகிறான் இந்த சிறுவன்.

இந்த சிறுவனுக்கு சாப்பிடுவதுதான், பொழுதுபோக்கு. நினைத்த நேரத்தில், நினைத்த தின்பண்டங்கள் கிடைக்க வேண்டும். இல்லையெனில் ரணகளம்தான். இவனது பெற்றோர் பல மருத்துவர்களிடம், அழைத்துச் சென்று காண்பித்தபோதும், "இவனுக்கு தேவையற்ற, ஓமோன்கள் எதுவும் இல்லை..." என கூறி அனுப்பி வைத்து விட்டனர்.

. சியு கோவின் தாயும், தந்தையும், "நாங்கள் இருவருமே, சாதாரண எடை உள்ளவர்கள் தான். இவன் தான், இப்படி அநியாயத்துக்கு குண்டாகி விட்டான். ஆனாலும், எதிர்காலத்தில் மிகப் பெரிய மல்யுத்த வீரனாக விளங்குவதற்கு வாய்ப்பு உள்ளது..." என்கின்றனர்.

# மனமும் மனிதனும்

பாரதி, தமிழ்ச்சாதி சாகாவரம் பெற்ற அமரத்தன்மை வாய்ந்தது என்று உரத்த குரலில் உலகுக்குப் பிரகடனம் செய்தான்.

சேரன் தம்பி இளங்கோ வடித்த சிலப்பதிகாரம், வள்ளுவன் வழங்கிய உலகப் பொதுமறையாம் திருக்குறள், காப்பியக் கவிஞன் கம்பன் வடித்த, காலங்களைக் கடந்து வாழும் ராமகாதை ஆகிய இந்த மூன்று இலக்கியங்களும் இருக்கும் வரை தமிழினம் சாகாவரம் பெற்றுச் சிறக்கும் என்று சத்தியம் செய்தான் பாரதி என்னும் பைந்தமிழ்ச் சாரதி.

எண்ணற்ற இலக்கிய படைப்புகள் கொட்டிக் கிடக்கும் தமிழில் சிலம்பையும் வள்ளுவத்தையும் கம்பனையும் மட்டும் தனியாகத் தேர்ந்தெடுத்துப் பாரதி பட்டியலிட்டது ஏன்?



சிலப்பதிகாரத்தின் மொழி வளமும் நடையழகும் பாரதியின் நெஞ்சை அள்ளியது. திருக்குறளின் உறுதியும் தெளிவும் பிரிவும் ஆழமும் பாரதியின் நெஞ்சைப் பரவசப்படுத்தியது. எல்லையில்லாத பரம்பொருளின் இருப்பைப் படம் பிடித்துக் காட்ட காப்பியத்தைக் கருவியாக்கிக் கொண்ட கம்பரின் நேர்த்தியைப் புதுயுகப் புலவன் புரிந்து பாராட்டியதும் உண்மை.

இம்மூவரைப் பாரதி பரவசமுற்றுப் பாராட்டியதற்கு இன்னமும் கூட சில காரணங்கள் இருக்கலாம். ஏதேனும் ஒரு சமயம் சார்ந்து நின்று, பிற சமயங்களைச் சிறுமைப்படுத்தாமல் அனைத்துச் சமயங்களையும் அரவணைத்துக் கொள்ளும் சமயப் பொது நோக்கு இந்த மூவருக்கும் இருந்ததை பாரதி தேர்ந்து தெளிந்து மகிழ்ந்திருக்க வேண்டும்.

தன் வாழ்காலத்தில் மெல்ல மெல்ல வேர்விட்டு வளர்ந்து வரும் சமயப் பூசலைப் பார்த்து மனம் சலித்த பாரதி, இந்தச் சமூகப் பணிக்கு சரியான மருந்து சிலம்பிலும் குறளிலும் கம்பனிலும் இருப்பதைக் கண்டு அவற்றின் பக்கம் தமிழர்தம் பார்வையைத் திருப்ப முயன்றிருக்கிறான்.

**('மனமும் மனிதனும்' என்ற நூலில் தமிழருவி மணியன்)**

3 - (2)

# பத்தாண்டுகளின் பத்து இயக்குனர்கள்

சார்லஸ்

## ஸ்டீவன் ஸோடர்பெர்க்



"எரின் புரோகொவிச்" படம், ஒரு வாழும் நிஜப் பெண்ணையும் உண்மைச் சம்பவங்களையும் அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்டது. ஜூலியா றொபேர்ட்ஸின் பிறவிப் பயன் அந்தக் கதாபாத்திரத்தில் நடித்ததுதான் என்று நான் நினைக்கிறேன்.

இருமுறை விவாகரத்து




செய்து, மூன்று குழந்தைகளோடு, வேலையில்லாமல், செலவுக்குப் பணமில்லாமல் அல்லாடும் எரின், அவளுடைய முன்கோபத்தாலும், வாயாடித்தனத்தாலும், கவர்ச்சியாக உடுத்துவதாலும், சபை நாகரிகமில்லாத நடத்தையாலும் அனைவராலும் வெறுக்கப்படுபவள். தனது காரில் வந்து மோதி தன்னையும் காயப்படுத்திய ஆளிடமிருந்து நஷ்டஈடு பெறுவதற்காக ஒரு சட்ட நிறுவனத்தை நாடுகிறாள். (அந்த விபத்துக் காட்சி ஒரு அற்புதம், அத்தனை தத்ரூபமாக வேறு எந்தப் படத்திலும் வந்ததில்லை) கோர்ட்டில் அவளுடைய நடத்தை காரண-மாக அவள் தரப்பு நியாயம் எடுபடாமல் போகிறது. எங்கும் வேலை கிடைக்காத நிலையில், நஷ்டஈடு வாங்கித்தராததையே காரணமா-கச் சொல்லி அடித்துப்பேசி அந்த சட்ட நிறுவனத்திலேயே ஒரு தற்காலிக வேலையில் சேர்ந்துவிடுகிறாள் எரின். அங்கு எதேச்சையாக, ஒரு சாதாரண நில விற்பனை தொடர்பான வழக்கின் கோப்புகளைப் பார்க்கும் எரின், அதிலிருக்கும் முரண்பாடு காரணமாக விசாரிக்கத் தொடங்கி, மெல்ல மெல்ல ஈர்க்கப்பட்டு, தீவிரமாகத் தோண்டித் தோண்டி ஒரு பூதாகரமான பிரச்சினையைக் கண்டடைகிறாள்.

ஒரு பெரிய இரசாயன தொழிற்சாலை பல ஆண்டுகளாக பூமிக்கடியில் கழிவு-களைப் புதைத்ததால், அதிலிருந்து நச்சு வெளியேறி நிலத்தடி நீரில் கலந்துவிட்டது. அந்தப் பகுதியில் வசிக்கும் பலரும், பெரியவர்கள் முதல் சிறுவர்கள் வரை மலட்டுத்தன்மை முதல் கேன்ஸர் வரை பலவிதமான தீராத நோய்களுக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த தொழிற்சாலை நிர்வாகிகள் தாங்களே டாக்டர்களை நியமித்து, இலவச மருத்துவ உதவிகளை அந்த மக்களுக்கு வழங்கி, அவர்களுடைய நோய்களுக்கான உண்மையான காரணம் தெரிந்துவிடாமலே வைத்திருக்கிறார்கள். மேலும் அவர்களது வீடுகளையும் நிலங்களையும் தங்கள் நிறுவனத்துக்கு விற்றுவிட்டு வெளியேறும்படி வற்புறுத்துகிறார்கள்.

எரின் தனது விடா முயற்சியால் ஆதாரங்களைத் திரட்டி, பாதிக்கப்பட்டவர்களை ஒவ்வொருவராகச் சந்தித்து, உண்மையை விளக்கி, அவர்களது நம்பிக்கையைப் பெற்று, தான் சார்ந்த சிறிய சட்ட நிறுவனத்தின் மூலம், பலநூறு பேருக்கு அமெரிக்க வரலாற்றிலேயே அதுவரை இல்லாத மிகப் பெரிய நஷ்டஈட்டை வாங்கித்தருகிறாள். அது ஒரு உண்மைச் சம்பவம் என்று தெரியாவிட்டால் நம்பவே முடியாத அளவுக்கு, ஒரு எளிய பெண்ணால் நிகழ்த்தப்பட்ட மிகப் பெரிய



சாதனையின் கதை. தீவிரமான விஷயத்தை நகைச்சுவையோடு சொன்ன படம்.

எரின் ஊர்ப் பிரச்சினைக்காக அலைந்தபடி இருப்பதால் அவளது குழந்தைகள் சிரமத்துக்குள்ளாவதும், பக்கத்து வீட்டுக்குக் குடிவரும் ஒரு ஹிப்பி அவளைக் காதலிப்பதும், அவனே முன்வந்து குழந்தைகளை அவளைவிடச் சிறப்பாகப் பார்த்துக்கொள்வதும் மிக அழகிய துணைக் கதை. ஒரு கட்டத்தில் காதலன், குடும்பத்துக்காக அவள் இந்த வேலையை விட்டுவிட வேண்டும் என்று சொல்கிறான். அதற்கு எரின், "என் வாழ்க்கையில் முதல்முறையாக மனிதர்கள் என்னை மரியாதையோடு நடத்துகிறார்கள், நட்பாகச் சிரிக்கிறார்கள், நான் அவர்கள் பிரச்சினையைத் தீர்ப்பேன் என்று நம்புகிறார்கள்.. இதை நான் எப்படி இழக்கமுடியும்?" என்கிறாள். எரினின் நடவடிக்கைகளால் ஆரம்பத்தில் எரிச்சலடையும் குடும்பத்தினர் இறுதியில் அவளைப் புரிந்துகொள்வது நெகிழ்ச்சியானது.

ஸோடர்பெர்க் எந்த அலங்காரங்களும் மிரட்டல்களும், இல்லாமல் மிக யதார்த்தமாக, உண்மையையும் உணர்ச்சிகரத்தையும் மட்டுமே நம்பி எடுத்த நல்ல படம் இது.

**(தொடரும்)**

# மூலிகைகளின் அரசி



மூலிகைகளின் அரசி என அழைக்கப்படும் "துளசி" மிகத் தொன்மையான மற்றும் புனிதமான மூலிகையாகும். உடல், மனது மற்றும் ஆன்மாவுக்கு குணமளிக்கும் அருமருந்தாக ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கும் மேல் இருந்து வருகிறது.

எண்ணற்ற ஆரோக்கிய பலன்களையும் வழங்கும் குணம் கொண்ட துளசி, தனது மாறுபட்ட குணமாக்கும் தன்மை காரணமாக ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஆயுர்வேத சிகிச்சை முறையின் பயன்பாட்டில் உள்ளது. உடலின் மாறுபட்ட பல்வேறு செய்முறைகளை சமநிலைப் படுத்தும் அழுத்த எதிர்ப்பியாகவும் கருதப்படுகிறது.

துளசியின் அற்புதமான வாசனையும், துவர்ப்புச் சுவையும் மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும் சக்தி கொண்டது. ஆயுர்வேதத்தில் "வாழ்க்கையின் அமுதமாக" கருதப்படும் துளசி, மனிதனுக்கு நல்ல ஆரோக்கியத்தைக் கொடுத்து நீண்ட நாள் உயிர் வாழ வழி செய்வதாகவும் நம்பப்படுகிறது.

ஆயுர்வேத மருத்துவத்தில் பல்வேறு வகையான பிணி-களைத் தீர்க்க துளசிச் சாறு பயன்படுத்தப்படுகிறது. மூலிகை தேநீர், உலரவைக்கப்பட்ட பொடி, பசுமையான இலை, நெய்யுடன் கலந்து தரப்படுவது என பல்வேறு வடிவங்களில் துளசியை உட்கொள்ளலாம்.

கற்பூர துளசியில் இருந்து பிரித்தெடுக்கப்படும் எண்ணெய், மருத்துவம் மற்றும் அழகு சாதன பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது. இதுதவிர, சரும நலனுக்கான தயாரிப்பு பொருள்களிலும் பயன்படுத்தப்படுகிறது.

**தாவரவியல் பெயர்:** ஓசிமம் சாங்டம்,

**அறிவியல் பெயர்:** ஓசிமம் டெனுய்.'.புளோரம்.

**துளசியின் முக்கிய பயன்கள்:**

- பக்டீரியாவுக்கு எதிராக செயல்பட்டு சரும தடிப்பு, சரும அரிப்பு, சொறி, முகப்பரு மற்றும் பிற சரும நோய்களை குணப்படுத்தும் தன்மை கொண்டது.
- விஷத்தன்மையற்றது, இரசாயன ரீதியாக மாற்றம் பெறாத தயாரிப்பு பொருளாகும்.
- சருமத்தை ஈரப்பதத்தோடு வைக்கிறது.

# நோக்கியா - கிராமத்தின் பெயர்!



NOKIA

இரண்டாம் உலகப் போரின்போது, குண்டு வீசுவதற்கு முதல் நாள், நாளை நடக்கப்போவதை அறியாமல் நான்கு வாலிபர்கள், ஹிரோஷிமாவின் ஒரு சிறிய கிராமத்தில் கூடி அமர்ந்துகொண்டு உலகம் முழுவதும் கம்பியில்லாமல் பேசுவதற்கு ஒரு கருவியை கண்டுபிடிக்கவேண்டுமென்று திட்டமிடுகிறார்கள். ஆனால் நடந்தது வேறு. அவர்களும் அணுகுண்டு வீச்சில் கொல்லப்படுகிறார்கள். அந்த நான்கு வாலிபர்களும் உட்கார்ந்து திட்டமிட்ட கிராமத்தின் பெயர்தான் நோக்கியா. இன்று அவர்கள் கண்ட கனவு நனவாகிவிட்டது. உலகம் முழுவதும் இளைஞர்களின் கையில் இடம்பெற்றிருக்கின்றது அந்த ஊரின் பெயரிலேயே அமைந்த செல்போன்!

# மகுடி இசையும் பாம்புச் செவியும்



- அருண் நரசிம்மன்

நம்மில் பலருக்கு மகுடி இசையை கேட்டுத் தான் பாம்பு படம் எடுக்கிறதா என்று சந்தேகம் இருக்கலாம். இப்படி சந்தேகப்பட்டு வேறு விளக்கம் தேடுவதற்கு காரணம் பாம்பிற்கு நமக்கு வெளிப படையாக தெரிகிறாற்போல் காது இல்லை. எப்படி அது மகுடி இசையெல்லாம் கேட்கும்?

அதுதான் பாம்புக் காது என்பது. நம் கண்ணுக்கு தெரியாது. ஆனால் அதுக்கு கேட்கும். 'அண்ணே அண்ணே நாகராஜ் அண்ணே' என்று கூப்பிட்டால் ராமநாராயணன் படத்தில் ஓடிவருகிறதல்லவா.

அதுவரை விளங்காத ஒரு விடயத்தை விளக்கிக் கொள்ள பல சம சாத்தியமுள்ள கருத்தாக்கங்கள் ஏற்படுமாயின், அதில் எது எளிமையானதோ, அதையே முதலில் சரியான விளக்கமாய் தேர்வு செய்யவேண்டும். இது 'ஒக்காமின் ரேஸர்' (Occam's Razor) என்கிற சித்தாந்தம். அறிவியல் என்றில்லாமல், அறிவுத்துறை எதிலும் இச் சித்ந்தத்தை மேற்படி வகை 'பல்-விளக்கக்' குழப்பங்கள் தோன்றுகையில் வழிகாட்டியாய் உபயோகிப்பார்கள். மகுடியும் பாம்புச் செவியும் விடயத்திற்கு 'ஒக்காமின் ரேஸரை' வைத்து வேறு எளிய விளக்கமும் கொடுக்க முடியும்.

ஒருவேளை மகுடியை ஊதுவதால் இல்லாமல், பாம்பாட்டி அப்படி இப்படி மகுடியை ஆட்டுவதை கண்ணால் பார்த்து பாம்பு ஆடுகிறதோ? ஒரு தற்காப்பிற்கு எதிரியை (மகுடியை) அப்படியே படம் எடுத்து பயம் காட்டுகிறது என்று வைத்துக் கொள்ளலாமே. அப்ப பாலநாகம்மா, நீயா, வெள்ளிக்கிழமை விரதம் என்று, மகுடி டான்ஸெல்லாம் உடான்ஸா?

சமீபத்திய ஆராய்ச்சி இவ்விடயத்தில் என்ன சொல்கிறது? மேலே சொன்ன அனைத்தையும் தூக்கியடிப்பது போல, பாம்பிற்கு செவி உண்டு என்கிறது. அமெரிக்க பல்கலைக்கழக ஆராய்ச்சியாளார்கள் லியோ வான் ஹெம்மன், போல் ·.ப்ரெய்டெல் மற்றும் புரூஸ் யங் தங்கள் ஆராய்ச்சி முடிவில் இரை நகர்வதை பாம்பு தன் காதால் கேட்டுத்தான் துரத்திப்பிடிக்கிறது என்று ஆதாரத்துடன் நிரூபிக்கிறார்கள்.

பாம்பிற்கு வெளியே தெரிகிறாற்போல் நம்மைப போன்ற காதுகளும், மடல்களும் இல்லை. டிம்·பானிக் சவ்வும், சார்ந்த காதும் (tymphanic ear) கிடையாது எனலாம். ஆனால் நம் உள்நாக்கு போல, அதற்கு உட்காது உண்டாம். இந்த உட்காதுடன் பாம்பின் தாடைக்கு எலும்புத்தொடர்பு இருக்கிறது. (படத்தில் காட்டியுள்ளபடி)

பாம்பின் தாடை நுண்ணியமாக அதிர்கையில், இந்த ஸ்டேப்ஸும் அதிரும். இந்த அதிர்ச்சியை அதன் மூளை 'கேட்கிறது'. ஸ்டேப்ஸ் என்னும் எலும்பு நம் காதிலும் உண்டு (உடம்பிலேயே மிகச் சிறிய எலும்பு). நமக்கு அது காற்றின் அழுத்த மாறறங்களை, அதிர்வுகளை உணர்கிறது. ஆனால் இவ் விரண்டு 'கேட்டல்'களுக்கும் வித்தியாசம், பாம்பினது காது பிரதானமாய் நில அதிர்வுகளை உள்வாங்கிக் 'கேட்கிறது'. நமது காற்றில் ஏற்படும் அழுத்த மாற்றங்களிலானான ஒலி அதிர்வுகளைக் 'கேட்கிறது'.

பாம்பு நிலத்தில் ஊர்கையில் தூரத்தில் எலி ஓடினால் போதும். அந்த நுண்ணிய அதிர்வுகளை கூட தாடை உணர்ந்து, தானும் ஆடி, தன்னுடன் ஸ்டேப்ஸையும் ஆட்டி, மூளைக்கு சிக்னலை விரட்டி எலியை மாட்டி விடும்.

எலிமுதல் எது நகர்ந்தாலும் அது குளத்தில் கல் போட்டால் பரவுவது போல நொடிக்கு 50 மீற்றர் வேகத்தில் அதிர்வுகளை மண்ணில் பரப்பும் (ஒப்பிட்டுகொள்ள காற்றில் ஒலி அலைகளின் வேகம் நொடிக்கு 330 மீற்றர்). அந்த அதிர்வுகளின் வீச்சு (amplitude) மிகவும் குறைவு; ஒரு மில்லிமீற்றரில் ஆயிரத்தில் ஒரு பாகம். ஆனாலும் அது பாம்பிற்கு கேட்குமாம். பாம்புச்செவி என்று சரியாகத்தான் சொன்னார்கள்.

இதில் மற்றொரு பிரமிப்பு இருக்கிறது. நாம் காற்றில் ஒலி அதிர்வுகளை அரை நொடி, அரைக்கால் நொடி தாமதத்தில் ஒரு காதிலும் அடுத்த காதிலும் விழுவதை வைத்து சத்தம் வரும் திசையை உணர்ந்து திரும்பி, சரேல் என்று வந்த ஆட்டோவில் மோதாமல் தப்பி றோட்டைக் கடப்போம். மனித, மிருக, பறவை இனங்கள் அனைத்தும் இப்படிச் செய்யும். பாம்பும் நிலத்தில் தாடை பதித்து, குறைவான வீச்சிலிருந்தும், சத்தத்தின் திசையை, ஊற்றை, இரையை கண்டுபிடித்து விடுமாம். இதை பயோமெக்கானிக்ஸ், நேவல் என்ஜினியரிங், நியூரோனல் சேர்க்கிற் என்று பல நிபுணத துவங்களை வைத்து ஆராய்ச்சிக்கட்டுரையில் நிருபிக்கிறார்கள்.

சுருக்கமாக, பயோமெக்கானிக்ஸ் தாடையும் ஸ்டேப்ஸும் எப்படி இயங்குகிறது என்பதை அனுமானிக்க நேவல் இன்ஜினியரிங் மண்ணை திரவமாக கருதி அதன் அலைகளை அனுமானிக்க, நியூரோனல் சேர்க்கிற் ஸ்டேப்ஸ் அதிர்கையில் அது எவ்வாறு மூளைக்கு சிக்னல் கொடுக்கிறது என்று அனுமானிக்க.

இந்த ஆராய்ச்சியிலிருந்து அறிவது நில அதிர்வுகளை தன் உடலின் அதிர்வுகளாய் உணர்ந்து, தாடைக்கருகில், உட்செவியின் எலும் பில் உணர்ந்து அதை மூளைக்கு அனுப்பி, பாம்பு சப்தங்களை, இரையை, எதிரியை, 'கேட்கிறது'. மனிதர்களைப் போல காற்றின் அழுத்த பேதங்களை ஒலி அலைகளாய் பாம் புகள் நேரடியாய் உள்வாங்குவதில்லை.

இங்கு ஒரு தகவலை விளக்கிக் கொள்வோம். ஒவ்வொரு சப்தத்திற்கும், அதன் ஒலி அதிர்வு எண்ணும், அதை எவ்வித டெஸிபல் தீவிரத்தில் வெளிப்படுத்தலாம் என்பதும் இரு வேறு விடயஙகள். நாம் (மனிதர்கள்) 1000 ஹெர்ட்ஸ் ஒலி அதிர்வு எண்ணுடன், 30 டெஸிபல்கள் தீவிரத்துடன் வெளிப்படும் சப்தத்தையும், அதனினும் குறைவான 30 ஹெர்ட்ஸ் ஒலிஅதிர்வு எண்ணுடன் ஆனால் 80 டெஸிபல்களில் வெளிப்படும் சப்தத்தையும் ஒரே 'அளவிலான' ஒலியாகவே காதுகளில் கேட்போம். அதாவது, அதிர்வு எண்குறை கையில் நமக்கு அவ்வொலியை கேட்கும் திறனும் குறை கிறது. அதனால், குறைவான அதிர்வு எண்ஒலியை அதிகமான டெஸிபல்களில் கொடுத்தால் தான் கேட்க இயலும். நம் பேச்சு ஒலிகள் சாதாரணமாய் 3000 முதல் 4000 ஹெர்ட்ஸ களில் ஒலிக்கும். நம் மால் 50 ஹெர்ட்ஸ் ஒலி அதிர்வு எண்ணுடன், 30 டெஸிபல் தீவிரத்துடன் வெளிப்படும் சப்தத்தை கேட்க முடியாது. ஆனால், அதே 30 டெஸிபல் தீவிரத்திற்கு, 200 ஹெர்ட்ஸில வெளியாகும் சப்தத்தை கேட்கமுடி யும். ஒவ்வொரு அதிர்வு எண்ணிற்கும், 'குறைந்த பட்ச கேளல்' (threshold hearing) என்பது டெஸி பல் தீவிரத்துடன் பிணைந்துள்ளது.




Source: PRL 100, 048701 (2008), 1 Feb 2008 [1]

இதையே பாம்புகளுக்கும் பொருத்தலாம். ஆனால் அவைகளின் கேளல் என்பதே உடகாது வழியாக தாடை அதிர்வுகளால். காதுகளின் வெளிககாது சவ்வுகளால் இல்லை. பாம்புகள் நிலத்தில் ஊர்வதால், நில அதிர்வுகள் பொதுவாக குறைவான அதிர்வு எண்களில் தீவிரமாய் வெளிப்படும் என்பதையும் மனதில் கொள்ளுங்கள்.

பரிசோதனையில் முதலில் தெளிந்தது பாம்பினால் நிச்சயமாய் காற்றின் வழி பரவும் ஒலியலைகளை நேரடியாகக் கேட்கமுடியவில்லை. ஆனால் காற்றில் ஏற்படும் ஒலியை, அது நிலத்தில் அதிர்வாய் பரவினால் கேட்க இயலும் என்பது தெரிகிறது. நாம் பேசுவதை பாம்புகளால் 'கேட்க' முடியாது. ஆனால், எவ்வளவு சப்தப் படுத்தாமல் மெதுவாய் அதன் அருகில் தரையில் நடந்தாலும், கேட்டுவிடும் பாம்புச் செவிக்கு


இப்போது மகுடி இசைக்கு வருவோம்.

ஒப்பிடுவதற்கு, நம் இசையில், 'ஒரு கட்டை' ஸ்ருதியில், 'ட்ஜம் (ஸ ஸ்வரம்) கிட்டத்தட்ட 261 ஹெர்ட்ஸ்கள் அடுத்த மேல் ஸ்தாயி (தரஸ்தாயி என்பார்கள்) ஸா ஸ்வரம், கிட்டத்தட்ட 523 ஹெர்ட்ஸகள். கீழ் ஸ்தாயி (மந்த்ரஸ்தாயி) 'ட்ஜம் 130ஹெர்ட்ஸ். மேலே குறிப்பிட்ட ஆராய்ச்சி முடிவுகளை பரிசீலிக்கையில், பாம்பினால், காற்றில் எழும் ஒலியலைகளை நேரடியாகக் கேட்க முடியாது என்பது புரிகிறது. அவ்வொலிகள் அருகில் நிலத்தில் பட்டு, நில அதிர்வுகளாய் பாம்பின் உட்செவியை அடையலாம். ஆனால், அதுவும் பாம்பினால் நன்றாகக் கேட்பதற்கு, 80 ஹெர்ட்ஸ் முதல் 120 ஹெர்ட்ஸ் வரையில் இருக்கவேண்டும். அதாவது, மந்த்ரஸ் தாயிஸாவிற்கும் குறைவான ஒலி அதிர்வு எண்ணுடனான சப்தம். மகுடியினால் இதை உருவாக்கி வெளிப்படுத்தமுடியாது.

அதனால் காற்றில் வரும் மகுடி இசையை அதனால் கேட்கமுடியாது என்று கருதலாம்.

மேலும், உட்காது இருந்தாலும், ஊர்கையில் தான் பாம்பின் அச்செவி நில அதிர்வுகளை உணரகிறது என்றும் தெரிகிறது. தலையை நிலத்திலிருந்து தூக்கிவிட்டால், பாம்பிற்கு இந்தக் காது பயனற்றுப் போய்விடுகிறது.

பாம்பாட்டியும் குந்திக்கொண்டு முதலில் காலால தரையை தட்டி ஊரும் பாம்பின் 'காதில் விழச் செய்வார்'. சரேல் என்று நிமிர்ந்து பார்க்கையில்





மகுடி ஊதி, ஆட்டுவார். பாம்பு படமெடுத்து தொடரும். அது படமெடுப்பது, தான் கண்ணால் கண்ட எதிரியை (மகுடியோ, மூடியோ, நாமோ) தற்காப்பிற்காக பயமுறுத்தி தன்னை நெருங்கவிடாமல் செயவதற்கு.

ஆகையால், கட்டுரையின் முதலில் நாம் ஊகித்த காரணம் சரிதான் என்று நினைக்கத் தோன்றுகிறது.

அட, இவ்வளவும் சொல்லிவிட்டு 'கேட்கமுடியாது என்று கருதலாம்', 'நினைக்கத் தோன்றுகிறது' இப்படி பின்னடிக்கிறீர்களே என்றால், கட்டுரையை வாசித்துவிட்டு நாளைக்கு நான் சொன்னேன் என்பதற்காக தெருவில் பாம்பாட்டியின் பிழைப்பைக் கெடுத்துவிட்டீர்களென்றால்... சும்மா கிடந்த மகுடிய ஊதிக் கெடுத்தமாதிரி ஆகிவிடுமே!

நாம் காற்றில் ஒலி அதிர்வுகளை அரை நொடி, அரைக்கால் நொடி தாமதத்தில் ஒரு காதிலும் அடுத்த காதிலும் விழுவதை வைத்து சத்தம் வரும் திசையை உணர்ந்து திரும்பி, சரேல் என்று வந்த ஆட்டோவில் மோதாமல் தப்பி றோட்டைக் கடப்போம். மனித, மிருக, பறவை இனங்கள் அனைத்தும் இப்படிச் செய்யும். பாம்பும் நிலத்தில் தாடை பதித்து, குறைவான வீச்சிலிருந்தும், சத்தத்தின் திசையை, ஊற்றை, இரையை கண்டுபிடித்து விடுமாம்.

# டெங்கு நோய்த் தாக்கம்; தெரிந்து கொள்ளவேண்டியவை




**நுளம்பு கடிப்பதைத் தவிர்த்தல்**

டெங்கு நுளம்பு பகலில் கடிக்கும். அதிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவேண்டும். முழு நீள மேற்சட்டை மற்றும் கால்களைப் பாதுகாக்கும் வகையில் உடை அணிதல் வேண்டும்.

நுளம்பு வராமல் தடுக்கும் மருந்துகளைப் பாவித்தல், நுளம்புச் சுருள் மற்றும் அழிக்கும் இரசாயனப் பொருட்களைப் பாவித்தல்.

நுளம்பு வலைகளைப் பயன்படுத்தல் (குறிப்பாக குழந்தைகள், சிறார்களுக்கு) Permithrin மருந்து தெளித்த நுளம்பு வலைகள் மற்றும் கதவு யன்னல் வலைகளைப் பயன்படுத்தல்.

நோய்ப்பரம்பலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்தல், நோயாளியிடமிருந்து ஏனையோருக்கு பரவாமல் நடவடிக்கை எடுப்பது அவசியம்.

**நுளம்புகள் பெருகுவதைத் தடுத்தல**

டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் ஒவ்வொரு வீட்டின் சுற்றுப் புறத்திலுள்ள நீர் தேங்கும் இடங்களில் இருந்து பரவுகின்றன.

அதனைத் தடுப்பதற்கு நாம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் வருமாறு:

வீட்டுச் சூழலிலுள்ள நீர்தேங்கும் நிலைகளை ஒழித்தல், வீட்டிற்குள் வைக்கும் சாடிகள், கோப்பைகள் போன்றவற்றுள் நீர் நிலைத்து நிற்காமல் சுத்தப்படுத்தல், தண்ணீர் சேமித்து வைக்கும் பாத்திரங்கள் மற்றும் வாளிகளை மூடி வைத்தல், பாவித்து எறிந்த போத்தல்கள் மற்றும் பாத்திரங்களை சுற்றுச்சூழலிலிருந்து அகற்றி அழித்தல்.

மேலே தெரிவிக்கப்பட்டிருந்த முறைகளைக் கவனத்தில் எடுத்து நாம் அனைவரும் செயற்பட்டால் டெங்கு நோயிலிருந்து எம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாம். (முற்றும்)

# பல்கலை மாணவர் விரைவில் விடுதலை

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் விரைவில் விடுதலையாவர் என்று யாழ். கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், மாணவர்களை விளக்கேற்றி, மீண்டும் பயங்கரவாதச் செயலுக்கு தூண்டும் ஒரு சிலரால் இவர்கள் தற்போது கல்வியைத் தொடராது சில தடங்கலக்கு ஆளாகியுள்ளனர். இவர்களுக்கான புனர்வாழ்வு விரைவில் முடிவு பெற்று சிறந்த பிரஜைகளாக வருவார்கள். தற்போது இவர்களுக்கான மனமாற்றுப் பயிற்சியே நடைபெறுகின்றது. மாணவர்களை பகடைக்காயாக வைத்திருக்கும் ஒரு சிலரின் நடவடிக்கையே இந்த ஆர்ப்பாட்டம் எல்லாம் பல்கலைக்கழகமானலும் சரி பாடசாலையானாலும் சரி எல்லாம் ஒரே விதமாகத்தான் பார்க்கப்படுகின்றது. வேற்றுமை எதுவும் இருக்காது. இது பொதுமக்களுக்கும் நன்கு தெரியும்.

மாணவர்களின் கல்விக்காகத்தான் உடனடியாக பல்கலைக்கழகத்தை திறக்கச் சொன்னோம். தற்போது பல்கலைக்கழகம் திறம்பட நடைபெறுவதால் மாணவர்கள் தான் நன்மையடைவார்கள் என்றார். (இ)



இலங்கை பிரதம சாரணிய ஆணையாளர் பேராசிரியர் ரி.கே.என். டி. சில்வா தலைமையிலான குழுவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை வட மாகாண ஆளுநர் ஜிஏ.சந்திரசிறியை யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்து சாரணிய சங்கத்தினால் வட மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடினார்கள். இதன்போது பிரதி பிரதம சாரணிய ஆணையாளர் சிராஷ்லி, வடக்கு கிழக்கு மாகாணத்திற்கான விசேட ஆணையாளர் முகீத், சாரணிய தலைமைச் சங்கத் தலைவர் சமிந்த, யாழ். மாவட்ட பிரதி ஆணையாளர் ரி.தேவராஜன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# வீதி அகலிப்பு பணிகளுக்காக மின்விநியோகம் தடை

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்க்ங்களை இடம் நகர்த்தவேண்டியிருப்பதாலும், புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் இன்று புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் குஞ் சர்கடையின் ஒரு பகுதி, நவிண்டில், பொலிகண்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு, உடுப்பிட்டி, கற்கோவளம், புனிதநகர், நெல்லண்டைப் பிரதேசங்கள் ஆகிய இடங்களிலும்,

நாளை வியாழக்கிழமைகாலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் பருத்தித்துறை சிவன் கோவிலுக்கும் சிவப்பிரகாசம் பாடசாலைக்கும் இடைப்பட்ட பிரதேசங்கள், கோண்டாவில் ஸ்ரேசன் வீதியில் கே.கே.எஸ் வீதி சந்திக்கும் கோண்டாவில் உணவுக் களஞ்சியத்திற்கும் இடைப்பட்ட பிரதேசங்கள், அல்வாய், திக்கம் பிரதேசங்கள், சாமியன் அரசடி, சம்பந்தர்கடைப் பிரதேசங்கள், முத்திரைச் சந்திப் பிரதேசம், வைமன் பிரதேசம், நல்லூர் கோவில் வீதி ஆகிய இடங்களிலும்,

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைகாலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் வட்டு. இந்துக் கல்லூரிப் பிரதேசம், சங்கரத்தைப் பிரதேசம், குஞ்சர்கடையின் ஒரு பகுதி, நவிண்டில், பொலிகண்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு, உடுப்பிட்டி ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும்.


எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் ஆனைக்கோட்டை, காக்கைதீவு, அட்டகிரி, சாவற்கட்டு, வராகி அம்மன் கோவிலடி, ஆனைக்கோட்டை - குளப்பிட்டி வீதி, மந்திகைப் பிரதேசம், புலோலி, சாரையடி, ஓராம்கட்டை, தம்பசிட்டி, பருத்தித்துறைப் பிரதேசம், அல்வாய்ப் பிரதேசம், நெல்லியடிப் பிரதேசம், கரவெட்டிப் பிரதேசம், கரணவாய்ப் பிரதேசம், குஞ்சர்கடைப் பிரதேசம், கற்கோவளம், புனிதநகர், நெல்லண்டைப் பிரதேசங்கள் ஆகிய இடங்களிலும் தடைப்படும்

எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, குஞ்சர்கடையின் ஒரு பகுதி, நவிண்டில், பொலிகண்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு, உடுப்பிட்டி ஆகிய இடங்களிலும் தடைப்படும்.

18ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் நெல்லண்டைப் பிரதேசத்திலும்

19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் வல்லிபுரம், குடத்தனை, அம்பன் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# ஆயுர்வேதம்



## தூக்கமின்மையும் உடல் வலிகளும்!

எப்போதும் டென்ஷன், அதனால் தூக்கமின்மை, உடல் வலி, மூட்டுவலி, இடுப்பு வலி, பிடிப்பு போன்றவற்றினால் அவஸ்தைப் படுவோர் உள்ளனர். மூளைச் சுருக்கம் என்ற ஓர் உபாதையை அதிக டென்ஷன் உள்ளவர்கள் விரைவாகச் சந்திக்க நேரிடும். இந்தச் சுருக்கத்தினால், மூளையிலிருந்து செயல்படும் நரம்புகள், உடல் பகுதிக்குச் செய்திகளை விரைவாகக் கொண்டு சேர்த்தல், அங்கிருந்து செய்திகளை உடனுக்குடன் மூளைக்குத் தெரிவித்தல் போன்ற செயல்களில் தொய்வு ஏற்பட்டுவிடும். இவற்றைச் சாமர்த்தியமாகச் செய்யக் கூடிய பல இரசாயனங்கள் மூளைப் பகுதியிலிருந்து சரியான முறையில் சுரக்காமல் போவதுதான், இந்த நரம்புகளின் தொய்வுக்குக் காரணம்.

மேலும் ஏறிடும் வயோதிகத்தில் வாதம் எனும் உடல் தோஷத்தின் குணங்களாகிய வறண்ட தன்மை, லேசான தன்மை, மிக மிக நுண்ணிய பாதைகளில் ஊடுருவிப் பாயும் தன்மை, சொர சொரப்பு, எப்போதும் அசைந்து கொண்டே இருக்கும் தன்மை ஆகியவை இயற்கையாகவே கூடுவதால், மூளையிலிருக்கும் தர்ப்பகம் எனும் கபதோஷத்தின் குணங்களாகிய நெய்ப்புத்தன்மை, குளிர்ச்சி, பளுவான தன்மை, தாமதித்துச் செயல்படுதல், வழவழப்புத் தன்மை, அசைவற்றிருக்கும் தன்மை போன்றவற்றைக் குறைத்துவிடும். இந்த வாயுவின் சீற்றமானது உடல் வலி, மூட்டு வலி, தூக்கமின்மை, இடுப்புவலி, பிடிப்பு போன்றவற்றை ஏற்படுத்திவிடும்.

மூளை நரம்புகளை வலுப்படுத்தவும் அங்கு ஏற்பட்டுள்ள வாயுவின் சீற்றத்தைக் காப்பாற்றி, கபத்தின் குணங்களைக் கூட்டி, அதன் மூலம் இரசாயனச் சுரப்பிகளின் கேந்திரங்களை வலுப்படுத்தவும், ஆயுர்வேதம் சில சிறந்த உபாயங்களாகிய 'நஸ்யம்' எனும் மூக்கினுள் பிழியப்படும் எண்ணெய் முறையையும், தலையில் நிரப்பி வைக்கப்படும் 'சிரோவஸ்தி' எனும் எண்ணெய் கட்டும் வைத்திய முறையையும் உபதேசித்திருக்கிறது. இவற்றை நீங்கள் ஓர் ஆயுர்வேத மருத்துவமனையில் தங்கி எடுத்துக் கொள்ள வேண்டிய முக்கிய சிகிச்சைகளாகும். இந்த சிகிச்சை முறைகளை செய்து கொள்ளும் நாட்களிலேயே, 'ஸ்ர்வாங்தைலதாரா' எனும் உடலெங்கும் பிழியப்படும் மூலிகை எண்ணெய் வைத்தியமும், இதமான பதத்தில் தசைகளையும், மூட்டுப் பகுதிகளையும் தேய்த்துவிடும் முறையும் மிகவும் சிறந்த வைத்தியமுறைகளாகும். மூலிகை வேர்களையும், இலைகளையும் கொண்டு தண்ணீரில் கொதிக்கவிட்டு, அதிலிருந்து வரும் நீராவியை உடலெங்கும் படும்படி காட்டப்படும் சிகிச்சையும் நல்ல பலனைத் தரலாம். மூலிகைத் தைலங்களாலும், மூலிகைக் கஷாயங்களாலும் செய்யப்படும் 'வஸ்தி' எனும் ஆஸன வாய் வழியாக மலக்குடலுக்குச் செலுத்தப்படும் சிகிச்சைமுறையும் சிறப்பானதுதான்.

நம் முன்னோர் அமைத்துக் கொடுத்துள்ள உணவுமுறையை நீங்கள் தொடர்ந்து அமைத்துக் கொள்வதும் உடல் நலனுக்கு நல்லதே. உணவு உட்கொள்ளத் தொடங்கியது முதல் அது முழு அளவு ஜீரணம் அடையும் வரையிலான கால அளவை மூன்று சமபாகங்களாகப் பிரித்து முதலாவது கபகாலம் என்றும், அடுத்து பித்த காலம் என்றும், கடைசியில் உள்ளது வாத காலம் என்றும் கூறுவர். அதனதன் காலங்களில் அவை அவை தலைவனாக நின்று அதனதன் பணியைச் செவ்வனே செய்கின்றன. அந்த வகையில் முதலில் சூடான புழுங்கலரிசிச் சோற்றுடன் நெய், பருப்பு கலந்து அன்னமும் நடுவில், பித்தத்தைத் தூண்டிவிடும் புளிப்பு, உப்பு, காரம் நிறைந்த ரசம் சோறும், இறுதியில் வாயுவை சீராகச் செயல்படுத்தக் கூடிய துவர்ப்பு, புளிப்பு நிறைந்த மோருடன் கூடிய உப்பு, ஊறுகாய்க் காரமுடன் சாப்பிட, குடல் பகுதியில் இந்த மூன்று தோஷங்களின் சீரான செயல்பாட்டின் மூலமாகவும் மூளைப் பகுதியை வலுப்படுத்திக் கொள்ளலாம்.

# மக்கள் நலமே நோக்கம்

## மாதகலில் சந்திப்பு



எமது மக்களின் அபிவிருத்தி மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு நான் அரசில் அங்கம் வகிக்கின்றேனே அல்லாமல் எனது சுயலாபத்திற்காக அல்ல என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியுள்ளார்.

மாதகல் சென்.ஜோசப் மகாவித்தியாலயத்தில், அப்பகுதி மக்கள், பிரதிநிதிகளுடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது பாடசாலைச் சமூகத்தினரும் மக்கள் பிரதிநிதிகளும் முன்வைத்த கோரிக்கைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார். இதில் பாடசாலை அதிபர் நடராசா, வணபிதாகனி ஷியஸ் ராஜ், ஈ.பி.டி.பியின் வலிகாமம் பிரதேச இணைப்பாளர் சிவகுருபாலகிருஸ்ணன் (ஜீவன்), ஈ.பி.டி.பியின் வலி வடக்கு பிரதேச இணைப்பாளர் அன்பு, பிரான்சிலிருந்து வருகைதந்த தோழர் செந்தில் ஆகியோர் உடனிருந்தனர்.

## புதிய கட்டடம் திறந்து வைப்பு



கஸ்த்தூரியார் வீதியில் புதிதாக அமை யப் பெற்றுள்ள ரூபன் கொம்பிளெக்ஸை (RubanComplex) ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா சம்பிர தாயபூர்வமாக திறந்து வைத்தார்.

நேற்றுமுன்தினம் இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சர், மங்கள வாத்தியம் சகிதம் வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து புதிய கட்டடத் தொகுதியை சம்பிரதாய. பூர்வமாக நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றும் போது கட்டடத்தை அமைப்பதில் இதன் உரிமையாளர் பல்வேறு சட்டரீதியான பிரச் சினைகளை எதிர்கொண்ட போதிலும் அதன் பின்னதாக இக்கட்டடத்தை கட்டி முடிப்பதற்கு யூாழ்.மாநகர சபை அனுமதி வழங்கியிருந்தது. இம் மாவட்டத்தில் இது போன்ற பல புதிய கட்டடங்கள் தோற்றம் பெற வேண்டுமென்பதுடன், அதன் மூலமே எமது மக்களும் வர்த்தக ரீதியில் மேம்பாடடைய முடியுமென்றும் சுட்டிக் காட்டினார். தொடர்ந்து உரிமை யாளர் சத்தியரூபன் அமைச்சர் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தியதுடன் நினைவுக் கேடயத்தினையும் வழங்கி வைத்தார்.

நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர் உரையாற்றும் போது, இன்றைய ஜனநாயக சூழலில் எவ்விதமான அச்சுறுத்தல்களுமின்றி வர்த்தகர்களும், மக்களும் சுதந்திரமாக தமது வாழ்வை முன்னகர்த்தி வரும் நிலையில், இதனூடாக எமது பகுதி மேலும் முன்னேற்றமடையும்.

அத்துடன் இம்மாவட்டத்தின் பல்வேறு அபிவிருத்திச் செயற்திட்டங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது தலைமையின்கீழ் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இதற்கு வர்த்தகர்களும் தமது முழுமையான பங்களிப்பினை வழங்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து திருமதி விஜயகுமாரி சத்தியரூபன் அவர்களால் யாழ்.மாநகர முதல்வர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மாசி மகம் பெருவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - விளைவேலி துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் மாசி மக இலட்சார்ச்சனைப் பெருவிழா நடைபெறவுள்ளது.

வரும் சனிக்கிழமை முதல் 25ஆம் திகதி திங்கட்கிழமை வரை பத்து நாட்கள் இலட் சார்ச்சனை வழமைபோல் இம் முறையும் நடைபெறவுள்ளது. 25ஆம் திகதி அன்று மாலை இலட்சநாம பூர்த்தியும் அம் பாள் உள்வீதி உலாவருதலும் இடம்பெறும். (43)

## நடன ஆசிரியை இல்லை

(கைதடி)

கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தில் நடன ஆசிரியர் இல்மையால் நடன பாடம் கற்கும் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்ளுகின்றனர்.

இந்த மாணவர்களின் குறை களை நீக்க நடவடிக்கை எடுக் குமாறு பெற்றோர் கூறுகின்றனர்.

## பரமர் சங்கமம்



'அம்மா பசிக்குதே தாயே பசிக்குதே' தர்மம் எடுப்பவர்கள் பாடுவது போன்று பழைய சினிமாவில் புகுந்தப்பட்ட பாடலொன்று.

அதுவே பிற்பாடு எதார்த்தமாக புகைவண்டிகளிலும், பஸ்களிலும், பொது இடங்களிலும் பிச்சை எடுப்போர் பரவலாகப் பாடித்தர்மம்கேட்கும் நிலையை உருவாக்கி இருந்தது பிரசித்தம்.

தொழில் செய்ய முடியாத நோயாளிகள், வலுக்குறைந்தோர் செய்யும் தொழிலாகத் தர்மம் எடுக்கும் விடயம் அமைந்தது. பொய் சொல்லாக் கூடாது, களவெடுக்கக் கூடாது, பிச்சை கேட்டு வாங்கி வாழலா மென்ற அனுமதி ஒருகால கட்டத்தில் வழங்கப்பட்டிருந்தது.

சில நாடுகளில் அறவே பிச்சை எடுப்பதை அந்நாடுகள் தடை விதித்துள்ளன. எமது நாட்டில் பிச்சை எடுப்பதற்கு சில காலங்களில் தடுக்கப்பட்டதும் அனுமதிக்கப்பட்டதும் மாறி மாறி நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கின்றன.

பொதுவாக அனுமதிக்கப்பட்டுள்ள தொழில்களைத் தவிரவும் அனுமதி இல்லாதவையும் தொழில்களாகப் பரிணமித்துள்ள காலம் கலிகாலம். அவ்வகையில் 'ஹெல்மட்' போட்டுக் கொண்டு மோட்டார் சைக்கிள்களில் தனிவழி போகும் பெண்களிடம் சங்கிலி, தாலிக்கொடிகளை அறுத்துப் பிழைக்கும் தொழிலும் நடைமுறையில் பரவலாக வளர்ந்து வந்துள்ளது.

இந்நிலையில் ஒரு பிச்சைக்காரி தட்டிப் பறித்தார் என்வாழ்வை சஞ்சலத்தில் மிதக்க வைத்தாரே, என இன்னுமோர் பழைய திரைப்படப் பாடலைப் பாட வைத்துள்ள சம்பவமொன்று நம்நாட்டில் நடைபெற்றிருப்பதைப் பத்திரிகையில் பார்க்க முடிந்தது.

'பிச்சை எடுப்பதால் மாதமொன்றில் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேல் சம்பாதித்து வந்த பெண்கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்பு, நீர்கொழும்பு ரயில்லில் வைத்தே கைது செய்யப்பட்டுள்ளதாக' அந்தச் செய்தி தெரிவித்துள்ளது.

அந்தப் பெண் ஒருமணி நேரத்தில் ஆயிரத்து எண்ணூறு ரூபாவை பிச்சை எடுத்துச் சம்பாதித்திருந்ததாகவும், இரண்டு பிள்ளைகளின் தாயாரான மேற்படி பெண் போயா தினமொன்றில் விகாரையில் ஒன்பதாயிரம் ரூபாவுக்கு மேலாகச் சம்பாதித்து இருந்ததாகவும் தகவல் தெரிவிக்கப்படுகிறது.

வயிற்றுப் பகுதியில் தோன்றிய கட்டியைக் காட்டி மக்களின் அனுதாபத்தை தன்பக்கம் ஈர்த்துக் கொள்வதாலே இவ்விதம் பெருந்தொகைகளைச் சம்பாதிக்க முடிந்ததாகவும், பொலிஸாரின் விசாரணையின் போது அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

'கட்டியை அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு ஆரோக்கியமாக வாழலாமே' எண்டதுக்கு அதனை வைத்து சம்பாதிப்பதனால் பிள்ளைகளைப் படிப்பிக்கவும், எந்தக் கஸ்டங்கள் இல்லாமல் வாழக்கையை நகர்த்தவும் முடிவதாக தெரிவித்துள்ளார்.

பொய்களும், களவுகளும் மலிந்த சமூகத்தில் நோய்த் தழும்பொன்றைக் காட்டி லட்சக்கணக்கில் உழைத்து சிவனே எண்டு வாழ்ந்து வந்த அந்தப் பிச்சைக்காரப் பெண்ணின் வாழ்வை தட்டிப் பறித்தல் சரியா? பிழையா? சொல்லுங்க பாப்பம்...

## துப்புரவாக்க ஏற்பாடு

(நாயன்மார்கட்டு)

நாயன்மார்கட்டு - செம்மணி வீதி கேணியடிக்குளம் கடந்த பல வருடகாலமாக தூர்ந்த நிலையில் இருப்பதாலும் இக் கேணிக்குள் கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவதாலும் கேணியடி துர்நாற்றம் வீசுகின்றது.

மழைநீர் தேங்கி நிற்பதனால் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளது. இதனால் டெங்கு பரவும் அபாயமும் ஏற்படலாமெனவும் நாயன்மார்கட்டு பாரதிமன்ற சனசமூக நிலைய நிர்வாகத்தினர் யாழ்.மாநகர முதல்வருக்கு நேரில் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர். மகஜரைப் பெற்றுக் கொண்ட முதல்வர் விரைவில் கேணியை துப்புரவு செய்து தருவதாக நிலையத்தினருக்கு தெரிவித்துள்ளார். (88)

## மீண்டும் சீரற்ற காலநிலை

நாட்டில் மீண்டும் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் நீர்த்தேக்கங்கள் சில வற்றின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. பராக்கிரம சமுத்திரம், மின்னேரியா, கடுவுல்ல மற்றும் கந்தளாய் நீர்த் தேக்கங்களின் வான் கதவுகள் இவ்வாறு திறக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதனால் தலவாக்கலை பூண்டு லோயா பிரதான வீதியின் மடக்கும்புர பகுதியில் மூன்று மரங்கள் முறிந்து வீழ்ந்ததில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதனால் பாடசாலை மாணவர்கள், அலுவலகம் செல்லும் அரச, தனியார் ஊழியர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கினர். வடக்கு, கிழக்கு, வட மத்திய, ஊவா மாகாணங்களிலும் அம்பாந் தோட்டை மாவட்டத்திலும் ஆங்காங்கே மழை பெய்யும் என அந்த நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

## முரசின் இன்றைய பலன்


(13.02.2013 - புதன்கிழமை)

நந்தன வருஷம் மாசி மாதம் 01 ஆம் திகதி. நட்சத்திரம் உத்தரட்டாதி. சித்தம் பின்னிரவு 05.56 வரை. திதி திருதியை முற்பகல் 11.22 வரை. இராகுகாலம் 12.33 - 02.03 வரை. சுபநேரம் 05.03 - 06.33 வரை. சதுர்த்தி விரதம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | செயல்களில் தடுமாற்றம். தகுந்த பாதுகாப்பு, வேண்டும். தொழிலில் இலக்கு நிறைவேற தாமதம். சிறிதளவு பணக்கடன். போக்குவரத்தில் கவனம். இல்லறத்துணை உதவிகரம். |
| ரிஷபம் | அவசரப்பணி ஒன்று ஏற்படலாம். சொந்த தேவை பூர்த்தி. ஆர்வமுடன் செயல்பாடு. மதிப்பு உயரும். தொழில், இடையூறு களைவீர். பணவரவு சராசரி. வாகன பயணத்தில் கவனம். |
| மிதுனம் | எதிர்பாராத சந்திப்பும் எதிர்பார்ாத உதவியும். சமூகத்தில் மதிப்பு. தொழில், அனுகூலத்தன்மைகள். வரவு சுமுகம். பயன் தராத பொருள் வாங்க வேண்டாம். நன்மை சேரும். |
| கடகம் | மனதில் சஞ்சலம். மாறுபட்ட கருத்து உள்ளவரிடம் விலகுக. தொழில், இலக்கு நிறைவேறும். செலவு வரும். புத்திரரின் செயல், மகிழ்விக்கும். கடின உழைப்புக்கு வெற்றி |
| சிம்மம் | திட்டமிட்ட பணிகளில் தாமதம். தேவையற்ற பேச்சை தவிர்ப்பதால் நன்மை. தொழில், அதிக முயற்சி. சேமிப்பு பணம் செலவுக்கு. உத்தியோகத்தர் உயர்வு. கோயில் ப்ண |
| கன்னி | அறிமுகம் இல்லாதோரிடம், பேசவேண்டாம். பணிகளில், கவனம் வேண்டும். தொழில், மந்த கதி. வரவை விட செலவு கூடும். உடல் நலத்திற்கு உணவு கவனம். முயற்சி திருவினை. |
| துலாம் | மனதில் அதிக தன்னம்பிக்கை. இடையூறுகளை, சமயோசிதமாக சரி செய்வீர்கள். தொழில் வளர்ச்சி. பணவரவில் அதிர்ஷ்டம். உறவினர் வருகை வீட்டில் மகிழ்ச்சி. ஜெயம். |
| விருச்சிகம் | மனதில் சாந்தம் நிறைந்திருக்கும். உறவினர் உதவிக்கு, பிரதியுபகாரம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை. பணவரவு திருப்தி. குடும்பத்தில், மங்கல நிகழ்ச்சி திட்டம். |
| தனுசு | பணிகளை, தகுந்த திட்டமிடுதலுடன் செய்வீர்கள். அனுகூல சூழ்நிலை. தொழில், செழிப்பு. உபரி பண வரவு. சேமிப்பீர்கள். விருந்து, விசேஷம். உடல் நலத்தில் கவனம். |
| மகரம் | உண்மை, நேர்மையில் அக்கறை. நண்பர், உறவினர் ஊக்கம் தருவர். தொழில், அதிக பணி. சராசரி, பண வரவு. வீடு, வாகன திருத்தம். குழந்தைகளின் நலன் சிறக்க, கூடுதல் பாசம். |
| கும்பம் | முன்னர் கேட்ட உதவி, எதிர்பாராமல் வந்து சேரும். திட்டமிட்டது நிறைவேறி, நன்மை. தொழில், வியத்தகு முன்னேற்றம். உபரி வருமானம். அரச உதவி. சலுகைகளும் யோகமும். |
| மீனம் | மனநிலையில் உற்சாகம். தகுதி, திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். தொழில், புதிய அனுபவம் தரும். பணவரவும், நன்மையும் கூடும். அறப்பணியில் மகிழ்வு. மாணவர்கள் தேர்ச்சி. |

**01. Read and match by putting letters in the circles**

1) 
2) 
3) 
4) 
5) 

a. She is a teacher
b. It's three O'clock
c. His father is a doctor.
d. Christmas comes in December
e. My hobby is gardening

**02. Underline the most correct word.**

1. My favourite colour is **red / cake / netball**

2. The **snake / cow / giraffe** is long

3. His father is a **drawing / teacher / hobby**

4. These **is / are / am** my books

5. She plays **small / books / netball**

**03. Underline the correct word**

| | | |
|---|---|---|
| 1) Diner | Dinner | Dennir |
| 2) October | Octobar | Octeber |
| 3) Frind | Freind | Friend |
| 4) Penguin | Pengiun | Penquin |
| 5) Thinner | Thiner | Thniner |



**தரம் - 3 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை -2013**

# கல்வி முரசு



முன்னணி ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**01) சரியான விடை எழுதுங்கள்**

1) இலையின் நுனி கூராக இருக்கும் இலை எது?
   1) பூவரசு 2) அலரி 3) வட்டக்கண்ணி 4) புளி

2) பழமரத் தோட்டத்தில் வளர்க்கப்படும் பிராணி எது?
   1) நாய் 2) ஆந்தை 3) தேனீ 4) குளவி

3) பகல் வேளையில் மனிதனைக் கடிக்கும் நுளம்புகளால் மனிதனுக்கு ஏற்படக்கூடிய நோய்
   1) மலேரியா 2) மூளைக்காய்ச்சல் 3) யானைக்கால் 4) டெங்கு

4) பண்டைய காலம் முதல் தற்காலம் வரை மனிதனுக்கு பல்வேறு வழிகளில் உதவி வரும் பிராணி அல்லாதது?
   1) யானை 2) குதிரை 3) எருது 4) சிறுத்தை

5) மெத்தை தயாரிக்கப் பயன்படும் தாவரப் பொருள்
   1) தும்பு 2) செயற்கைப்பஞ்சு 3) நுரைப்பஞ்சு 4) இலந்தை நார்

6) உணவுத்தட்டு, கோப்பை, சீப்பு போன்றவற்றை துப்புரவாக்க பயன்படுத்தக்க பொருள்
   1) பழப்புளி 2) எலுமிச்சைச்சாறு 3) வெந்நீர் 4) சலவைத்தூள்

7) கறி சமைக்கும்போது கறிவேப்பிலை இடும் சந்தர்ப்பம்
   1) கறி அடுப்பில் வைக்கும் போது 2) கறியை இறக்கி சிறிது நேரத்தில்
   3) கறி அடுப்பில் கொதிக்கும்போது 4) கறி நன்றாக ஆறிய பின்

8) உப்புக் கட்டியை அடுப்பினுள் இடும்போது அவதானிக்கக்கூடிய மாற்றம்
   1) உப்பு உருகும் 2) உப்புக்கட்டி சத்தத்துடன் வெடிக்கும்.
   3) உப்புக்கட்டி எரியும் 4) தீ அணைந்து போகும்.


9) பழுதடைந்த உணவில் அவதானிக்கத்தக்க மாற்றமாக அமையாதது
   1) துர்மணம் வீசுதல் 2) வழுவழுப்பாக இருத்தல்
   3) பூஞ்சணம் காணப்படுதல் 4) கட்டியாக இருத்தல்

10) பழுதடைந்த உணவை உண்பதால் ஏற்படும் பாதிப்பு எது?
   1) உணவின் சுவை மாற்றம் அடைதல் 2) சமிபாடு துரிதமடைதல்
   3) புற்று நோய் ஏற்படல் 4) உணவு நஞ்சாதல்

11) கிராமிய விளையாட்டாக அமையாதது எது?
   1) பசுவும் புலியும் 2) சதுரங்கம் 3) சில்லுக்கோடு 4) பல்லாங்குழி

12) அரசாங்க விழா ஒன்றின்போது முதன் முதலில் ஏற்றப்படும் கொடி?
   1) தேசியக்கொடி 2) பாடசாலைக்கொடி
   3) சாரணியக்கொடி 4) பௌத்தகொடி

13) அதிக உளச்சக்தி தேவைப்படும் விளையாட்டு எது?

(1)  (2)  (3)  (4) 

14) அரச விழாவில் இறுதியில் இறக்கப்படும் கொடி எது?
1) தேசியக்கொடி 2) பாடசாலைக்கொடி
3) சாரணியக்கொடி 4) பௌத்தகொடி

15) அதிகளவு உடற்சக்தி தேவைப்படும் விளையாட்டு எது?

(1)  (2)  (3)  (4) 

**02) இடைவெளி நிரப்புங்கள்**

1) பௌத்த மக்களின் பண்டிகைகளில் ........................................ ஒன்றாகும்.

2) தமிழ்மொழிப் பாடசாலை விழாவொன்றின் இறுதியில் ........................................ இசைக்கப்படும்.

3) பழுதடைந்த பாற்சோற்றிலிருந்து ........................................ வீசும்.

4) வீட்டுத்தோட்டத்திலிருந்து நச்சுத் தன்மையற்ற ........................................ காய்கறி கிடைக்கும்.

5) உணவில் கருவாடு, மீன், இறைச்சி என்பவற்றுக்குப் பதிலாக தாவர உணவாக ........................................ பயன்படுத்தலாம்

| | | |
|---|---|---|
| ◆ தமிழ்மொழி வாழ்த்து | ◆ தேசிய கீதம் | ◆ நாறிய வாடை |
| ◆ புத்தம் புதிய | ◆ வெசாக் | ◆ சித்திரைப் புத்தாண்டு ◆ சோயா |

**03) சரியாயின் (√) எனவும் பிழையாயின் (x) எனவும் இடுக.**

1) சகல போஷாக்கையும் கொண்ட ஒருவேளை உணவே கலப்புணவு எனப்படும் ☐

2) சூடான காலங்களில் இளநீர், நெல்லி, எலுமிச்சைப் பானங்களை அருந்தலாம். ☐

3) உணவு உண்ணும் கோப்பைகளை சாம்பல் இட்டு நீரில் கழுவிச் சுத்தப்படுத்தலாம். ☐

4) எலி, கறையான், இராமபாணம் போன்றவை புத்தகங்களை சேதமாக்கும். ☐

5) செல்லப்பிராணிகளை கூடுகளில் அடைத்து வளர்ப்பது பிராணிகளின் சுதந்திரத்தைப் பாதிக்கும். ☐



**04) பொருத்தமானதை தொடர்புபடுத்துங்கள்**

| | |
|---|---|
| 1) ஆகாயத் தொட்டி என அழைக்கப்படுவது | 1) வேர்க்கொம்பு |
| 2) தர்ம சக்கரம் | 2) பழுதடைதல் |
| 3) இஞ்சியை உலர்த்தி பெறப்படுவது | 3) காகம் |
| 4) வீட்டுத் தோட்ட உபகரணம் | 4) பூவாளி |
| 5) சிவப்பு நிறமாக மாறிய தேய்காய்ப்பாதி | 5) பௌத்தகொடி |

**05) பின்வரும் பொருட்களைப் பயன்படுத்தி விடை தருக**

| | | | |
|---|---|---|---|
| உப்பு | செத்தல் மிளகாய் | கொத்தமல்லி | ஏலம் |
| சீனி | மிளகு | கடுகு | கறுவா |

1) உணவின் தரத்தை மேம்படுத்த உதவும் பொருட்கள்

1. ........................................ 2. ........................................

2) உணவு பழுதடையாது தடுக்கும் பொருட்கள்

1. ........................................ 2. ........................................

3) உணவைச் சுவையூட்டும் பொருட்கள்

1. ........................................ 2. ........................................

4) மிளகாய்த் தூள் தயாரிக்க உதவும் பொருட்கள்

1. .......................... 2. .......................... 3. ..........................

**06) சரியான விடை தருக**

பின்வரும் இலையின் வடிவத்தை ஒத்த, வேறு இலைகள் 2 தருக

1) தாமரை :........................................

2) புளி :........................................

3) பப்பாசி :........................................

4) பலா :........................................

# நரேந்திர மோடிக்கும், ராகுலுக்கும் பிரதமராகும் தகுதி இல்லை

## பா.ஜ.க. முன்னாள் தலைவர்



(போபால்)

பிரதமர் பதவிக்கான தகுதி குஜராத் முதல்வர் நரேந்திர மோடிக்கோ அல்லது காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்திக்கோ இல்லை என பா.ஜ.க. முன்னாள் தலைவர் கோவிந்தாச்சாரியா தெரிவித்துள்ளார். 2014 மக்களவை தேர்தலை ராகுல்காந்தி தலைமையில் சந்திக்க காங்கிரஸ் முடிவு செய்துள்ளது. இதற்கு அச்சாரமாக காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவராக அவர் அண்மையில் நியமிக்கப்பட்டார். காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் பிரதமர் வேட்பாளராக அவர் அறிவிக்கப்படலாம் என்ற யூகங்களும் வெளிவரத் தொடங்கியுள்ளன. இதே போல் பா.ஜ.க சார்பில் குஜராத்தில் 4 முறை தொடர்ந்து முதல்வர் பதவியேற்றுள்ள நரேந்திர மோடி பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்படலாம் எனத் தெரிகிறது.

இந்நிலையில் பிரதமராகும் தகுதி நரேந்திர மோடிக்கும், ராகுல் காந்திக்கும் இல்லை என பா.ஜ.க முன்னாள் தலைவர் கோவிந்தாச்சாரியா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக போபாலில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

காங்கிரசில் ஏ.கே.அந்தோனி மற்றும் திக்விஜய்சிங்குக்கு பிரதமராகும் தகுதி உள்ளது. அவர்கள் இருவரும் மாநில முதல்வர்களாகவும், மத்திய அமைச்சர்களாகவும் பல ஆண்டுகள் பதவி வகித்துள்ளனர். ஆட்சி நிர்வாகத்தின் அனைத்து நெளிவு சுளிவுகளும் அவர்களுக்குத் தெரியும். பா.ஜ.வை பொறுத்தவரை அத்வானியை பிரதமர் வேட்பாளராக அறிவிக்க இன்னும் வாய்ப்பு உள்ளது. பா.ஜ.க ஆட்சிக்கு வரும் பட்சத்தில் மோடிக்கு உள்துறை அமைச்சர் பதவி கொடுக்கலாம். இவ்வாறு கோவிந்தாச்சாரியா கூறினார்.




## கிறிஸ்தவ நற்சிந்தனை

## மனமாற்றத்தின் காலம்

இன்று விபூதிப்புதன் ஆகும். தவக்காலம் மனமாற்றத்தின் காலம். எமது ஆன்மீகத்தைப் புடமிடும் காலம், உலகப் பற்றைத் துறந்து ஆண்டவரின் பாதச் சுவடுகளைப் பின்பற்றும் காலம். எமது சுயத்தை, சுயநலத்தை இழக்கும் காலம். எமது விருப்புக் குரியதைத் துறந்து ஏகாந்தம் புரியும் காலமாகும்.

இந்தத் தவக்காலம் விசேட விதமாக இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை நினைத்துத் தியானிக்கும் காலம். அதனை எமது வாழ்க்கைக்கு முன்மாதிரியாகக் கொள்ளும் காலம்.

'தபசு' என்றால் இலைதுளிர் காலம் என்பது பொருள். இக்காலத்தில் மரத்தில் உள்ள இலைகள் எல்லாம் வீழ்ந்து மரம் இறந்துபோன தோற்றத்தினைக் கொடுக்கும். ஆனால் தோற்றத்தில் அப்படிக் காணப்பட்டாலும் மரம் இறக்கவில்லை. அதில் உயிர் இருக்கின்றது. அந்த உயிர் துளிர்விடும், மாட்சியுடன் செழிக்கும் இதுதான் தபசு காலத்தில் நினைவு கூரும் விடயமாகும்.

இயேசுவின் பாடுகள், மரணம் என்பன வெறும் இறப்பு அல்ல. அதற்கு அப்பால் ஓர் உயிர்ப்பின் மாட்சி உண்டு என்பதை அனுபவிக்க ஆயத்தமாகும் காலம்தான் தபசு காலம். சாம்பல் புதனாகிய இன்று (விபூதிப்புதன்) "மனிதனே நீ மண்ணாக இருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய்" அல்லது "மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள்" என்று சொல்லியே குரு வானவர் நெற்றியில் சாம்பலால் சிலுவை அடையாளத்தைப் போடுவார். 'மண்' அல்லது 'சாம்பல்' என்பது எமது மரணம், இயலாமை, நிலையற்ற வாழ்வு என்பவற்றை நினைவூட்டுகின்றன. எனவே எமது ஆணவம், அகந்தை, பெருமைகளை ஒழித்து தீய குணங்கள் சாம்பலாகப்படும் போது கடவுள் எம் உள்ளத்தில் குடிகொள்வார். எனவே, நாம் 'மண்' வெறும் சாம்பல் என்பதை எப்போதும் நினைத்து நல்லோராக முயற்சிப்போம்.

வி.பி.தனேந்திரா

# நடிகர் சங்கத்தை அவமதிக்கவில்லை



(சென்னை)

விஸ்பரூபம் பட பிரச்சினையில் நடிகர் சங்கத்தை விமர்சிக்கவில்லை என்று நடிகர் விஷால் கூறியுள்ளார். நடிகர் சங்கத்தை அவமதிக்கும் பொருட்டு, விஷால் தனது டுவிட்டரில் கருத்து தெரிவித்திருந்தார்.

இதனால் விஷால் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நடிகர் சங்க உறுப்பினர்கள் வற்புறுத்தினர்.

இதையடுத்து விஷாலுக்கு விளக்கம் கேட்டு நடிகர் சங்கம் கடிதம் அனுப்பியது.விஸ்வரூபம் படம் வெளியாவதற்கு நடிகர் சங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் அக்கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டன.

10 நாட்களில் கடிதத்திற்கு பதில் அனுப்ப வேண்டும் என்றும் கெடு விதிக்கப்பட்டது. இந்த கடிதத்திற்கு விஷால் பதில் அனுப்பி உள்ளார்.

நடிகர் சங்க அலுவலகத்திற்கு வந்துள்ள விஷாலின் கடிதத்தில், நடிகர் சங்கத்தை அவமதிக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளதாக தெரிகிறது. டுவிட்டரில் கருத்து வெளியிட்ட சூழ்நிலை பற்றியும் குறிப்பிட்டு இருந்தார்.

இந்த கடிதத்தை ஆய்வு செய்து வரும் நடிகர் சங்கம், விஷால் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? இல்லையா? என்பது ஓரிரு நாளில் தெரியவரும் என தெரிவிக்கப்படுகிறது.

# அலகாபாத் நெரிசலில் சிக்கி பலியானனோர் தொகை உயர்வு



(அலகாபாத்)

அலகாபாத் மகா கும்பமேளாவில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை 36 ஆக உயர்ந்துள்ளது. சாவு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. உத்திரப்பிரதேச மாநிலம் அலகாபாத் அருகே கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய நதிகளும் சங்கமிக்கின்றன. இதில் திரிவேணி சங்கமம் என்ற இடத்தில் இந்துக்கள் புனித நீராடுவது மோட்சத்திற்கு இணையானது என்று கருதப்படுகிறது. அதனால் வருடந்தோறும் இந்த இடத்தில் கும்பமேளா நடைபெறும். அதில் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு புனித நீராடுவார்கள். இம்முறையும் இதற்காக மக்கள் பஸ்கள், மோட்டார் வாகனங்கள், ரயில்கள் மூலம் வந்துள்ளனர். இதனால் பஸ்நிலையங்கள், ரயில் நிலையங்களில் கூட்டம் அலைமோதியது. அலகாபாத் ரயில்வே நிலையத்தில் எப்போதும் இல்லாத அளவுக்கு பக்தர்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. அதனால் அங்கு நெரிசல் ஏற்பட்டது. கூட்ட நெரிசலை தாங்காமல் பலர் கீழே விழுந்தனர். விழுந்தவர்கள் மீது பக்தர்களின் கால் போட்டு நசுக்கியதில் பலியானவர்களின் எண்ணிக்கை 36 ஆக உயர்ந்துள்ளது.


மேலும் சுமார் 100 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. ரயில் நிலையத்தில் அதிகமான மக்கள் கூட்டம் இருக்கும் என்று தெரிந்தும் மக்களுக்கு போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகளை ரயில்வே நிர்வாகம் செய்யவில்லை என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் குற்றஞ்சாட்டினார். இந்த நெரிசல் சம்பவம் குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாக மத்திய ரயில்வே அமைச்சர் பவன் குமார் பன்சால் தெரிவித்துள்ளார்.

# முக்கேஷ் வீட்டிற்கு முதலிடம்

(மும்பை)

உலகில் உள்ள விலை மதிப்புமிக்க வீடுகள் பட்டியலில் முகேஷ் அம்பானியின் அன்டில்லா என பெயர் சூட்டப்பட்ட வீடு முதலிடம் பிடித்துள்ளது. இந்த வீட்டின் மதிப்பு 5,350 கோடி ரூபாய். தெற்கு மும்பையில் உள்ள இந்த வீடு 27 மாடிகளைக் கொண்டது. 4,532 சதுர மீற்றர் பரப்பளவில் அமைந்துள்ளது.

இப்பகுதியில், ஒரு சதுர மீற்றர் (10.764 சதுரடி) நிலத்தின்



மதிப்பு 5 லட்சம் ரூபாய். இந்த வீட்டில், முழு நேர பணியாளர்களாக 600 பேர் பணிபுரிகின்றனர்.

இதற்கு அடுத்ததாக, பிரான்சில் உள்ள வில்லா லியோ போல்டாஹ என்ற கட்டடம், 2,709 கோடி ரூபாய் மதிப்புடன் இரண்டாம் இடத்தை பிடித்துள்ளது. லண்டனில் உள்ள ஹதி பென்ட் ஹவுஸ் எனப்படும் கட்டடம், 1,070 கோடி ரூபாய் மதிப்புடன் மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளது.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


# இந்தியர்களின் நலனை பாதிக்கும் போலிமருந்து

இந்தியாவில் போலி மருந்து பிடிபடும் சம்பவங்கள், சமீபகாலமாக அதிகரித்து வருவது மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்ட புள்ளிவிபரங்களில் தெரியவந்துள்ளது. 2009 - 10இல் போலி மருந்து பிடிபட்டதாக 117 புகார் பதிவாகியுள்ளது. அடுத்த இரு ஆண்டுகளில் இது 95 மற்றும் 133 ஆக இருந்ததாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.


தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சுகாதார அமைச்சகம் இந்த தகவல்களை அளித்துள்ளது. மத்திய மருந்து தர நிர்ணய ஆணையம், கடந்த 3 ஆண்டுகளில் ஒரு இலட்சத்து 37 ஆயிரம் மருந்துகளை சோதித்ததாக குறிப்பிட்டுள்ள சுகாதார அமைச்சகம், இதில் 6 ஆயிரத்து 500 மருந்துகள் தரம் குறைந்தவை என்றும், 516 மருந்துகள் போலியானது என கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளது.

மேலும் இந்த 516 மருந்து தயாரிப்பாளர் மீதும் வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக 345 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. போலி மருந்துகள் உற்பத்தி செய்யப்படுவது குறித்து தகவல் தருபவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் 4 ஆண்டுகளுக்கு முன்பு கொண்டு வரப்பட்டாலும் இது பலன் தரவில்லை. போலி மருந்து தயாரிப்பதாக அரசுக்கு 37 புகார்கள் வந்தன. ஆனால் இதை விசாரித்ததில் 37 புகார்களுமே தவறானவை என தெரியவந்ததாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுபோன்ற போலி மருந்துகள் கண்டுபிடிக்கப்படும் சம்பவம் இந்தியர்களின் வாழ்க்கையை கேள்விக்குறியாக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அணுகுண்டுப் பரிசோதனையை உறுதிப்படுத்தியது வடகொரியா

## ஒபாமா - பான் கீ மூன் கண்டனம்




(சியோல்)

அணு ஆயுதங்களை குவித்து வைத்திருப்பதாக உலக நாடுகளால் குற்றம் சாட்டப்படும் வடகொரியா, கடந்த 2009ஆம் ஆண்டு அணுகுண்டு சோதனையை நடத்தியது. இந்த சோதனை நடத்தப்பட்ட இடத்தில் நேற்று திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது.


இந்த நிலநடுக்கம் அசாதாரணமானது என ஐ.நா. சபையின் அணு ஆயுத சோதனைக் கண்காணிப்பு அதிகாரிகள் கருத்து தெரிவித்துள்ளனர். இந்த நிலநடுக்கத்தை அடுத்து தென் கொரியா இராணுவம் உஷார்ப் படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் வடகொரியா 3ஆவது முறையாக அணுகுண்டு சோதனை நடத்தியதை உறுதி செய்துள்ளது. ஆனால், 2006, 2009 ஆண்டுகளில் பயன்படுத்தியதைவிட குறைவான சக்தியைக் கொண்டே இந்த சோதனை செய்யப்பட்டுள்ளதாக வடகொரியா அறிவித்துள்ளது. மிகப் பாதுகாப்பாகவும், மிகச் சரியான முறையில் இந்த சோதனை நடத்தப்பட்டது. இந்த சோதனையால் இயற்கைச் சூழலில் எந்தவித மோசமான விளைவுகளும் ஏற்படவில்லை என்று வடகொரியா அரசு தெரிவித்துள்ளது.

வடகொரியாவின் இந்த அணுகுண்டு சோதனைக்கு ஐக்கிய நாடுகளின் தலைவர் பான்-கீ-மூன், அமெரிக்க அதிபர் ஒபாமா ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

வடகொரியா நடத்திய அணுகுண்டு சோதனை ஐ.நா. பாதுகாப்பு சபையின் தீர்மானங்களுக்கு முற்றிலும் எதிரானது என பான்-கீ-மூனின் செய்தித் தொடர்பாளர் மார்டின் நேசிர்கி தெரிவித்துள்ளார்.

# அந்த மாத்திரைகளுக்கு தலிபான்கள் தடை விதிப்பு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் வீரிய மாத்திரைகள் ஆபாச படங்கள் விற்பனைக்கு தலிபான்கள் தடை விதித்துள்ளனர். "ஆபாச படங்களை விற்பது இஸ்லாமிய சட்டத்துக்கு விரோதமானது" என பாகிஸ்தானில் உள்ள தலிபான் பயங்கரவாத அமைப்பினர் தெரிவித்துள்ளனர். பாகிஸ்தானின் பெஷாவர் பகுதியில் தலிபான்களின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது. இங்குள்ள கர்கானு சந்தையில், ஆண்மையை அதிகரிக்கச் செய்யும் வீரிய மாத்திரைகளும், ஆபாச "சிடி"க்களும் அதிகமாக விற்பனை செய்யப்படுகின்றன.

"இந்த விற்பனையை இங்குள்ள வியாபாரிகள் நிறுத்திக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், மோசமான விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும்" என தலிபான்கள் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துள்ளனர். இதனால் இங்குள்ள வியாபாரிகள் கவலையடைந்துள்ளனர். கடந்த வாரம், ஓரக்சாய் மாவட்டத்தில், "டிவிடி" கடை ஒன்றில் குண்டு வெடித்து 10 பேர் பலியாயினர் 26 பேர் படுகாயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிரியா - துருக்கி எல்லையில் பஸ் வெடித்து 13 பேர் பலி

(டமாஸ்கஸ்)

சிரியாவின் வடக்கில் உள்ள சில்வேகோசு துருக்கி எல்லையில் சென்றுகொண்டிருந்த பேருந்து ஒன்று நேற்று முன்தினம் வெடித்துச் சிதறியது. இதில் அந்த பேருந்தில் பயணித்த சிரிய நாட்டினர் 10 பேரும், துருக்கி நாட்டை சேர்ந்த 3 பேரும் உயிரிழந்தனர். 20 பேர் படுகாயமடைந்தனர். இந்த வெடிப்புக்கு காரணம் இன்னும் அறியப்படவில்லை.



இதனிடையே போராளிகள், யூப்ரடீஸ் நதியில் அமைந்துள்ள சிரியாவின் மிகப்பெரிய ராகா ஹைட்ரோ எலக்ட்ரிக் அணையை கைப்பற்றியுள்ளனர். இது அதிபருக்கு ஏற்பட்டுள்ள மிகப் பெரிய பின்னடைவு என்று சொலலப்படுகிறது.

# 'லைப் ஆப் பை' படத்துக்கு பிரிட்டிஷ் அகடமி விருது

(லண்டன்)

இந்தியக் கதையை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்ட, "லைப் ஆப் பை" திரைப்படத்துக்கு, பிரிட்டிஷ் அகடமி விருது கிடைத்துள்ளது.பிரிட்டனில், சிறந்த திரைப் படங்கள் மற்றும் கலைஞரகளுக்கு, "பாப்தா" விருதுகள் வழங்கும் விழா நேற்று முன்தினம் லண்டனில் நடைபெற்றது. "பிரிட்டிஷ் அகடமி ஆப் பிலிம் அண்ட் டெலிவிஷன் ஆர்ட்ஸ்" என்ற பெயரில் வழங்கப்படும் இந்த விருது, அமெரிக்காவில் வழங்கப்படும், "ஆஸ்கர்" விருதுக்கு இணையாக கருதப்படுகிறது.இந்த நிகழ்ச்சியில், ஹாலிவுட் படமான, "அர்கோ" சிறந்த திரைப்படமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இந்த படத்தின் கதாநாயகனாக நடித்து, படத்தை இயக்கியுள்ள பென் அப்லெக், சிறந்த இயக்குனர் விருதை வென்றுள்ளார். மேலும் சிறந்த படத்தொகுப்புக்கான விருதையும் வென்றுள்ள இத்திரைப்படம், ஈரான் நாட்டில், பிணைக் கைதிகளாக இருந்த அமெரிக்கர்கள் மீட்கப்பட்ட சம்பவத்தை, அடிப்படையாக கொண்டது.சிறந்த நடிகர் விருது, "லிங்கன்" படத்தில் நடித்த, டேனியல் டே லூயிசுக்கு வழங்கப்பட்டது.

சிறந்த நடிகை விருதை "ஆமர்" படத்தில் நடித்த, 85 வயது பிரெஞ்சு நடிகை இமானுல்லே ரிவா வென்றுள்ளார். "லைப் ஆப் பை" படத்துக்கு, சிறந்த ஒளிப்பதிவுக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.பத்துக்கும் மேற்பட்ட பிரிவுகளில் போட்டியிட்ட, ஸ்டீபன் ஸ்பீல்பெர்க் இயக்கியுள்ள, "லிங்கன்" படத்துக்கு ஒரு விருது கிடைத்துள்ளது.ஆஸ்கர் விருது வழங்கும் விழா எதிர்வரும் 24ஆம் திகதி அமெரிக்காவில் உள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெறவுள்ளது.


# அமெரிக்கப் படைகளுக்கு அனுமதி



ஆப்கானிஸ்தானில் இருந்து பெரும் பகுதி அமெரிக்க படையினரை 2014 ஆம் ஆண்டு இறுதிக்குள் விலக்கிக்கொள்ள அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இதற்கான பணிகள் தற்போது தொடங்கியுள்ளன. முதல்க் கட்டமாக படைக் கருவிகள் 50 பெரிய கண்டெய்னர்களில் அடைத்து அனுப்பப்பட்டு வருகின்றன.

தலா 25 கண்டெய்னர்கள் கொண்ட 2 வாகன தொகுதிகள் பாகிஸ்தானின் டார்கெம் மற்றும் சாமன் எல்லைகளைக் கடந்து வந்துள்ளன. இவை கராச்சி வழியாக கப்பலில் ஏற்றி அமெரிக்காவுக்கு அனுப்பப்படும். கராச்சி சுங்கத் துறையினர் அவற்றை அனுப்ப அனுமதி வழங்கியுள்ளனர்.

# அரிய பொக்கிஷம் ஏலத்தில்



(லண்டன்)

இங்கிலாந்து அதிகாரிகளுக்கு மகாத்மா காந்தி எழுதிய கடிதம் ஏலத்துக்கு வருகிறது. இங்கிலாந்து ஆதிக்கத்தை எதிர்த்து இந்தியாவில் சுதந்திர போராட்டம் தீவிரம் அடைந்த நேரம். வெள்ளையனே வெளியேறு இயக்கம் நடந்த போது கடந்த 1943ஆம் ஆண்டு மகாத்மா காந்தியை புனேவில் உள்ள ஆகா கான் பேலசில் இங்கிலாந்து படையினர் சிறை வைத்தனர். அப்போது, பேலசில் இருந்து இங்கிலாந்து அதிகாரிகளுக்கு காந்தி ஒரு கடிதம் எழுதி உள்ளார். டைப் செய்யப்பட்ட கடிதத்தில் காந்தி கையெழுத்திட்டு அனுப்பி உள்ளார். அதில், என்னை வீட்டு சிறையில் வைத்துள்ளதன் மூலம் அரசுக்கு அநாவசிய செலவு ஏற்படுகிறது. எனவே, என்னையும் சுதந்திர போராட்டக்காரர்களையும் சிறையில் இருந்து விடுவிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். இந்த அரிய கடிதம் எதிர்வரும் 14ஆம் திகதி ஷிரோப்ஷைர் பகுதியில் உள்ள லுட்லோவில் ஏலம் விடப்படுகிறது. இதுகுறித்து முல்லாக்ஸ் ஏல நிறுவனத்தை சேர்ந்த ரிச்சர்ட் வெஸ்ட்வுட் கூறுகையில், இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது காந்தியுடன் நெருக்கமாக இருந்த சுதந்திரப்போராட்ட வீரர் ஒருவர் இந்த கடிதத்தை விற்றுவிட்டார். அந்த கடிதம்தான் இப்போது ஏலம் விடப்படுகிறது என்றார்.



எகிப்து தலைநகர் கெய்ரோவில், அராப் லீக் பொதுச் செயலாளர் நபில் அல் அராபி,ஐ.நா.அராப் லீக்கிற்காக சிரிய தூதர் லக்தர் பிரஹிமியை சந்தித்து கலந்துரையாடுவதைக் காணலாம்.

# கொலை மிரட்டல் விடுத்த 12 வயது சிறுவன் கைது

ஆசிரியர் மற்றும் சக மாணவரை துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப் போவதாக, மின் அஞ்சல் மூலம் மிரட்டல் விடுத்த 12 வயது சிறுவனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கலிபோர்னியா மாகாணம், போவே பகுதியைச் சேர்ந்த டுவின் பீக்ஸ் நடுநிலைப் பள்ளிக்கு மின் அஞ்சல் மிரட்டல் வந்தது. அதில், திங்கட்கிழமை காலை, 23 மாணவர்கள் மற்றும் ஒரு ஆசிரியரை சுட்டுக் கொல்லப்போவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இது குறித்து பள்ளி நிர்வாகத்தினர் பொலிஸில் புகார் செய்தனர். சான்டியாகோ பொலிஸார், தொழில்நுட்ப வல்லுனர்கள் உதவியுடன் மின் அஞ்சல் எங்கிருந்து அனுப்பப்பட்டது என்பதைக் கண்டறிந்தனர்.

அந்த மின் அஞ்சல் அனுப்பியது அதே பள்ளியில் 7ஆம் வகுப்பு படிக்கும் 12 வயது மாணவன் எனத் தெரியவந்தது. அவனது வீட்டைச் சோதனையிட்ட போது, ஏராளமான துப்பாக்கிகளும், 3,000 தோட்டாக்களும் கணனிகளும் கைப்பற்றப்பட்டன.

# கல்வித்துறை வளர்ச்சியில் சந்திரகுமார் எம்.பி.தீவிர அக்கறை

## தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர்



எமது பிரதேசங்களில் வீழ்ச்சிகண்டுள்ள கல்வித்துறையினை வளர்ச்சி நிலைக்கு கொண்டு செல்வதற்காக மிகத் தீவிரமாக தனது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்றவர் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் என தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். தென்மராட்சி கச்சாய் அ.த.க. பாடசாலையில் இடம்பெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கல்வித்துறை அதிகாரிகளைவிட எமது பிரதேசங்களின் கல்வித்துறையின் தகவல்களை நுணி விரலில் வைத்திருக்கின்ற ஒருவராக அவரை நான் பார்த்திருக்கிறேன். குறிப்பாக கிளிநொச்சியின் கல்வித்துறையின் அனைத்து நிலைமைகளையும் அவர் நன்கு புள்ளி விபரங்களோடு மனதில் வைத்திருக்கின்றார். அதாவது பாடசாலைகளின் நிலைமைகள், வளப் பற்றாக்குறைகள், ஆசிரியர்களின் நிலைமைகள் மற்றும் இதர தேவைகள் என எல்லாவற்றையும் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரிடம் அறிந்து கொள்ளலாம் அதனைவிட தனிப்பட்ட ரீதியில் கிளிநொச்சி வலய ஆசிரியர்கள் பற்றியும் அவர் தெரிந்து வைத்திருக்கின்றார். எனவே இப்படிப்பட்ட ஒருவர் எம்மத்தியில் இருக்கின்றமையால் எமது பிரதேசத்தின் கல்வித்துறையின் வளர்ச்சி நாம் அனைவரும் எதிர்பார்க்கின்றமையைவிட மிக வேகமாக முன்னோக்கிச் செல்லும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார்.

எமது வடமாகாணத்தில் கல்வித்துறையில் சரியான முறையில் வளப்பங்கீடுகள் இனமையே இன்றும் கல்வித்துறையினை நாம் எதிர்பார்க்கும் நிலைக்குகொண்டு செல்லமுடியாதுள்ளது. கச்சாய் பாடசாலையின் வளப்பற்றாக்குறைகள் கவனத்தில் எடுக்கப்பட்டு தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் அதேவேளை கச்சாய் பாடசாலைக்கு தமிழ் இன்னியம் அணி ஒன்றினை உருவாக்குவதற்கு தனது பன்முகப் படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிருந்து ஒரு இலட்சத்து ஐம்தாயிரம் ரூபாவினை ஒதுக்கீடு செய்வதாகவும் குறிப்பிட்டார். பாடசாலை அதிபர் உதயகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அயற் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரகள் பழைய மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

### பொதுநலவாய...

விரிவாகக் கலந்துரையாடினார். இதன்போதே பொதுநலவாய மாநாடு கொழும்பில் நடாத்துவது என்ற முடிவை உறுதிசெய்யப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### சரவணபவன்...

யாழ். பொதுமக்கள் தொடர்பு காரியாலயத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். தினக்குரல் பத்திரிகை விநியோகஸ்தர் மீதான தாக்குதலுக்கு ஹத்துருசிங்க பொறுப்பேற்க வேண்டுமென்று நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபன் தெரிவித்த கருத்தொன்று உதயன் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் நடைபெறுகின்ற குற்றங்கள் அனைத்திற்கும் இராணுவத்தின் மீது பழி சுமத்தவேண்டாம். சட்டத்தினையும், ஒழுங்கையும், சீர்குலையாமல் பாதுகாப்பதே எனது கடமை. அவற்றினை தான் நான் செய்து கொண்டிருக்கின்றேன். உண்மைகளை மட்டும் பத்திரிகையில் பிரசுரியுங்கள். அவற்றினை விட்டு தவறான தகவல்களை பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டாம். யாழ். மாவட்டத்தில் எத்தனையோ பாலியல் சம்பவங்கள் நடைபெறுகின்றன. எத்தனை பெண்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள் என்பதை வெளியிடுங்கள், சமூகத்தினை மேம்படுத்துவதற்கான செய்திகளை பிரசுரியுங்கள். இராணுவத்தினரைப் பற்றி தவறான செய்திகளை வெளியிட வேண்டாம். இவ்வாறு வெளியிடும் பத்திரிகை நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### முழங்காவில்...

மின்சாரம் 57 இலட்சம் ரூபா செலவில் மின்விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் மூலம் முழங்காவில் பிரதேசத்திற்கு முதல் முறையாக மின்சாரம் கிடைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சிப் பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கார்த்திகேயன் தலைமையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் விவசாய அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தன, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் பிரதித் தூதுவர் வில்லியம் வெயின் ஸ்ரெயின், கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் மக்கள் தொடர்பு அதிகாரி தவநாதன், அமெரிக்க ப்சுபிக் பிராந்திய கட்டளைப் பணியகத்தைச் சேர்ந்த லெப்.கேணல் ஸ்சுலெர், லெப்.கேணல் கிலெண்டா, கப்டன் றிச்சட், கப்டன் ஸ்டீபன் மற்றும் மருத்துவர்கள், வைத்தியசாலைப் பணியாளர், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போது இருளில்லாத இலங்கையை உருவாக்குவதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் இலக்காகும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். கிளிநொச்சி, பூநகரி பிரதேசத்திலுள்ள முழங்காவில் பகுதிக்கு நேற்றுக் காலை முதற்தடவையாக மின் விநியோகம் வழங்கப்பட்டது. இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரின் ஏற்பாட்டின் பேரில் மேற்கொள்ளப்பட்ட இந்த மின் விநியோகத்திட்டம் நேற்று மக்களுக்காக ஆரம்பித்து வைக்கப்படுகின்றது. இது இந்த அரசாங்கத்தின் பாரபட்சமற்ற முறையில் எல்லா இடத்துக்கும் விரைவான அபிவிருத்தியும் முன்னேறமும் ஏற்படுத்தும் திட்டத்தின் நடவடிக்கைக்கு சான்றாகும்.

மன்னார் - யாழ்ப்பாணம் வீதியில் கேந்திர முக்கியத்துவம் மிக்க விவசாய பிரதேசமான முழுங்காவில் பிரதேசத்துக்கு இந்த மின்சார விநியோகம் பல நன்மைகளை தரவுள்ளது. பின் தங்கிய பிரததேசமாக கணிப்பிடப்பட்ட முழங்காவில் தற்போது பிரதான வீதியினாலும் மின்னிணைப்பின் மூலமும் விரைவான அபிவிருத்தியில் இணைக்கப்பட்டு அபிவிருத்தியடைந்த பிரதேசமாக மாறியுள்ளது என்றார். (29)

# அரசுடன் இணைவாரா ஐ.தே.கட்சியின் எம்.பி.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரொருவர் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்துகொள்ளவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

அக்கட்சியின் சார்பில் வடக்கை பிரநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே அரசாங்கத்துடன் இணைந்துகொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பங்கேற்கும் நிகழ்வில், அவர் மிக ஆர்வத்துடன் கலந்துகொண்டதாகவும் தெரியவருகின்றது.

# அடுத்த பாப்பரசர் யார்?

பாப்பரசர் 16 ஆம் ஆசிர்வாதப்பரின் வெற்றிடத்துக்கு இலங்கையின் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை போட்டியிடலாம் என தெரிவிக்கப்படுகின்றது. பாப்பரசர் 16 ஆம் ஆசிர்வாதப்பர் எதிர்வரும் 28 ஆம் திகதி பதவி விலகவுள்ளதாக வத்திக்கான் அறிவித்துள்ளது. 85 வயதுடைய அவர் உடல்நிலையைக் கருத்தில் கொண்டே இம்முடிவை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில் அவரின் வெற்றிடத்துக்கு கருதினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை போட்டியிடலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

# அதிகரிக்காது பஸ் கட்டணம்

2012 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்துள்ளபோதிலும், பஸ் கட்டணம் அதிகரிக்கப் படமாட்டாதென தேசிய போக்குவரத்து ஆணையகம் நேற்று தெரிவித்துள்ளது. தனியார் போக்குவரத்துச் சேவை அமைச்சர் சி.பி.ரத்நாயக்கவுடன் நடைபெற்ற பல சுற்றுப் கலந்துரையாடல்களைத் தொடர்ந்தே தேசிய போக்குவரத்து ஆணையகம் இத்தீர்மானத்திற்கு வந்துள்ளது.

### அதிநவீன...

வைத்தார். இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

### எந்த தடைகள்...

ஜனாதியிடம் தெரிவித்தார். இதற்குச் சற்றும் தாமதிக்கா மல் எந்தத் தடைகள் வந்தாலும் அவை அனைத்தையும் உடைத்துக் கொண்டு யாழ்தேவி காங்கேசன்துறை வரை பயணிக்கும் என்று ஜனாதிபதி கூறியபோது மாநாட்டு மண்டபத்தில் பலத்த கரகோஷ ஒலி எழுந்தது.

### உங்கள்...

எங்கள் பிள்ளைகள் அரச விரோத செயல்களில் ஈடுபடமாட்டார்கள். சட்டவிரோதமாக எதையும் செய்யாமல் நாம் அவர்களைக் கண்காணிப்போம். நாங்கள் அரசுக்கு ஆதரவாக செயற்படுவோம் என்று பெற்றோர் உணர்ச்சிபொங்க ஜனாதிபதியிடம் நன்றி தெரிவித்தனர்.

இதனைக் கேட்ட ஜனாதிபதி, நீங்கள் அரசுக்கு ஆதரவாக செயற்பட வேண்டும் என்று நான எதிர்பார்க்கவில்லை. நீங்கள் உங்கள் பிள்ளைகளை கல்வியில கவனம் செலுத்தச் சொன்னால் போதும் என்று தெரிவித்தார். அப்போது மீண்டும் கரகோஷ ஒலி கிளம்பியது.

தொடர்ந்து யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்துத் துறைசார்ந்த ரீதியில் நுணுக்கமாகவும் மிக விரைவாகவும் ஆராயப்பட்டது. இத்திட்டங்களின தற்போதைய முன்னேற்ற அறிக்கைகளைத் துறைசார்ந்த அதிகாரிகள் சமர்ப்பித்து விளக்கமளித்தனர்.

இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் உள்ள தடைகள், தாமதங்களை அகற்றுவது குறித்தும் அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

காலை 11.00 மணியளவில் ஆரம்பமான இக்கூட்டத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வரவேற்புரை நிகழ்த்தினார். யாழ். அரச அதிபர் அபிவிருத்தித் திட்டங்களின் விபரத்தை வெளியிட்டார். அபிவிருத்தி மற்றும் பொருளாதார, உற்பத்திகளின் வளர்ச்சி பற்றியும் தேவைகள் பற்றியும் சபையினருக்கு விளக்கம் அளிகக்ப்பட்டது. தொடர்ந்து திணைக்களத் தலைவர்கள் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்களின் உதவியுடன் மாவட்டத்தில் உள்ள அபிவிருத்தித் திட்டங்களின் குறைகள், தேவைகள் பற்றி அறிந்து கொண்டதோடு சிலவற்றுக்கு நிதி உதவியளிக்கவும் ஜனாதிபதி சம்மதம் தெரிவித்தார்.

இவ்விசேட கூட்டத்தில் அமைச்சர்கள், பசில் ராஜபக்ஷ, ராஜித சேனாரத்ன, எஸ்.பி.திஸ்ஸநாயக்கா, திஸ்ஸகரலியத்த, அமைச்சுக்களின் செயலாளர்கள், பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர்களான, சில்வேஸ்திரி அலன்ரின், சந்திரகுமார், விஜயகலா மகேஸ்வரன், விநாயகமூர்த்தி, மாநகர மேயர் மற்றும் திணைக்கள தலைவர்கள், அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். அபிவிருத்திக்கூட்டம் நிறைவடைந்த நிலையில் ஜனாதிபதி நயினா தீவுக்குப் பயணமானார்.(இ)

# கடலில் பாய்ந்தது பயணிகள் பேருந்து



(யாழ்ப்பாணம்)

போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று விபத்துக்குள்ளாகி பண்ணைக் கடலினுள் பாய்ந்ததில் பெண் பொலிஸார் உட்பட 5 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று மாலை 5.00 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறைக்குச் சென்ற பேருந்தே விபத்துக்குள்ளாகியுள்ளது. 40 இற்கும் மேற்பட்ட பயணிகளுடன் சென்ற பேருந்து பண்ணைப் பாலத்தைக் கடந்து இறக்கமான பகுதியில் சென்ற வேளையிலேயே இவ்விபரீதம் நிகழ்ந்துள்ளது. இதில் தெகியத்த கண்டியவில் இருந்து கடமையின் நிமிர்த்தம் சென்ற பிரியாணி தமிக்கா (வயது-27) என்ற பெண் பொலிஸாரும், சூவணையைச் சேர்ந்த பரமலிங்கம் துவாரகா (வயது-26), கரம்பன் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த பிரேமானந்தன் சாந்தன் (வயது-31), ஊர்காவற்றுறை வைத்திய சாலை ஊழியர், யாழ்ப்பாணம் நாவலர் வீதியைச் சேர்ந்த கோபாலு கணேசலிங்கம் (வயது-40), கலாசாலை வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த சுப்பிரமணியம் பரமநாதன் (வயது-50) என்ற இப்பேருந்தின் நடத்துநரும் இவ் விபத்தில் காயமடைந்து போதனா வைத்திய சாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர். (இ,05,25)

## மூன்று பிள்ளைகளின் தாய் தூக்கில் தொங்கி சடலமாக மீட்பு

கரவெட்டியில் மூன்று பிள்ளைகளின் தாயொருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக நேற்று மாலை 5.30 மணிக்கு மீட்கப்பட்டுள்ளார்.

சரஸ்வதி வித்தியாலய வீதியைச் சேர்ந்த மதிமோகன் ராகினி (வயது-36) என்பவரே வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் உறவினர்களால் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் மந்திகை வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மரணவிசாரணைகள் நடைபெறுவதுடன், பொலிஸார் மரணம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (116)

## ஆசியாவை சமாதான வலயமாக்குவதே இலங்கையின் நோக்கமாகும்

### இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர்

(கொழும்பு)

சீனாவை ஆசியாவின் போட்டி நர்டாகக் கருதக் கூடாது என இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஆசிய பிராந்தியத்தை சமாதான வலயமாக உருவாக்குவதே இலங்கையின் நோக்கம். இந்து சமுத்திரத்தின் தந்திரோபாய சமநிலையை பாதிக்காத வகையில் சீனா உள்ளிட்ட நாடுகளுடன் இலங்கை உறவுகளைப் பேணி வருகின்றது. சீனா வேகமாக அபிவிருத்தி அடைந்து வருகின்றது. மேற்குலக நாடுகளின் பொருளாதாரங்களுடன் போட்டியிட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆசியா, சீனாவின் வளங்களை எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்பது பற்றி சிந்திக்க வேண்டுமே தவிர, போட்டியாளராகக் கருதக்கூடாது என அவர் தெரிவித்துள்ளார். சீனாவுடன் மிக நெருங்கிய பொருளாதார உறவுகளைப் பேணி வருகின்றது. இலங்கையின் சீன முதலீடுகளை இலங்கையும், இந்தியாவும் வரவேற்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெறும் எண்ணம் இல்லை

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து புதிதாகக் கடன் பெற்றுக்கொள்வதில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது. கடன் பெற்றுக்கொள்வது தொடர்பில் இலங்கை அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்திற்கு சில நிபந்தனைகளை விதித்துள்ளது. எனினும், இந்த நிபந்தனைகளை சர்வதேச நாணய நிதியம் ஏற்றுக்கொள்ளத் தவறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெற்றுக் கொள்ளப் போவதில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது. அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்ட கொள்கைகளுக்கு அமைவாகக் காணப்பட்டால் மட்டுமே சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்றுக்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதேவேளை, சர்வதேச முதலீட்டுச் சந்தையில் கொடுக்கல் வாங்கல் செய்யக் கூடிய அளவிற்கு இலங்கையில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.


### அச்சு இயந்திர இயக்குநர்கள் தேவை

S.O.R.D., K.O.R.D இயந்திரங்கள் இயக்கக்கூடிய முன் அனுபவமுள்ளவர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர் எதிர் வரும் 17ஆம் திகதி காலை பத்து மணிக்கு தினமுரசு அலுவலகத்திற்கு நேரில் சமுகம் தரவும். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

ஆளணி முகாமையாளர்
'தினமுரசு'
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.


# நயினாதீவில் ஜனாதிபதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுமாலை 4.30 மணிக்கு நயினாதீவிற்குச் சென்று நயினாதீவு நாகவிகாரை இறங்குதுறையை திறந்துவைத்துள்ளார்.

நாகவிகாரைக்கும் சென்று வழிபாடுகளில் ஈடுபட்ட ஜனாதிபதி நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கும் சென்று சிறப்பு வழிபாடுகளில் ஈடுபட்டார்.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய அறங்காவலர் சபைத தலைவர் ஆ.தியாகராசா ஜனாதிபதிக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு அறங்காவலர் சபைச் செயலாளர் மோகனரூபன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.



தொடர்ந்து நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயில் இறங்குதுறையைப் புனரமைக்குமாறு கோரிக்கை அடங்கிய மகஜர் ஜனாதிபதியிடம் அறங்காவலர் சபையால் கையளிக்கப்பட்டது.

இதேவேளை வேலணைப் பிரதேசசபை உறுப்பினர் கருணாகரமூர்த்தி வீதிப்புனரமைப்புக்கள் மற்றும் பல்வேறு அபிவிருத்திப் பணிகளின் கோரிக்கை அடங்கிய மகஜரை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார். (175)


NALIN Information Technologies Pvt Ltd.

NALIN IT இன் விசேட விலைக்குறைப்பு

DUAL CORE DESKTOP ASSEMBLED PC
intel Dual Core 2.9 processor
M/Board intel 61
2GB DDR3 Ram
500GB SATA Hard Drive
Liteon DVD-Rw
HP 19" LED Monitor
Powerlogic Casing
Kery Board & Optical Mouse
Speaker Icon Ic-128
48,800/=

CORE I3 DESKTOP ASSEMBLED PC
Intel I3 3.3Ghz processor
M/Board intel 61
2GB DDR3 Ram
500GB SATA Hard Drive
Liteon DVD-Rw
HP 19" LED Monitor
Powerlogic Casing
Kery Board & Optical Mouse
Speaker Icon Ic-128
58,500/=

LAPTOPS
HP 1000 --- 56,000/=
DELL I3 --- 67,000/=
DELL I5 --- 79,500/=
DELL I7 --- 109,500/=
Bag,mouse, headphone free with laptops

650W SQUTE UPS FREE WITH SYSTEMS

CORE I5 DESKTOP ASSEMBLED PC
Intel i5 3.2 GHZ processor
M/Board intel 61
2GB DDR3 Ram
500GB SATA Hard Drive
Liteon DVD-Rw
HP 19" LED Monitor
Powerlogic Casing
Kery Board & Optical Mouse
Speaker Icon Ic-128
70,500/=

CORE I7 DESKTOP ASSEMBLED PC
Intel I7 3.4 GHZ processor
M/Board intel 61
2GB DDR3 Ram
500GB SATA Hard Drive
Liteon DVD-Rw
HP 19" LED Monitor
Powerlogic Casing
Kery Board & Optical Mouse
Speaker Icon Ic-128
85,500/-

Hp branded system
i3 333o
from Rs.72,000/=

8GB FLASH - 1,000/=
16GB FLASH - 1,900/=
32GB FLASH - 4,000/=
DDR3 2GB RAM - 2,200/=
DDR3 4GB RAM - 3,600/=
MULTI DONGLE - FROM 3,200 TO 5,500/=

(C/1790)

NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD www.fb/nalinit.com
195/2, Parameswara Junction, Jaffna. T.P: 0212221121 / 0777667975


## யாழ்.நகரில் தீ; வர்த்தக நிலையம் நாசம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையமொன்றில் ஏற்பட்ட தீ விபத்து யாழ்.மாநகர சபையின் தீயணைப்பு பிரிவின் தீவிர செயற்பாடு காரணமாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள தில்லையம்பதிஸ் என்ற இயந்திர மற்றும் அது சார்ந்த உபகரணத் தொகுதிகள் அடங்கிய விற்பனை நிலையத்தில் நேற்றைய தினம் இத் தீ விபத்து ஏற்பட்டது.

இதன்போது அங்கிருந்த பல்வேறு உபகரணத்தொகுதிகள் தீயிலெரிந்து கொண்டிருந்தவேளை, தகவல் அறிந்த மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் உடனடியாக அப்பகுதிக்கு விரைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

மேற்படி சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 பெப்ரவரி 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.